விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

சங்கு 16 வள்ளுவர் ஆண்டு 2046 தை 18 ஞாயிற்றுக்கிழமை (01.02.2015) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 044

ரா
ம்
கோ
THE RAMCO CEMENTS LIMITED
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்,உலகதர 14001, 9001 சான்றிதழ் பெற்றுள்ள ஒரே சீமெந்து ராம்கோ

இன்று உங்கள் வலம்புரி
இணைப்பிதழுடன் வெளிவருகின்றது
Special Magazine
வலம்புரி ADZ
இலவச கல்வி சிறப்பிதழை பெற்றுக்கொள்ள தவறாதீர்கள்
உங்கள் பிரதிகளுக்கு அருகிலுள்ள வலம்புரி பத்திரிகை முகவரை நாடுங்கள்

# அதிகாரப் பகிர்வு அவசியமானது



## வலியுறுத்துகிறது கனடா

(ஒட்டவா)

இலங்கையில் புதிய ஆட்சிமாற்றம் உருவாகியுள்ள நிலையில் அங்கு அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும் என கனடா வலியுறுத்தியுள்ளது.

23 ஆம் பக்கம் பார்க்க...

## நிஷா தேசாய் இலங்கை விஜயம்



(கொழும்பு)

தெற்கு மற்றும் மத்திய ஆசியப் பிராந்தியத்துக்கான அமெரிக்காவின் உதவி இராஜாங்கச் செயலாளர் நிஷா தேசாய் பிஸ்வால் நாளை திங்கட்கிழமை இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளார்.

இலங்கையில் மூன்று நாள் பய

23 ஆம் பக்கம் பார்க்க...

## கடமை ஏற்கிறார் வடக்கு ஆளுநர்

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணத்தின் புதிய ஆளுநராக நியமிக்கப்பட்டுள்ள நாட்டின் வெளியுறவுத்துறையின் முன்னாள் செயலர் பலிஹக்கார நாளைய தினம் உத்தியோகபூர்வமாக தனது கடமைகளினை பொறுப்பேற்கவுள்ளார்.

23 ஆம் பக்கம் பார்க்க...

## நாமல் பயன்படுத்திய அதி நவீன பஸ் மீட்பு



(கொழும்பு)

இலங்கையில் நடத்தப்பட்ட பொதுநலவாய உச்சி மாநாட்டிற்கான குத்தகைக்கு எடுக்கப்பட்டுள்ள இரண்டு

24 ஆம் பக்கம் பார்க்க...

## ஏப்ரல் மாதம் 23ஆம் திகதி பாராளுமன்றம் கலைப்பு

### பிரதமர் ரணில் அறிவிப்பு



(கொழும்பு)

ஏப்ரல் மாதம் 23-ம் திகதி பாராளுமன்றம் கலைக்கப்பட உள்ளதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அறிவித்துள்ளார்.

கண்டியில் நடைபெற்ற ஐக்கிய

23 ஆம் பக்கம் பார்க்க...

## கொக்குவில் கிணறுகளிலும் கழிவு எண்ணெய்க் கசிவு

கொக்குவில் பகுதியில் உள்ள கிணறுகளிலும் கழிவு எண்ணெய்க் கசிவு ஏற்பட்டுள்ளது. இதனால் அப்பகுதி மக்கள் அதிர்ச்சியடைந்துள்ளனர்.

சுன்னாகம் பகுதியில் உள்ள கிணறுகளில் கழிவு எண்ணெய்க் கசிவு ஏற்பட்டதால் அப்பகுதி மக்கள் தண்ணீர் பிரச்சினையை எதிர்நோக்கியுள்ளனர்.

இந்நிலையில் கொக்குவில் பகுதியில் உள்ள கிணறுகளிலும் எண்ணெய்க் கசிவு ஏற்பட்டுள்ளது.

நேற்றைய தினம் கொக்குவில் கோயில் வீதியில் உள்ள சில வீட்டுக் கிணறுகளில் கழிவு ஒயில் கசிவு ஏற்பட்டுள்ளமை இனங்காணப்பட்டுள்ளது. (ந)

## தனியார் பேருந்து மோதி சிதறியது முச்சக்கரவண்டி

### தென்பகுதியை சேர்ந்த இருவர் மரணம்



(யாழ்ப்பாணம்)

தனியார் போக்குவரத்து பேருந்தும் முச்சக்கர வண்டியும் விபத்துக்குள்ளானதில் தென்பகுதியைச் சேர்ந்த இருவர் உயிரிழந்துள்ளனர்.

23 ஆம் பக்கம் பார்க்க...

## போரின் மாசடைவுகளை கணக்கிலிட முடியாது

### இன்னும் 30 வருடங்கள் பாதிக்கும் - விக்கி

(யாழ்ப்பாணம்)

வடக்கில் போரினால் ஏற்பட்ட மாசடைவுகளைக் கணக்கிலிட முடியாது, இன்னும் முப்பது வருடங்களுக்கு அதன் தாக்கத்தைத் தெரிவித்தே தீரும என வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

வடமாகாண மத்திய சுற்றாடல் அதிகார சபையின் ஏற்பாட்டில் யாழ். மாவட்ட சுற்றாடல்முன்னோடி பாசறை வட்டுக்கோட்டை தொழிநுட்ப கல்லூரியில் நேற்று சனிக்கிழமை நடைபெற்றது.

இதில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

வடக்கு முதலமைச்சா மேலும் கூறியதாவது,

எமது இளைஞர், யுவதிகள்ஒன்றை மட்டும் மிக முக்கியமாக மனதில் வைத்திருக்க வேண்டும். அதாவது இந்த சுற்றாடல் மாசடைதலானது

23 ஆம் பக்கம் பார்க்க...

## 2014-ல் 234 பேருக்கு எயிட்ஸ் தாக்கம்

(கொழும்பு)

கடந்த 2014 ஆம் ஆண்டில் நாட்டில் எச்.ஐ.வி.மற்றும் எயிட்ஸ் தொற்றுக்கு உள்ளான 235 பேர் இனங்காணப்பட்டதாக பாலியல் நோய்கள் மற்றும் எயிட்ஸ் தடுப்பு தொடர்பான தேசிய நிகழ்ச்சித் திட்டத்தின் பணிப்பாளர் மருத்துவர் சிசிர லியனகே தெரிவித்தார்.

இவ்வாறு இனங்காணப்பட்டவர்களின் பெரும்பாலானவர்கள் மேல்

23 ஆம் பக்கம் பார்க்க...

## கமலேஷ் சர்மா இலங்கை வருகை

(கொழும்பு)

மூன்று நாள் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு பொதுநலவாய அமைப்பின் செயலாளர் நாயகம் கமலேஷ்சர்மா கொழும்பு வருகை தந்துள்ளார்.

கமலேஷ் ஷர்மாவுடன் மேலும் நான்கு உத்தியோகத்தர்களும் வருகைதந்துள்ளதாக கட்டுநாயக்க விமான நிலையத்தின் கடமைநேர முகாமையாளர் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கான விஜயத்தில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை, கமலேஷ் ஷர்மா சந்திக்க உள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர ஆகியோரைச் சந்திப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நாட்டில் தற்போது முன்னெடுக்கப்படுகின்ற

23 ஆம் பக்கம் பார்க்க...



காரைநகர் மணற்காடு
முத்துமாரி அம்மன் ஆலயம்
கும்பாபிஷேகப் பெருவிழா
02.02.2015 திங்கள் மு.ப. 9.36 - 10.45
எண்ணெய்க் காப்பு : 31.01.2015
சனி காலை 8.00 மணி முதல்
01.02.2015 ஞாயிறு மாலை 03.00 மணி வரை
ஆலய திருப்பணிச் சபையினர்
(சி-9978)




SMGUA32H5100
6000ரூபா பண்டமாற்று விலைக்கழிவு
ரூபா69,999




DELL-NB-I3
வட்டியின்றிய கொடுப்பனவு
ரூபா83,299

SISIL WORLD
உலகமே திரும்பிப் பார்க்கும் எங்கள் இடம்

| | | | |
|---|---|---|---|
| இல-106<br>கே.கே.எஸ், வீதி,<br>யாழ்ப்பாணம்.<br>தொ.பே:-021 221 9291 | இல-125<br>கே.கே.எஸ், வீதி,<br>சுன்னாகம்.<br>தொ.பே:-0212242335 | இல-17/3<br>கண்டி வீதி,<br>கிளிநொச்சி.<br>தொ.பே:-0212283755 | இல-149<br>கண்டி வீதி,<br>வவுனியா.<br>தொ.பே:-0778561406 |



SHT-1691P
2000ரூபா விலைக்கழிவு
ரூபா19,299



SL-ECO72
இலவசம் STAND FAN
ரூபா41,999



SL-SWMFR72
10000ரூபா பண்டமாற்று விலைக்கழிவு
ரூபா43,999

(சி-9979)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# யாழ்.பல்கலை பேரவை உறுப்பினர்களை பதவி விலகுமாறு கோரி ஆர்ப்பாட்டம்

## பல்கலை ஊழியர் சங்கம் ஏற்பாடு




(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழகத்தில் கடந்த காலங்களில் இடம்பெற்ற முறைகேடுகள் தொடர்பில் நீதியான விசாரணை நடத்தக் கோரியும் பேரவை உறுப்பினர்களை பதவிவிலகுமாறு கோரியும் யாழ்.பல்கலைக்கழக ஊழியர் சங்கத்தினர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

நேற்று காலை 9 மணியளவில் யாழ்.பல்கலைக்கழகம் முன்பாக நடைபெற்ற இவ் ஆர்ப்பாட்டத்திற்கு ஆசிரியர் சங்கம், மாணவர் ஒன்றியம் ஆதரவளித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

யாழ்.பல்கலைக்கழகத்தில் கடந்த காலங்களில் இடம்பெற்ற ஊழல்கள் முறைகேடுகள் தொடர்பில் நீதியான விசாரணை மேற்கொள்ளப்பட வேண்டும்.

வடக்கின் மிகப் பெரும் நிறுவனமாகவுள்ள யாழ்.பல்கலையில் அரசியல் தலையீடுகள் நிறுத்தப்பட்டு புத்திமான்களிற்கு சந்தர்ப்பம் வழங்கப்படவேண்டும்.

அரசியல் கட்சிகளினால் நியமிக்கப்பட்ட தகுதியற்ற பேரவை உறுப்பினர்களினை பதவி விலக்கி புத்திஜீவிகளை நியமித்து பல்கலையை திறம்பட இயங்க வழியேற்படுத்தவேண்டும்.

பல்கலையில் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற முறையற்ற நியமனங்களை நிறுத்தி தகுதியானவர்களினை நியமிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

எனப் பல கோரிக்கைகளினை முன்வைத்தே ஊழியர் சங்கத்தினர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டிருந்தவர்கள்,


பல்கலையில் முறையற்ற நியமனங்களினை நிறுத்து, கடந்த கால சம்பவங்கள் தொடர்பில் பக்கச்சார்பற்ற விசாரணைகள் வேண்டும், வெளிவாரி பேரவை உறுப்பினர்களே வெளியேறுங்கள் போன்ற பல வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளினை ஏந்திருந்தனர்.

தமது கோரிக்கைகளினை புதிய அரசாங்கம் பரிசீலித்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தவர்கள் தெரிவித்தனர்.

மக்களினால் தேர்தலில் தோற்கடிக்கப்பட்டவர்கள் பல்கலைக்கழக பேரவை உறுப்பினர்களாக இருந்தால் எவ்வாறு யாழ்.பல்கலைக்கழகம் மக்களிற்கு முன்னுதாரணமாக செயற்பட முடியும் என யாழ்.பல்கலைக்கழக ஆசியர் சங்கம் தெரிவித்துள்ளது.

மேலும் எமது கோரிக்கைகள் குறுகிய காலத்திற்குள் பரிசீலிக்கப்பட்டு தீர்வு தரப்படாவிட்டால் மாணவர் போராட்டம் வெடிக்குமென பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் எச்சரித்துள்ளது. (செ-4)

# பணி நீக்கம் தவறு-மொஹான்



பிரதம நீதியரசர் பதவியிலிருந்து பணி நீக்கப்பட்ட முறைமை பிழையானது என முன்னாள் பிரதம நீதியரசர் மொஹான் பீரிஸ் தெரிவித்துள்ளார்.

பணி நீக்கியமை தொடர்பில் வெளியிட்டுள்ள அறிக்கையில் அவர் இதனைத் தெரிவத்துள்ளார். அரசியல் அமைப்பிற்கு முரணான வகையில் நான் பணி நீக்கப்பட்டுள்ளேன். நான் இன்னமும் பிரதம நீதியரசர் பதவியிலிருந்து ஓய்வு பெறவில்லை, காரியாலயத்திலிருந்து வெளியேறவும் இல்லை.

புற அழுத்தங்கள் காரணமாக என்னை பதவியிலிருந்து சட்டவிரோதமான முறையில் நீக்கியுள்ளனர்.

உரிமைகளை விடவும் அதிகாரம் வலுவானது. இதனால் அப்பாவிகள் பாதிக்கப்படுகின்றனர். மூன்றில் இரண்டு பெரும்பான்மையினர் ஷிராணி பண்டாரநாயக்கவை பணி நீக்கியுள்ளனர். இதுவே இறுதி முடிவாகும் என மொஹான் பீரிஸ் தெரிவித்துள்ளார்.(செ-11)

# குற்றவாளிகளை பாதுகாக்க அரசு முயற்சிக்க கூடாது

## ஜாதிக ஹெல உறுமய தெரிவிப்பு

குற்றச் செயல்களில் ஈடுபட்டவர்களை பாதுகாக்க அரசாங்கம் முயற்சிக்கக் கூடாது என ஜாதிக ஹெல உறுமய கட்சி தெரிவித்துள்ளது.

கள்வர்கள், ஊழல் பேர்வழிகள் மற்றும் கொலையாளிகளை பாதுகாக்க கடந்த அரசாங்கத்தைப் போன்று இந்த அரசாங்கமும் முயற்சித்தால் அரசாங்கத்தை விட்டு வெளியேற நேரிடும் என ஜாதிக ஹெல உறுமய கட்சியின் தலைவர் ஒமல்பே சோபித தேரர் தெரிவித்துள்ளார்.

இந்த அரசாங்கம் கடந்த அரசாங்கத்தை பின்பற்றி செயற்பட்டால், நூறு நாள் திட்டம் அமுல்படுத்தப்படும் முன்னதாகவே நாம் அரசாங்கத்தை விட்டு வெளியேற நேரிடும் என அவர் குறிப்பிட்டுள்ளார். அண்மைய நாட்களில் கடந்த அரசாங்கத்தின் அமைச்சர்கள் அரசியல்வாதிகள் மற்றும் அரச அதிகாரிகளுக்கு எதிராக பல்வேறு குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளது.

எனினும், இவர்களுக்கு எதிராக எவ்வித சட்ட நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார். ஊழல் மோசடிகளில் ஈடுபடுவோர் கொலையாளிகளை பாதுகாக்க தமது கட்சி எந்த நேரத்திலும் ஒத்துழைப்பு வழங்காது.

குற்றச் செயல்களில் ஈடுபட்டவர்களுக்கு எதிராக முடிந்தளவு விரைவில் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என அவர் வலியுறுத்தியுள்ளார். குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்பட்டால் அவர்களுக்கு உரிய தண்டனையை இந்த அரசாங்கம் வழங்கும் என எதிர்பார்ப்பதாக தேரர் தெரிவித்துள்ளார். (செ-11)

**அறை வாடகைக்குண்டு**

யாழ்ப்பாணம் திருநெல்வேலி மருத்துவ பீடத்திற்கு முன் உள்ள வீட்டில் பெண்களுக்கு அறை வாடகைக்குண்டு.

**தொடர்பு:-0776141928** (9407)

**லப்டொப் தேவை**

நல்ல நிலையில் உள்ள பாவித்த லப்டொப்கள் (Laptops) தேவை

Call-0779086737

GUNAA BEST PC

52,Hospital Road, Jaffna

2 மணித்தியாலத்தில்

**கணினி திருத்தம்**

உங்கள் வீடுகளுக்கும் வந்து கணினிகள் திருத்தி தருகிறோம் அழையுங்கள்

0779086737 Computer Repair

GUNAA BEST PC 52, Hospital Road Jaffna.

**வேலை ஆட்கள் தேவை**

எமது ஸ்தாபனத்திற்கு நீர்கொழும்பில் தங்கியிருந்து வேலை செய்வதற்கு வேலை ஆட்கள் தேவை. மாத வேதனமாக ரூபா 24,000/= வழங்கப்படும். இலவச தங்குமிட வசதி உண்டு.

ஆண்கள் மட்டும்-வயது 18 தொடக்கம் 25 வரை

குறிப்பு:- திங்கட்கிழமையில் இருந்து தொடர்பு கொள்ளவும்

**தொடர்பு:-கிங்ஸ் எலக்ரோனிக்**

11-A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். T.P:-021222 3857 (9404)



JAFFNA DISTRICT THREE WHEELERS OWNER'S ASSOCIATION (Head Office)

யாழ்.மாவட்ட முச்சக்கர மோட்டார் ஊர்தி உரிமையாளர் சங்கம் (தலைமையகம்)

Reg.No:8232

40, முனீஸ்வரன் வீதி, யாழ்ப்பாணம்.

**அறிவித்தல்**

**ஓட்டோ வாடகைக் கட்டணம் குறைப்பு**
**ஓட்டோ உரிமையாளர்களுக்கும் பயணிகளுக்கும்**

தற்போது எமது நாட்டில் தேசிய ரீதியில் எரிபொருள் விலை குறைக்கப்பட்டுள்ளதால் தாங்களும் பயணிகளிடம் அறவிடும் வாடகை கட்டணத்தைக் குறைத்து அறவிடவும்.

உதாரணமாக:-தாங்கள் முன்பு 1000/- அறவிட்ட வாடகைக்கு தற்போது 900/=, 500/= அறவிட்ட வாடகைக்கு 450/= எனவும், 100/= ரூபா அறவிட்டதற்கு 90/= ரூபா எனவும் அறவிடவும்.

எரிபொருள் விலை குறைப்பையடுத்து ஏற்கெனவே சில ஓட்டோ சாரதிகள் கட்டண குறைப்பு ஏற்படுத்தி உள்ளனர். எனவே அனைவரும் இதைக் கடைப்பிடிக்கவும். 10% கழிவு ஏற்படுத்தி அறவிடவும்.

பயணிகளினதும் தங்களினதும் நலன் கருதி இவ் அறிவித்தலை வெளியிடுகின்றோம்.

நிர்வாகம்
(யாழ்.மாவட்ட முச்சக்கர மோட்டார் ஊர்தி உரிமையாளர் சங்கம்) (சீ-9990)

**தொடர்ந்தும் உங்கள் சேவையில்....**

உலகெங்குமுள்ள உறவுகளுக்கு உடனுக்குடன்

கடிதங்கள் / அன்பளிப்பு பொருட்கள் / உடுபுடவைகள் / CD, VCD க்கள் அனுப்பவும் உலகெங்குமுள்ள உறவுகளிடமிருந்து Western Union மூலம் அனுப்பிய பணத்தை ஒரு சில நிமிடங்களில் பெற்றுக் கொள்ளவும். தொலைபேசி அட்டைகளைப் பெற்றுக்கொள்ளவும்.

ஸ்ரீமுருகன் தொலைத் தொடர்பகம்
303, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
T.P. No :-021222 5392

WESTERN UNION MONEY TRANSFER

**பணி வெற்றிடம்**

பாவனைக்கு உதவாத காகிதாதிகளை தரம் பிரிப்பதற்கான பணி வெற்றிடம் உண்டு.
(பெண் ஊழியர்கள் விரும்பத்தக்கது)

**இடம்:-271, கே.கே.எஸ் றோட், யாழ்ப்பாணம்.**

தொடர்பு கொள்ள வேண்டிய தொ.இல:-
0772268486 (9405)

**NEW SCIENCE WORLD**
Navalar Road-Brown Road Junction
Web : www.physicsocean.com E-mail : info@physicsocean.com Hotline : 077 336 4055

**PHYSICS R.குகன்**

**G.C.E (A/L) 2017 MECHANICS**
திங்கள்,செவ்வாய், வியாழன், வெள்ளி
காலை 06.30 - 07.30மணி
ஆரம்பம்:- 02.02.2015 (திங்கள்) காலை 06.30மணி

**G.C.E (A/L) 2015 Day Classes BATCH II**
திங்கள் முதல் வெள்ளி வரை
மு.ப 11.45 - பி.ப 1.15மணி
Section:- வெப்பவியல், மின்புலம்

**Past Paper Classes**
திங்கள், செவ்வாய், வியாழன்
பி.ப 1.30 - பி.ப 2.30மணி
(சீ-9991)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்கானையிலும்....
Elocution Classes
(New Era Academy Examinations)
ஆரம்பம் :-03.02.2015 செவ்வாய் 9.00 am (தைப்பூசம்)
இடம்:- பல்நோக்கு மண்டபம் (வைரவர் கோவில் அருகில்) மாவடி ஆலை வீதி சங்கானை
மற்றும் ஏனைய நிலையங்கள் மானிப்பாய், யாழ்ப்பாணம், கைதடி, இடைக்காடு, நெல்லியடி, கரவெட்டி.
ஆசிரியர்: திருமதி. பு.தர்ஷனி
(9300) 077 211 6733

வாழ்க்கையில் வெறுப்பா ?
பிரச்சினை எதுவானாலும், எம்முடன் தொலைபேசியில் அல்லது நேரில் பேசுங்கள்.
இரகசியங்களைப் பேணுவோம்.
காலை 9.00 – பி.ப 1.00
மதச்சார்பற்றது
கைகொடுக்கும் நண்பர்கள்
104, 4ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்.
021 222 8117, 0779008776
(சீ-9913)

# திருப்பி அனுப்புவதில் அவசரம் காட்டாதீர்கள்

(கொழும்பு)



இலங்கை அகதிகளை திருப்பி அனுப்புவதில் இந்திய மத்திய அரசு அவசரம் காட்டக்கூடாது என்று காந்திய மக்கள் இயக்க நிறுவனர் தமிழருவி மணியன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கையில் புதிய அரசு தற்போதுதான் அமைந்துள்ளது. இலங்கை அகதிகளை திருப்பி அனுப்புவதில் மத்திய அரசு ஏன் அவசரம் காட்டுகிறது என்று தெரியவில்லை.

இலங்கையிலிருந்து வந்த அகதிகளுக்கு அங்கு அவர்களுக்கு சொந்தமான வீடு. நிலம் ஆகியவை அவர்களுக்கே திருப்பி கொடுக்கப்படும் என்பதும், அவர்களுக்கு குறைந்தபட்ச உரிமைகளும் அளிக்கப்படும் என்பதும் உறுதி செய்யப்படாத நிலையில் அவர்களை திருப்பி அனுப்பக்கூடாது என்று மத்திய அரசை கேட்டுக் கொள்கிறோம்.

அப்படி திருப்பி அனுப்ப மத்திய அரசு முயற்சி செய்தால் அதை எதிர்த்து ஒட்டு மொத்த தமிழகமும் கிளர்ந்தெழும் என்று தெரிவித்தார்.

இதேவேளை இலங்கை அகதிகளை திருப்பி அனுப்புவது தொடர்பாக மத்திய அரசு நடத்திய முக்கிய கூட்டத்தில் பங்கேற் காததற்கு தமிழக அரசுக்கு கருணாநிதி கண்டனம் தெரிவித்துள்ளார் என்பது குறிபிடத்தக்கது. (இ-5)

பிரத்தியேக வகுப்பு
தரம் 04, 05 இற்கான புலமைப்பரிசில் மற்றும் க.பொ.த. சாதாரண தர கணிதம், வர்த்தகம் ஆகிய வகுப்புக்கள் பிரபல ஆசிரியரினால் யாழ்ப்பாணம் மற்றும் வவுனியா நகரை அண்மித்த பகுதிகளில் வீடுகளுக்கு வந்து கற்பிக்கப்படும்.
தொடர்புகளுக்கு:- 077 639 5711

கலை அழகு நிலையம்
மேற்குறிப்பிட்ட அழகு நிலையத்தில் குறைந்த கட்டணத்தில் முழுமையான பயிற்சிகள் இடம்பெறவுள்ளன. பயில விரும்பும் மாணவர்கள் அனுமதியைப் பெற்றுக் கொள்ளவும். நிறைவில் சான்றிதழ் வழங்கப்படும்.
1.Facial
2.Bleaching
3.Threading
4.Bridal make up
5.Pimple treatment
6.Waxing
7.Hair stretening
8.Hair Perming
9.Hair dye
10.Hair Colouring
11.Hair Cutting
12.Pedeicure manicure
கலை அழகு நிலையம், பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
பயிற்சி ஆரம்பம்: 06.02.2015
பயிற்சி நேரம்: 10 மணி
தொடர்பு: 076 659 2505
சென்.சாள்ஸ் பாடசாலைக்கு அருகாமையில் அமைந்துள்ளது.
(9295)

கண்ணீர் அஞ்சலி
யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் முதுகலை மாணி கற்கை நெறியைத் தொடரும் ஆசிரியர் திருமதி. கிரிஜா சண்முகரத்தினம் அவர்களின் தந்தையார் குமாரசாமி மாணிக்கவாசகர் (ஓய்வு பெற்ற அதிபர்) அவர்கள் 22.01.2015 அன்று இறைபதம் அடைந்த செய்தி கேட்டு ஆழ்ந்த துயர் அடைவதுடன் அன்னாரின் பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
5 ஆம் அணி,
முதுகலைமாணி மாணவர்கள்,
யாம். பல்கலைக்கமகம்.
(9401)

உ
மருதடியான் துணை
மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயம்
ஆவர்த்தனப் பிரதிஸ்ஷ்டா நவகுண்டபக்ஷ மஹாகும்பாபிஷேகம்
02.02.2015 திங்கட்கிழமை புனர்பூச நட்சத்திரம் கூடிய காலை 9.45 மணி தொடக்கம் 10.45 மணி வரை உள்ள சுபவேளையில் மருதடியான் கும்பாபிஷேகம்.
இன்று
எண்ணெய்க் காப்பு
01.02.2015 ஞாயிற்றுக்கிழமை மாலை 4.00 மணி வரை
என் இனிய அடியவர்களே!
என் திருக்கோலம் காண நீவீர் உள்வீதி வர விரும்பின் நான் விரும்பும் இக்கோலத்தில் வந்தால் நான் உன்னைக் கண்டுகொள்ளவும் என்னை நீவீர் தரிசிக்கவும் இலகுவாக இருக்கும். என் இன்பமே உன் இன்பம். எனது விருப்பமே உனது விருப்பம். எனது நல்லாசிகள் உங்களை வாழவைக்கும். எனதருள் பெற்று நீவீர் ஆலயம் வருவதை நான் விரும்புவேன்.

இவ்வண்ணம்
வேடமும் நீறும் விளங்க நிறுத்திக்
கூடுமெய்த் தொண்டர் குழாத்துடன் கூட்டி
அஞ்சக் கரத்தின் அரும் பொருள் தன்னை
நெஞ்சக் கருத்தின் நிலை அறிவித்துத்
தத்துவ நிலையை தந்து உனை ஆண்ட
வித்தக மருதடி விநாயகன்
குறிப்பு :- கும்பாபிஷேகத்தை தொடர்ந்து வரும் மண்டலாபிஷேகத்திற்கு பதிவு செய்தவர்கள் தங்கள் திகதியினை உறுதிப்படுத்திக்கொள்வதுடன், மேலதிகமான செலவினத் தொகை ரூபாய். 15,000.00 ஆலய தர்மகர்த்தாசபை காரியாலயத்தில் செலுத்தி பற்றுச்சிட்டையினை பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.
ஆலயத்தில் இனிவரும் காலங்களில் மஹோற்சவம் 25 நாட்கள் நடைபெறும் என்பதையும் மார்ச் 22 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி வருடப்பிறப்பன்று இரதோற்சவமும் மறு நாள் தீர்த்தோற்சவமும் நடைபெறும் என்பதை அடியார்களுக்கு அறியத்தருகின்றோம்.
தொ.பே இல: 021 225 5136, 077 923 5693
-ஆலய தர்மகர்த்தா சபை
விளம்பர அனுசரணை:-
K.THIRUNA
SHOW MILL, CARPENTRY& ALUMINIUM FITTINGS
Petrol Set Opposite Lane, Manipay Proprietor: K.Thirunavukarasu.
(சி-9968)

வெளிநாடுகளுக்கான துரித தபால் பொதிகள் சேவை

◆220இற்கு மேற்பட்ட நாடுகளுக்கான சேவை
◆3 வேலை நாட்களில் குறித்த முகவரியில் ஒப்படைக்கப்படும்
திருமுருகன் கொம் நெற்
விரைவு! பாதுகாப்பு! நம்பகத்தன்மை!
வடமாகாணத்திற்கான அங்கீகரிக்கப்பட்ட முகவர்
இல. 46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி.
இல. 18, பிரதானவீதி, நெல்லியடி.
ஏ9 வீதி, கிளிநொச்சி (கொமர்ஷல் வங்கி முன்பாக)
இல. 50, கே.கே.எஸ்.வீதி, சுன்னாகம். (கொமர்ஷல் வங்கி முன்பாக)
கடற்கரை வீதி, குருநகர். (தொடர்மாடி கட்டடம் முன்பாக)
பிரதான வீதி,சங்கானை. (வைத்திலிங்கம் கட்டடம் மேல்மாடி, ஆசைபிள்ளை நகைக்கடை முன்பாக)
பிரதான வீதி, பருத்தித்துறை.
WESTERN UNION
MONEY TRANSFER
271A. K.K.S. Road, Jaffna. T.P: 021 222 7835/ 077 7554528

## இன்றைய இராசி பலன்

01.02.2015
தை 18, ஞாயிற்றுக்கிழமை
சூரிய உதயம் காலை 6.30 மணிக்கு
திரயோதசி பின்னிரவு 2.20 மணிக்கு
திருவாதிரை பிற்பகல் 5.39 மணிவரை
இராகுகாலம் 5.06-6.36 மணிவரை
சுபநேரம் 8.36- 11.16 மணிவரை
பிரதோச விரதம்

வளவன்

**மேடம்** – சகோதர ஒற்றுமை மேலோங்கும் நாள், எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும், பயணங்களால் பலனுண்டு, தெய்வீக சிந்தனை மேலோங்கும் நாள், போசன சுகமுண்டு.

**இடபம்** – தேவையற்ற விவாதங்களை தவிர்ப்பது நல்லது, குடும்பத்தில் பொறுப்புக்கள் கூடும், எடுத்த காரியங்களை முடிப்பதில் அதிக பிரயாசை எடுக்கும் சூழ்நிலை உருவாகும்.

**மிதுனம்** – தேவையற்ற கற்பனைகளை வளர்த்துக்கொள்வீர்கள், பெரிய மனிதர்களின் சந்திப்புக்கள் இடம் பெறலாம், விருந்துகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, ஆன்மீக சிந்தனை மேலோங்கும் நாள்.

**கடகம்** – ஆதாயமில்லாத அலைச்சல்கள் ஏற்படலாம், மனதில் தேவையற்ற சஞ்சலங்கள் அதிகரிக்கும் நாள், கடமையில் கண்ணும் கருத்துமாகச் செயற்படுவீர்கள்.

**சிம்மம்** – வருமானம் வருவதற்கான வழியைக் கண்டுகொள்வீர்கள், உறவினர்களின் வருகையால் குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், போசன சுகமுண்டு.

**கன்னி** – நண்பர்களின் சந்திப்பால் பரவசமடைவீர்கள், அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர், ஆரோக்கியமான நாள், மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம்.

**துலாம்** – புதிய திட்டங்கள் எளிதில் கைகூடும் நாள், பயணங்களால் பலனுண்டு, ஆன்றோர் சந்திப்புண்டு, பித்த சம்பந்தமான ரோகங்கள் ஏற்படலாம்.

**விருச்சிகம்** – ஆரோக்கியத்தில் அச்சுறுத்தல்கள் ஏற்படலாம், எடுத்த காரியங்கள் தாமதமாகவே நடக்கும் வாய்ப்புண்டு, மனதில் இனம்புரியாத கவலைகள் தோன்றி மறையும்.

**தனுசு** – கௌரவமான சம்பவங்கள் இடம் பெறலாம், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், உறவினர்களும் நண்பர்களும் வலியவந்து உதவுவார்கள்.

**மகரம்** – தொழிலை விருத்தி செய்யும் எண்ணம்மேலோங்கும்நாள், உடல் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், முயற்சிகள் எளிதில் கைகூடும் நாள்.

**கும்பம்** – புண்ணியகாரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், வியாபாரம் சம்பந்தமாக எடுத்த முயற்சிகள் முன்னேற்றம் தரும், பிள்ளைகளின் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள்.

**மீனம்** – பயணங்களால் பலனுண்டு, சுபகாரியச் செலவுகள் அதிகரிக்கும் நாள், பெரிய மனிதர்களின் தொடர்புகள் அதிகரிக்கும் நாள் ,பெற்றோர் நலனில் அக்கறை காட்டுவீர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உடனடி வேலைவாய்ப்பு

திறமைமிக்க உங்கள் தெரிவிற்கு அருமையான எங்களின் வேலைத் தேடல் முனைப்பான மாற்றத்துடன் இன்றே செயற்பட்டிட விரையுங்கள். இலங்கையின் தலைசிறந்த பல முன்னணி தொழில் நிறுவனங்களில் பணி புரிய 17-50 வயது ஆண், பெண் தேவை. உணவுப் பொருட்கள், வாசனைத் திரவியங்கள், குளிர்பான வகைகள் (ஜாம், ரொபி, பிஸ்கட், பால்மா, கோடியல்) உற்பத்தி தொழிற்சாலைகளிலும் துறைமுகம், விமான நிலையம் பாதுகாப்பு உத்தியோகத்தர், வெல்டர், பிளம்பர், இலற்றீசியன், வாகன சாரதிகள், மேசன் போன்ற பற்பல வேலை வாய்ப்புக்கள். 18000/=- 48000/= உயரிய சம்பளத்துடன் வருகை அன்றே தொழில்வாய்ப்பு. இன்றே விரையுங்கள் வெற்றி நிச்சயம்.

**தொடர்புகளுக்கு:-077 683 8231, 077 111 6770** (9985)


## தைப்பூச அபிஷேகம்

சுன்னாகம் வரியப் புலம்பூந்தோட்டஞான வைரவர் ஆலயத்தின் தைப்பூச அபிஷேகம் நாளை மறுதினம் 3 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நடைபெற வுள்ளது என ஆலய தர்மகர்த்தா அறிவித்துள்ளார். (இ)

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

**வாகனமொன்றை அழைப்பின் பெயரில் (On- Call Basis) வழங்கக் கூடியவர்களிடமிருந்து கேள்விப் பத்திரம் கோரல்**

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் அறிவியல் நகர் கிளிநொச்சியில் உள்ள பொறியியல் மற்றும் விவசாய பீடத்தின் பாவனைக்காக வான் ஒன்றை அழைப்பின் பெயரில் வழங்கக் கூடிய வாகன உரிமையாளர்களிடமிருந்து கேள்விப் பத்திரங்கள் கோரப்படுகின்றன. வாகனத்தின் முதற்பதிவு 05 வருடங்களுக்கு மேற்படாமலும் வாகனத்தின் உற்பத்திக்காலம் 07 வருடங்களுக்கு மேற்படாமலும் இருக்க வேண்டும்.

❁ வாகன விபரம்

| வாகன வகை | எரிபொருள் வகை | எண்ணிக்கை |
|---|---|---|
| பயணிகள் வான் (van) (14 அல்லது 15 ஆசனங்கள்) | டீசல் (DUAL ac) | 01 |

❁ வெற்றி பெறும் மனுதாரர் எரிபொருளுடன் வாகனத்தை வழங்கும்படி வேண்டப்படுவார்.

❁ தூரக் கணீப்பீடுகள் யாவும் அறிவியல் நகர்,கிளிநொச்சியை மையமாக வைத்தே கணிப்பிடப்படும்

❁ கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த வாகன உரிமையாளர்களது வாகனம் விரும்பத்தக்கது.

விண்ணபப்படிவம்,விலைமனு ஆவணங்கள் மற்றும் மேலதிக விபரங்களை அலுவலக நாட்களில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா 500/= பல்கலைக்கழக காசாளர் கரும பீடத்தில் அல்லது மக்கள் வங்கியின் கணக்கிலக்கம் 162100160000880 இற்கு செலுத்திப் பெற்ற பற்றுச்சீட்டை சமர்ப்பிப்பதன் மூலம் 13.02.2015 நண்பகல் 12.00 மணிவரை சிரேஷ்ட உதவிப் பதிவாளர் / நிர்வாகக் கிளை இடமிருந்து அல்லது பிரதிப் பதிவாளர் / அறிவியல் நகர்,கிளிநொச்சி இடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். முறையாகப் பூர்த்தி செய்யப்பட்டு அரக்கிடப்பட்ட ஆவணங்கள் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் ***வாகனம் ஒன்றை அழைப்பின் பெயரில் வழங்குவதற்கான கேள்வி*** என அடையாளமிட்டு 18.02.2015 பி.ப 2.00 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக பதிவுத்தபாலில் தலைவர், கேள்விச்சபை, த.பெ.எண் 57, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பப்படவோ அல்லது பதிவாளர் அலுவலகத்தில் உள்ள கேள்விப்பெட்டியினுள் இடப்படவோ வேண்டும்.

கேள்வி விண்ணப்பங்கள் 18.02.2015 அன்று பி.ப 2.30 மணிக்கு பரிசீலிக்கப்படும். அத்தருணம் மனுதாரர் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதி ஒருவர் ஆவணங்கள் பரிசீலிக்கப்படும் இடமான சபா மண்டபத்திற்கு சமுகமளிக்கலாம். கேள்விச்சபையின் முடிவே இறுதியானது.

**தலைவர்,**
**கேள்விச்சபை,**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம்.**
27.01.2015 (சி-9975)

## உணவு சிற்றுண்டி வழங்கல், காகிதாதிகள் வழங்கல் மற்றும் வாகன சேவிஸ் போன்றவற்றிற்கான கூறுவிலை கோரல்- 2015
## வலயக் கல்வி அலுவலகம்- கிளிநொச்சி

கிளிநொச்சி கல்வி வலயத்தின் கீழ் நடத்தப்படும் கருத்தரங்குகள், பயிற்சி வகுப்புக்கள், விழாக்கள், போட்டிகள் என்பனவற்றுக்கு உணவு சிற்றுண்டி வகைகளை வழங்குவதற்கும் வலய பாவனைக்கு காகிதாதிகள் மற்றும் வலய பாவனையில் உள்ள வாகனத்திற்கான சேவிஸ் என்பனவற்றுக்கான கூறுவிலை கோரப்படுகின்றது.

01.நியதிகள், நிபந்தனைகள், கட்டுப்பாடுகள் உள்ளடக்கியதான விரிவான கேள்வி கோரல் விபரத்தினை அலுவலகத்தில் பார்வையிடமுடியும்

02.இக் கேள்விப் பத்திரங்களை 05.02.2015 ஆம் திகதி தொடக்கம் காலை 10.00 மணிமுதல் 19.02.2015 ஆம் திகதி ரூபா நானூறு (ரூபா 400/=) மீளளிக்க முடியாத வைப்புப்பணம் செலுத்தி நேரடியாக அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளமுடியும்.

03.பூரணப்படுத்திய கேள்விப் பத்திரங்களை 20.02.2015 ஆம் திகதி பிற்பகல் 2.00 மணிக்கு முன்னர் நேரடியாகவோ அல்லது பதிவுத் தபாலாகவோ அலுவலகத்திற்கு (கணக்காளர், வலயக்கல்வி அலுவலகம், கிளிநொச்சி) அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

04.அதிகாரம் பெற்ற கேள்விச் சபையினர் 20.02.2015 ஆம் திகதி பிற்பகல் 2.00 மணிக்கு கூடி கேள்விப்பத்திரங்கள் திறக்கப்பட்டு இறுதித் தீர்மானம் எடுக்கப்படும்.

05.இது சுருக்கமான பத்திரிக்கை விளம்பரமாகும்.

06.மேலதிக தகவலுக்கு அலுவலக நேரத்தில் (காலை 9.00மணி முதல் பி.ப 4.00 மணி) **021 228 5416** தொலைபேசியூடாக அறியலாம்.

**க.முருகவேல்**
**தலைவர், கேள்விச் சபை,**
**வலயக் கல்விப்பணிப்பாளர்,**
**கிளிநொச்சி.** (சி-9974)

## பேசும் படம் - 13


உரும்பிராய்ச் சந்தி (காப்பெற் வீதியில்)

அண்ணே! லீற்றருக்கு எவ்வளவு மைலேஜ் கொடுக்குது?

குறிப்பு: அன்பு வாசகர்களே! நீங்களும் பேசும் படங்களை உங்கள் பெயர், முகவரி, சம்பவம் நிகழ்ந்த இடம் என்பவற்றுடன் அனுப்பி வைக்க முடியும்.

மின்னஞ்சல் : valampuriijaffna@gmail.com
facebook: www.facebook.com/valam.puri.1
தபால் முகவரி :ஆசிரியர், பேசும் படம்,வலம்புரி,
இல.03, 2-ம் ஒழுங்கை,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
அல்லது நேரில்.

**அனுப்பியவர்:**
**கோபிகிருஷ்ணா (உரும்பிராய்)**


## கல்யாண மாலை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1981 இந்து
நட்சத்திரம்: சதயம்
கி.பா: 24 செவ் 2 இல்
உயரம்: 6'
தகைமை/தொழில்: A/L (கனடா PR)
தொ.இ: B/4080

பிறப்பு: 1987 இந்து
நட்சத்திரம்: அத்தம்
கி.பா: 14 1/2 சூரிசெவ் 2இல்
உயரம்: 5'6"
தகைமை/தொழில்: BBM/ தனியார்
தொ.இ: B/4081

பிறப்பு: 1985 இந்து
நட்சத்திரம்: மிருகசீரிடம்
கி.பா: 34
உயரம்: 5'8"
தகைமை/தொழில்: கணக்காளர்
தொ.இ: B/4082

பிறப்பு: 1985 இந்து
நட்சத்திரம்: கார்த்திகை
கி.பா: 25
உயரம்: 5'9"
தகைமை/தொழில்: ஆசிரியர்
தொ.இ: B/4083

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1981 இந்து
நட்சத்திரம்: கேட்டை
கி.பா: 9 1/2 சூரிசெவ் 11 இல்
உயரம்: 5'3"
தகைமை/தொழில்: A/L/ தனியார்
தொ.இ: G/282

பிறப்பு: 1971 இந்து
நட்சத்திரம்: பூரம்
கி.பா: 43
உயரம்: 5'1"
தகைமை/தொழில்: பட்டதாரி/ ஆசிரியர்
தொ.இ: G/287

பிறப்பு: 1976 இந்து
நட்சத்திரம்: மகம்
கி.பா: 32 சூரிசெவ் 8 இல்
உயரம்: 5'2"
தகைமை/தொழில்: BA/ ஆசிரியர்
தொ.இ: G/290

பிறப்பு: 1977 இந்து
நட்சத்திரம்: புனர்பூசம்
கி.பா: 55 சூரிசெவ் 4 இல்
உயரம்: 5'2"
தகைமை/தொழில்: O/L
தொ.இ: G/291

## கல்யாண மாலை
**(சர்வதேச திருமண சேவை)**
**இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்**
**பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே**
**தொடர்பு:- 021 720 1005**
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
( ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம் )


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மசூதியில் தீவிரவாதிகள் தற்கொலைத் தாக்குதல்

## 61 பேர் உயிரிழப்பு

**பாகிஸ்தான் சிந்து மாகாணத்தில் உள்ள மசூதியில் நேற்று முன்தினம் பெருந்திரளானவர்கள் தொழுகையில் ஈடுபட்டிருந்த வேளை இடம்பெற்ற தற்கொலைக் குண்டுத் தாக்குதலில் சிக்கிய 61 பேர் பரிதாபமாக பலியாகியுள்ளனர்.**



இந்தப் பயங்கரச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது, பாகிஸ்தானின் சிந்து மாகாணம் ஷிகார்பூர் மாவட்டம் லக்கி டார பகுதியில் சிறுபான்மையினரான ஷியா பிரிவு முஸ்லிம்களின் மசூதி உள்ளது. நேற்று முன்தினம் அங்கு தொழுகை நடந்து கொண்டிருந்தது. அதில் ஏராளமானவர்கள் கலந்து கொண்டனர்.

அப்போது கூட்டத்தில் புகுந்த தற்கொலை படை தீவிரவாதி தனது உடலில் கட்டியிருந்த குண்டை வெடிக்க செய்தான். இதனால் அங்கு பதற்றமும் பரபரப்பும் ஏற்பட்டது. தொழுகையில் பங்கேற்றவர்கள் அங்கு மிங்கும் ஓடினர்.

இந்த தாக்குதலில் சம்பவ இடத்திலேயே 40 பேர் பலியாகினர். 70இற்கும் மேற்பட்டோர் படுகாயம் அடைந்தனர்.

உடனே அவர்கள் ஷிகார்பூர் மற்றும் அதை சுற்றியுள்ள வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டனர். ஆனால் சிகிச்சை பலனின்றி மேலும் 21 பேர் உயிரிழந்தனர். இதனால் உயிரிழந்தோர் எண்ணிக்கை 61 ஆக உயர்ந்துள்ளது. இன்னும் 50 பேரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளது.

இதற்கிடையே இந்த தாக்குதலுக்கு ஜுன்டுல்லா தீவிரவாதிகள் பொறுப்பு ஏற்றுள்ளனர். இவர்கள் தலிபான்களிடம் இருந்து பிரிந்தவர்கள். இத்தாக்குதல்குறித்து ஜுன்டுலலா தீவிரவாதிகளின் செய்தி தொடர்பாளர் பஹத் மார்வார்ட் நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது, 'இந்த தாக்குதலுக்கு நாங்கள் பொறுப்பு ஏற்கிறோம். ஷியா பிரிவினர் எங்களது எதிரிகள். எனவே தான் எப்போதும் அவர்களை குறிவைத்து தாக்குதல் நடத்துகிறோம்" என்று கூறியுள்ளனர்.

மனிதகுண்டு தாக்குதல் நடந்த மசூதியில் இரத்தம் உறைந்து கிடக்கிறது. சுவர்கள் முழுவதும் இரத்த கறையாக உள்ளது. இரத்த வெள்ளத்தில் காயமடைந்தவர்களை அவர்களது உறவினர்கள் தூக்கி சென்று வைத்தியசாலையில் அனுமதித்தனர்.

சம்பவத்தை தொடர்ந்து சிந்து மாகாண தலைநகர் கராச்சிக்கு பிரதமர் நவாஸ் செரீப் விரைந்து சென்றார்.

ஷிகார்பூர் நிலவரம் குறித்து அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தினார். இது குறித்து விசாரணைக்கு உத்தரவிட்டார். இதற்கிடையே தீவிரவாதிகளின் இத்தாக்குதலுக்கு கண்டனம் தெரிவித்து கராச்சி வீதிகளில் போராட்டம் நடத்தப்பட்டது.

பாகிஸ்தானில் கடந்த வருடம் பொஷாவரிலுள்ள பாடசாலை மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் 161 பேர் பலியான சம்பவம் குறித்த பதற்றம் இன்னும் அடங்குவதற்கு முன்பாக இந்த தாக்குதல் இடம் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-5)

# ரஷ்யா மீது தடையில்லை ஐரோப்பிய நாடுகள் முடிவு

உக்ரைனின் கிழக்கு பகுதியில் ரஷ்ய ஆதரவு கிளர்ச்சியாளர்களுக்கும், அரசு படைகளுக்கும் இடையே மீண்டும் மோதல்கள் இடம்பெற்று வருகின்றன.

டண்ட்ஸ்க் மற்றும் லுகான்ஸ்க் பகுதிகளுக்கு இடையே உள்ள முக்கிய ரயில் நிலையமான டெபால்ட்சேவ் பகுதியில் இரு படையினரும் தொடர்ந்து குண்டு மழை பொழிவதாக தகவல் கள் வெளியாகியுள்ளன.

உக்ரைன் விவகாரத்தில் ரஷ்யாவுக்கு பங்கு இல்லை என அந்த நாடு தொடர்ந்து கூறி வரும் நிலையில், ரஷ்யாவுக்கு எதிராக ஐரோப்பிய நாடுகள் ஏற்கனவே பொருளாதார தடை விதித்துள்ளன.

ரஷ்யாவில் உள்ள ஏராளமான செல்வந்தர்களின் சொத்துகள் முடக்கப்பட்டுள்ளதுடன், அவர்களுக்கு பயண தடையும் விதிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் ரஷ்ா மீது மேலும் பொருளாதார தடை விதிக்க இந்த நாடுகள் பரிசீலித்து வந்தன. ஆனால் பிரஸ்சல்சில் நேற்றுமுனதினம் நடந்த ஐரோப்பிய நாடுகளின வெளியுறவு அமைச்சர்கள் கூட்டததில, ரஷயா மீது புதிய பொருளாதார தடை விதிக்க மறுப்பு தெரிவிக்கப்பட்டது.

எனினும் ஏற்கனவே ரஷ்யா மீது விதிக்கப்பட்டுள்ள பொருளாதார தடையை செப்டெம்பர் மாதம் வரை நீட்டிக்க முடிவு செய்யப்பட்டது.

இந்த தடையில் மேலும் சில ரஷ்யர்களை இணைப்பது குறித்து பரிசீலிக்கவும் முடிவு செய்யப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

# ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகளை குறிவைத்து அமெரிக்க கூட்டுப்படைகள் வான் தாக்குதல்

சிரியா, ஈராக்கில் ஆதிக்கம் செலுத்தி வருகிற ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகள், உலகளவில் பெரும் அச்சுறுத்தலாக விளங்குகின்றனர்.

அவர்களை அடியோடு ஒழிக்க அமெரிக்கா, தன் தோழமை நாடுகளுடன் சேர்ந்து தாக்குதல்கள் நடத்தி வருகிறது.

இந்த நிலையில், சிரியாவில் நேற்று முன்தினம் அமெரிக்க கூட்டுப்படைகள் 6 வான் தாக்குதல்கள் நடத்தின. இவற்றில் 5 தாக்குதல்கள் கொபானி நகருக்கு அருகே நடத்தப்பட்டுள்ளன.

இதே போன்று ஈராக் நாட்டில் 12 வான்தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

இந்த தாக்குதல்கள் அல் ஆசாத், அர் ருத்பா, மொசூல் நகரங்களில் ஐ.எஸ்.ஐ.எஸ் தீவிரவாதிகளின் கட்டடங்கள், வாகனங்கள், ஆயுதக் கிடங்குகள் ஆகியவற்றை குறிவைத்து நடத்தப்பட்டுள்ளன.

இந்த தாக்குதல்களில் ஏற்பட்ட உயிர்ச்சேதம் பற்றி உடனடியாக தகவல் கிடைக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

# விமான விபத்துக்களை தடுத்து நிறுத்த மிதக்கும் கறுப்புப்பெட்டி தயாரிக்கப்படும்!

உலகின் விமான விபத்து வரலாற்றில் மர்மமாக விளங்கும் மற்றொரு விமான விபத்து கடந்த வருடம் நிகழ்ந்தது. மலேசியாவின் எம்.எச். 370 தான்அது. இன்றுவரை விமானத்தின் நிலை என்ன வென்று தெரியாத நிலையில், அதில் பயணித்த 239 பேரும் பலியானதாக நேற்று முன்தினம் அறிவிக்கப்பட்டது. அதே போல் அண்மையில் விபத் துக்குள்ளான ஏர் ஏசியா விமானமும் கடலில் விழுந்ததில் அதில் பயணித்த 162 பேரும் பலியாகினர்.

தொடர்ந்து வரும் இது போன்ற விமான விபத்துகளை தடுக்க, இந்த ஆண்டு இறுதிக்குள் புதிய கண்காணிப்புவிதிகளை நடைமுறைப்படுத்த இருப்பதாக சர்வதேச சிவில் விமான பேக்குவரத்து அமைப்பு (ஐ.சி.ஏ.ஓ.) தெரிவித்துள்ளது.

இதன் தொடக்கமாக கனடாவில் உள்ள மாண்ட்ரியலில் கடந்த திங்கள் முதல் வியாழன் வரை ஐ.சி.ஏ.ஓ.வின் 191 உறுப்பினர்கள் பங்கேற்கும் கூட்டம் ஒன்று நடைபெற்றது. இதன் இறுதி முடிவு இன்னும் 6 மாதங்களில் ஐ.சி.ஏ.ஓ.விடம் சமர்ப்பிக்கப்பட உள்ளது.

இந்நிலையில் புதிய கண்காணிப்பு விதிகளுக்கு ஐ.சி.ஏ.ஓ.வின் உறுப்பினர்களாக உள்ள நாடுகளிடம் நல்ல வரவேற்பு இருந்ததாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதுவரை ரேடார் மட்டுமே விமானங்களை கண்காணித்து வந்த நிலையில் புதிய கண்காணிப்பு விதிகளின் படி, விமானத்தை இயக்கும் விமான சேவை நிறுவனமே தங்கள் விமானத்தில் இருந்து 15 நிமிடத்திற்கு ஒருமுறை வரும் சிக்னலை கண்காணிக்கும் படியான அமைப்பு உருவாக்கப்படும் என மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-5)

# லோக்பால் சட்டத்தை அமுல்படுத்த வலியுறுத்தி மீண்டும் போராட்டம்

பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான அரசின் போக்கை கண்டித்து டில்லியில் போராட்டம் நடத்தப்போவதாக காந்தியவாதி அன்னா ஹசாரே அறிவித்துள்ளார்.

இதுகுறித்து நேற்று முன்தினம் தனது சொந்த ஊரான மராட்டிய மாநிலம் ராலேகான் சித்தியில் நிருபர்களுக்கு பேட்டி அளித்த போது புதிய அரசு பொறுப்பேற்று உடனடியாக எந்த ஒரு அதிசயத்தையும் ஏற்படுத்தி விட முடியாது என்பதற்காக அமைதி காத்தேன். நரேந்திர மோடி பிரதமராக பதவி ஏற்று தற்போது 8 மாதங்கள் ஆகி விட்டன. ஆனால் இதுவரை லோக் பால் சட்டத்தை அமுல்படுத்துவது மற்றும் மாநிலங்களில் வலுவான லோக் அயுக்தா நீதிபதிகளை நியமிக்க நடவடிக்கை எடுப்பதில் மத்திய அரசு விருப்பம் காட்டுவதாக தெரியவில்லை. இதேபோல கறுப்பு பணத்தை மீட்டு கொண்டு வரவும் இல்லை.

எனவே இந்த பிரச்சினைகளை முன்வைத்து டில்லியில் நான் போராட்டம் தொடங்க உள்ளேன். இதில் நான் உறுதியாக இருக்கிறேன் என்று கூறினார். மேலும் இதுகுறித்து எனது முக்கிய ஆதரவாளர்களை சந்தித்து பேசி போராட்ட திகதியை இறுதி செய்யவுள்ளதாகவும் அன்னா ஹசாரே மேலும் தெரிவித்தார். (இ-5)

# கழிவுநீர் தொட்டி இடிந்து 10 தொழிலாளர்கள் பலி!

இந்தியாவின் வேலூர் அருகே உள்ள ராணிப்பேட்டை சிப்காட் பகுதியில் ஏராளமான தோல் தொழிற்சாலைகள் உள்ளன. சிப்காட் தீயணைப்பு நிலையம் பின்புறம் தோல் தொழிற்சாலைகள் பொது சுத்திகரிப்பு மையம் உள்ளது. இங்கு 1000 கன லீற்றர் கொள்ளளவு கொண்ட சுமார் 20 அடி உயர பிரமாண்ட கழிவுநீர் தொட்டி உள்ளது.

இந்த தொட்டி அருகில் தனியார் தொழிற்சாலை ஊழியர்கள் ஓய்வு வெடுக்கும் கொட்டகை உள்ளது. நேற்று முன்தினம் இரவு இந்த கொட்டகையில் அங்கு வேலை பார்க்கும் 13 தொழிலாளர்கள் தூங்கி கொண்டிருந்தனர்.

நள்ளிரவு 12.30 மணிக்கு திடீரென பொது சுத்திகரிப்பு தொட்டி இடிந்தது. அதிலிருந்த தோல் கழிவு வயல் வெளியில் உள்ள சேறு போல் பெருக்கெடுத்து தொழிலாளர்கள் தூங்கி கொண்டிருந்த கொட்டகைக்குள் புகுந்தது. அதிலிருந்து விஷ வாயு வேகமாக பரவியது. இதனால் தூங்கி கொண்டிருந்த 10 பேர் மயக்கம் அடைந்தனர். கண்காணிப்பாளர் அமீர், ரவி, பழனி ஆகியோர் கண் விழித்தனர். அவர்கள் மூக்கை பொத்தி கொண்டு தப்பி ஓடினர்.

கொட்டகைக்குள் புகுந்த கழிவு நீர் படுத்து தூங்கிய 10 தொழிலாளர்களையும் மூழ்கடித்தது. அப்போது விஷ வாயு பரவியதால் அவர்கள் தோல் கழிவுக்குள்ளேயே சிக்கி பிணமானார்கள்.

தூங்கி கொண்டிருந்த தொழிலாளர்கள் என்ன நடந்தது என்பது தெரியாமலேயே உயிரை விட்டனர். இவர்களில் 9 பேர் மேற்கு வங்க மாநிலம் சால்தாபதானி கிராமத்தை சேர்ந்தவர்கள். ஒருவர் தமிழ்நாட்டை சேர்ந்தவர்.

தொழிற்சாலை முழுவதும் 2 அடி உயரத்திற்கு கழிவுநீர் தேங்கியுள்ளது. விஷவாயு வேகமாக பரவியதால் சிப்காட் பகுதியில் பீதி ஏற்பட்டது. தப்பி ஓடிய அமீர், ரவி ஆகியோர் நிர்வாகம் மற்றும் தீயணைப்பு நிலையத்துக்கு தகவல் தெரிவித்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

# சிறுபான்மையினருக்கு எதிரான நடவடிக்கைகள் அதிகரித்துள்ளன

இந்தியாவில் புதிய அரசு பதவியேற்ற பிறகு சிறுபான்மையினருக்கு எதிரான தாக்குதல்கள் அதிகரித்திருப்பதாக அமெரிக்க செனட் சபை உறுப்பினர் ஜோ பிட்டாஸ் தெரிவித்துள்ளார்.

இது குறித்து நேற்று முக்தினம் அமெரிக்க செனட் சபையில உரையாற்றிய ஜோ பிட்டாஸ், "மத சுதந்திரம் மற்றும் பன்மைத்துவம் மிகுந்த இந்தியா, தற்போது வெறுப்பு, பெரும்பான்மைத்துவம் மற்றும் சகிப்புத்தன்மை இல்லாததாக மாறியிருக்கிறது.

புதிய அரசு பதவியேற்ற முதல் 100 நாட்களில், சிறுபான்மை கிறிஸ்தவர்களுக்கு எதிரான தாக்கு தல்களை இந்து தேசியவாதிகள் அதிகரித்து இருப்பதாக என்.ஜி.ஓக்களின் ஆவணங்களின் தகவல்கள் கூறுகின்றன" என்று தெரிவித்தார்.

மேலும் ஒரு சில ஆவணங்களை மேற்கோள் காட்டி உரையாற்றிய அவர், "நவம்பர், டிசம்பர் ஆகிய மாதங்களில் 38க்கும் மேற்பட்ட வன்முறை சம்பவங்கள் கிறிஸ்தவர்களுக்கு எதிராக நடைபெற்றுள்ளது. குறிப்பாக டிசம்பரில் மட்டும், கிறிஸ்தவ ஆலயங்களை எரித்தல், கடுமையாக தாக்குதல், அச்சுறுத்தல் மற்றும் போதகர்களை கைது செய் தல் போன்ற 31 சம்பவங்கள் நடைபெற்றுள்ளன.

இது போன்ற நடவடிக்கைகளால் இந்திய சமூகத்தினரிடையே ஒருவித அசாதாரண சூழல் நிலவுகிறது. இதனால், தொடர்ந்து சிறுபான்மை சமூகத்தினரின் புறக்கணிக்கப்பட்டு வருகிறார்கள். இந்த வன்முறைச் சம்பவங்கள் குறித்து பிரதமர் நரேந்திர மோடி கண்டிப்பாக பேச வேண்டும். அதேபோல் ஒடுக்கபபட்ட மக்களின் சார்பாக ஒபாமா நிர்வாகமும் இந்தியாவிடம் கண்டிப்புடன் பேச வேண்டும்" என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருள்மிகு இணுவில் கந்தசுவாமி கோவில் தைப்பூசத்தின உலகப் பெருமஞ்சத் திருவிழா

(யாழ்ப்பாணம்)

வரலாற்றுப் பிரசித்திபெற்ற இணுவில் கந்தசுவாமி கோயிலில் நாளை மறுதினம் 3 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை தைப்பூசதினத் தன்று மஞ்சத் திருவிழா நடைபெறவுள்ளது.

அன்றையதினம் காலை 6 மணிக்கு 1008 சங்காபிஷேகமும் பூசையும் இடம்பெறும். மலை 6 மணிக்கு சாயரட்சைப் பூசையைத் தொடர்ந்துவசந்த மண்டபப் பூசை இடம்பெறும்.

இரவு 7 மணிக்கு மின்சார தீபங்களினால் அலங்கரிக்கப்பட்ட பலநூற்றாண்டுகள்பழைமை வாய்ந்த உலகப் பெருமஞ்சத்தில் ஆறுமுகப் பெருமான் வள்ளி தெய்வானை சமேதரராய் வீதிவலம் வரும் காட்சி இடம்பெறும்.

கடந்த இரண்டு வருடங்கள் ஆலயம் பாலஸ்தாபனம் செய்யப்பட்டதால் மஞ்சத் திருவீதியுலா நடைபெறவில்லை.

இம்முறை பல்லாயிரக்கணக்கான அடிய வர்கள் பங்கு பற்றுவார்கள் என எதிர்பார்ப்ப தனால் பாதுகாப்பு கடமையில் பொலிஸார், சாரணர் படை என்பன பங்குபற்ற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதுடன் குடிநீர், சுகாதார வசதி, வாகன பாதுகாப்பு தரிப்பிடங்கள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் ஆலயத்திற்கு வரும் அடியவர்கள் பெறுமதியான தங்க ஆபரணம் அணிந்து வருவதை தவிர்க்கு மாறு ஆலய நிர்வாகத்தினரால் கேட்கப்பட் டுள்ளது. (இ



(நன்றி:-மிரர்)

## உயர் பாதுகாப்பிற்குள்ளடங்கும்

# மயிலிட்டியிலுள்ள ஆலயங்களில் இம்முறை தைப்பூசத் திருவிழா!

(யாழ்ப்பாணம்)

**இராணுவத்தினரால் உயர் பாதுகாப்பு வலயமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ள வலி.வடக்கு பகுதியிலுள்ள இந்து ஆலயங்களில் வழிபாட்டில் ஈடுபட ஜனாபதி மைத்திரிபால சிறிசேன தலைமையிலான அரசாங்கம் அனுமதியளித்து வருகின்றது. இந்நிலையில் சுமார் 20 ஆண்டுகளுக்கு மேலாக அனுமதி மறுக்கப்பட்டி ருந்த மயிலிட்டி வீரமாணிக்க தேவன்துறை ஸ்ரீகண் ணாகாதேவி தேவஸ்தானத்திலும் முனையன் வளவு முருகன் ஆலயத்திலும் இம்முறை தைப்பூசத் திரு விழாவை நடத்த பாதுகாப்பு படையினர் அனுமதி வழங்கியுள்ளனர்.**

இது தொடர்பில் மயிலிட்டி வீர மாணிக்க தேவன்துறை ஸ்ரீகண் ணாகாதேவி தேவஸ்தானம் அனு ப்பி வைத்துள்ள செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

பாதுகாப்பு வலயத்தில் உள்ள மயிலிட்டி வீரமாணிக்க தேவன் துறை கண்ணகி அம்மன் ஆலயத்திலும் மயிலிட்டி முனையன் வளவு முருகன் ஆலயத்திலும் நாளை மறுதினம் 3 ஆம் திகதி செவ்வாய் க்கிழமை தைப் பூசத் திருவிழாவை நடத்து வதற் கான அனுமதியைப் பாதுகாப்புப் படையினர் வழங்கியுள்ளனர். அடி யார்கள் மயிலிட்டிக்குச் சென்று இவ் ஆலயங்களின் தைப்பூசத் திரு விழாக்களில் கலந்து கொள்வதற் கான சகல ஏற்பாடுகளும் மேற் கொள்ளப்பட்டுள்ளதாகவும் பருத் தித்துறையிலிருந்து இவ் ஆலய ங்களுக்குச் செல்வதற்கான வாகன வசதிகள் செய்யப் பட்டுள்ளதாகவும் அடியார்கள் அனைவரும் காலை 7.30 மணிக்கு மாவிட்டபுரம் கந்த சுவாமி ஆலயத்திற்கு வருகை தரு மாறும் ஆலய நிர்வாகத்தினர் அறி வித்துள்ளனர்.

அங்கிருந்து பக்த அடியார்கள் பேருந்தில் ஆலயத்திற்கு அழை த்துச் செல்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக அந்தச் செய் திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளது. (இ

# கரவெட்டியில் கும்பாபிஷேகமும் ஆன்மீக இசைப்பேழை வெளியீடும்

(யாழ்ப்பாணம்)

கரவெட்டி கிழக்கு கூழாங் கேணி வன்னியப்பிள்ளையார் ஆலய கும்பாபிஷேகம் நாளை 2 ஆம் திகதி, திங்கட்கிழமை காலை 9.45 மணிக்கு இடம்பெறவுள்ளது. சுமார் 500 ஆண்டுகள் பழைமை மிக்க தும், ஒல்லாந்தர் காலத்தில் தோன் றியதுமான இவ்வாலயம் சரித்திரச் சிறப்புடையதாகும். கும்பாபிஷேகத் துக்கான பூர்வாங்கக் கிரியைகள் நேற்று 31 ஆம் திகதி சனிக்கிழமை காலையில் ஆரம்பமாகின. அடியார் கள் எண்ணெய்க்காப்பு சாத்துதல் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 7.30 மணிமுதல் இடம்பெறும். கும்பாபிஷேக நிறைவில், ஆலயத் தின் மீது பாடப்பெற்ற இசைப்பாடல் கள் அடங்கிய ஆன்மீக இசைப் பேழையை தமிழருவி த.சிவகுமா ரன் வெளியிட்டுவைத்து சிறப்புரை யாற்றுவார். கும்பாபிஷேகத்தை சிவஸ்ரீ.சோமயோக சிகாமணிக்குரு க்கள் நிகழ்த்துவார். (இ-5)

# தும்பளை தூய லூர்து அன்னையின் யாத்திரைத் திருத்தலத் திருவிழா

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை, தும்பளை தூய லூர்து அன்னையின் யாத்திரைத் திருத்தலத் திருவிழா நாளை 2 ஆம் திகதி திங்கட்கிழமை பருத்தித்துறை பங்குத் தந்தையும் மறைக்கோட்ட முதல்வருமாகிய அருள்பணி யோ. யோண் மவுலிஸ் அடிகளாரின் கொடியேற்றத்துடன் மாலை 4.30 மணிக்கு ஆரம்பமாகும். தொடர்ந்து எதிர்வரும் 10 ஆம் திகதி வரை தின மும் மாலையில் 4.30 மணிக்கு திருச் செபமாலையுடன் நவநாள் வழிபாடுகள் நடைபெறும்.

நவநாட்களின் போது அருட் பணி பி.ஏ.யேசுதாசன் (அ.ம.தி) திருமறை உரை நிகழ்த்துவார். 10 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மாலை வழிபாட்டில்திவ்வியநற்கருணைஆராத னையும் பவனியும் இடம்பெறும்.

11 ஆம் திகதி புதன்கிழமை காலை 5.30 மணிக்கும் 7 மணிக்கும் திருப் பலிகள் ஒப்புக்கொடுக்கப்படும். திரு விழாத் திருப்பலியை யாழ்.மறை மாவட்ட ஆயர் தோமஸ் சவுந்தர நாயகம் ஆண்டகை தலைமைதாங்கி ஒப்புக்கொடுப்பார்.

அதனைத் தொடர்ந்து தூய லூர்து அன்னையின் திருச்சொரூப பவனி யும் இடம்பெறும். இத்திருத்தலத்தில் யாத்திரீகர்கள் தங்குவதற்கான ஒழு ங்குகள் யாவும் மேற்கொள்ளப்பட் டுள்ளன என மேலும் அறிவிக்க ப்பட்டுள்ளது. (இ




# இடையூறுகளின்றி கற்றல் நடவடிக்கையை மேற்கொள்ளக்கூடிய சூழலை உருவாக்குக

(யாழ்ப்பாணம்)

கற்றல் நடவடிக்கையை இடை யூறின்றி மேற்கொள்வதற்கான நடவடிக்கையை மேற்கொள்ளுமாறு யாழ்ப்பாணம் தொழில்நுட்பக் கல் லூரி மாணவர்கள் தொழில்நுட்பக் கல்விப் பயிற்சித் திணைக்களப் பணிப்பாளர் நாயகத்திடம் வேண்டு கோள் விடுத்து மகஜர் அனுப்பி வைத்துள்ளனர்.

யாழ்.தொழில்நுட்பவியற் கல்லூ ரியில் டிப்ளோமாக் கற்கை நெறி யினை தொடர்ந்து வரும் 58 மாண வர்கள் கையொப்பம் இட்டு அனுப்பி வைத்துள்ள மகஜரில் மேலும் தெரி விக்கப்பட்டுள்ளதாவது,

தொழிற்நுட்பவியற்கல்லூரியிலே நூற்றுக்கணக்கான மாணவர்கள் கல்வி கற்கும் கொரி Korea அரசா ங்கத்தால் கட்டப்பட்ட எமது கட்டட த்தில் உள்ள வகுப்பறைகளின் மேற் கூரையில் உள்ள புறாக்களின் எச்சம் காரணமாக மாணவர்கள் அனைவரும் மிகுந்த சிரமத்திற்கு உள்ளாகி வருகின்றோம். இதனால் தோல் நோய் மற்றும் ஒவ்வாமை நோய்கள் மாணவர்களாகிய எம் அனைவருக்கும் ஏற்படக்கூடிய வாய்ப்புகள் உள்ளன. ஆகையால் கட்டடத்தின் மேற்கூரையைச் சுத்தம் செய்து அவற்றுள் புறாக்கள் வரா மல் தடை செய்து தருமாறு மிகவும் பணிவன்புடன் கேட்டுக் கொள்கி ன்றோம். அத்துடன் பின்வரும் விட யங்களையும் முன்வைக்கின்றோம்.

1. வகுப்பின் கூரை இடுக்குக ளிலிருந்து நீண்ட காலமாக பறவை க்கழிவுகள் மற்றும் புழுக்கள், பேன் கள் போன்றன வகுப்பறையில் விழுவதனால் மாணவர்களுக்கு தோல் நோய்களான கடி, தோல் நிறமாதல் மற்றும் ஒவ்வாமை நோய் கள் என்பன தொடர்ந்து ஏற்பட்ட வண்ணமுள்ளன.

2. வகுப்பறையின் மேற்கூரைக ளில் புறாக்கள் பலவற்றின் எச்ச ங்கள், புழுக்கள் மற்றும் பல ஏராள மான இறந்த புறாக்களின் அழுகிய உடல்கள் என்பன காணப்படுகின் றன.

3. வகுப்பு நடைபெறும் நேரங் களில் மேற்புறக் கூரைகளில் பற வைகளின் நடமாட்டம் காணப்படு வதால் பாடங்களில் ஓர்முகமாகக் கவனம் செலுத்த முடியாமலும் தூசுப் பொருட்கள், புறா எச்சங்கள் அதிக ளவு மாணவர்கள் மீதும், மேசைகள் மீதும் விழுவதனால் கல்விச் செயற் பாடுகளில் தொடர்ந்து ஈடுபடுவ தற்கும் இடையூறு ஏற்படுகின் றது என மேலும் தெரிவிக்கப்பட் டுள்ளது. (இ

## மணவாளக்கோல விழா

(யாழ்ப்பாணம்)

நீர்வேலி கந்தசுவாமி கோவில் மனவாளக் கோலவிழா நாளை மறுதினம் 3 ஆம் திகதி செவ்வாய் க்கிழமை தைப்பூசத் தினத்தன்று மாலை 5 மணிக்கு விசேட பூசைக ளுடன் ஆரம்பமாகி முருகப்பெரு மான் மஞ்சத்தில் ஆரோகணித்து வெளிவீதி உலாவரும் காட்சி இடம் பெறவுள்ளது. (இ

# புதிய பேருந்து கட்டணங்கள் இன்று முதல் நடைமுறைக்கு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட தூர சேவைப் பேரு ந்து உரிமையாளர் சங்கம் இன்று முதல் புதிய பேருந்து கட்டண அற வீட்டை நடைமுறைப்படுத்தவுள் ளது என சங்கத்தின் தலைவர் எம். சிவபரன் அறிவித்துள்ளார்.

எரிபொருள்களின் விலைகள் குறைக்கப்பட்டதையடுத்து 7 வீதம் முதல் 10 வீதம் வரையிலான கட்ட ணக் குறைப்பைச் செய்துள்ளதா கவும் இக்கட்டணக் குறைப்பு இன்று முதல் நடைமுறைக்கு வரவுள்ளதா கவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை இந்தக் கட்டணக் குறைப்பு விபரங்கள் போக்குவரத்து ஆணைக்குழுவின் அனுமதியுடன் நடைமுறைப்படுத்தப்படுகிறது.

இந்தக் கட்டண விபரங்கள் பய ணிகளின் நன்மை கருதி ஒவ்வொரு பேருந்திலும் ஒட்டப்பட்டுள்ளதாக யாழ்ப்பாண தூர சேவைப் பேருந்து உரிமையாளர் கம்பனியின் தலை வர் மேலும் தெரிவித்துள்ளார். (இ

## மணவாளக்கோலமும் சங்காபிஷேகமும்

(யாழ்ப்பாணம்)

கோண்டாவில் அருள்மிகு ஸ்ரீ சாமுண்டாதேவி சமேத ஞான வைர வர் தேவஸ்தான வருடாந்த மணவா ளக்கோல பெருவிழாவும் அஷ்டோ த்தர சங்காபிஷேகமும் (108) எதிர்வ ரும் 6 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெற வுள்ளது.

மாலை 5.30 மணிக்கு வசந்த மண்டப பூசை நடைபெற்று சுவாமி வெளிவீதி உலாவரும் காட்சி இடம்பெ றும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (இ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரதேச சபை, கரைச்சி, கிளிநொச்சி
# ප්‍රාදේශීය සභාව කරච්චි, කිලිනොච්චිය
# PRADESHIYA SABHAI, KARACHCHI, KILINOCHCHI

## பொது அறிவித்தல்-2015 கரைச்சிப் பிரதேசசபை கிளிநொச்சி

**01.பட வரைஞராக பதிவு செய்தல்**

2015 ஆம் ஆண்டு பட வரைஞராக பதிவு செய்வதற்கு விரும்புவோரும் ஏற்கனவே எமது சபையில் பதிவு செய்துள்ளவர்களும்,2015 ஆம் ஆண்டு பெப்ரவரி 16 ஆம் திகதிக்கு முதல் தமது பதிவுகளை மேற்கொள்ளவும். புதுப்பித்துக்கொள்வோர் தலைமை அலுவலகத்துடன் அலுவலகநேரத்தில் தொடர்புகொள்ளவும்.

**02.வியாபார உரிம அனுமதிப்பத்திரம் - 2015**

கரைச்சிப் பிரதேசசபையின் நிர்வாக எல்லைக்குள் வியாபாரம் செய்வோர் மற்றும் பிரதேசத்திற்குள் பொருட்களை விநியோகிப்போர் உரிய விண்ணப்பப்படிவத்தை கரைச்சி, முரசுமோட்டை உப அலுவலகங்களில் 2015 ஆம் ஆண்டு பெப்ரவரி 16 ஆம் திகதிக்குள் பெற்று அதனைப் பூரணப்படுத்தி சம்பந்தப்பட்ட உப அலுவலகங்களில் சமர்ப்பித்து உரிய கட்டணங்களை 2015.02.28 ஆம் திகதிக்கு முன்னர் செலுத்தி வியாபார அனுமதிப் பத்திரத்தை பெற்றுக் கொள்ளவும். 2015.03.31 ஆம் திகதிக்கு முன்னர் வியாபார அனுமதிப் பத்திரத்தை பெற்றுக்கொள்ளாதவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**03.சூழல் பாதுகாப்புஉரிமம் (EPL-2015)**

கரைச்சிப் பிரதேச சபையின் நிர்வாக எல்லைக்குள் சிறியமற்றும் நடுத்தர வியாபார/ தொழில் முயற்சிகளில் ஈடுபடும் சகலரும் தலைமை அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு சூழல் பாதுகாப்பு உரிமத்தை 2015.02.16 ஆம் திகதிக்கு முன்னர் பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன். சூழல் பாதுகாப்பு உரிமத்தைப் பெற்றுக் கொள்ள தவறுபவர்கள் 2015 ஆம் ஆண்டு மேற்குறிப்பிட்ட வியாபார/ தொழில் நடவடிக்கைகளில் ஈடுபட அனுமதிக்கப்படமாட்டார்கள் என்பதனையும் அறியத்தருகின்றேன்.

**04.துவிச்சக்கர வண்டி, மிருகங்களின் உரிமம்**

கரைச்சிப் பிரதேசசபையின் நிர்வாக எல்லைக்குள் துவிச்சக்கர வண்டிகள் வளர்ப்பு நாய்கள் வைத்திருப்போர் 2015.03.31 ஆம் திகதிக்கு முன் சம்பந்தப்பட்ட உப அலுவலகங்களில் உரிய கட்டணங்களை செலுத்தி 2015 ஆம் ஆண்டிற்கான வாகன மிருக உரிமங்களைப் பெற்றுக்கொள்ளவும்.

**05.வீடுகள், கட்டடங்கள், மதில்கள், மலசலகூடங்கள், கிணறுகள் அமைத்தலும், புதுப்பித்தல்/ திருத்தவேலைகள் செய்தலும்**

**(5-1).** எமது நிர்வாகத்திற்கு உட்பட்டபிரதேசத்தில் மேற்படி அமைப்பு வேலைகளை அனுமதியின்றி மேற்கொள்ளல் வீடமைப்பு நகர சீர்திருத்த கட்டளைச்சட்டம் பிரிவு- 268 இன் பிரகாரம் தண்டனைக்குரிய குற்றமாகும். எனவே உரியவிண்ணப்பப்படிவங்களை சம்பந்தப்பட்ட உப அலுவலகங்களில் பெற்றுசபையின் முன் அனுமதிபெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன். அவ்வாறு முன் அனுமதி பெறப்படாத கட்டடங்கள் யாவும் எவ்வித நட்டஈடும் வழங்கப்படாது சபையினால் அகற்றப்படும்.

**(5-2).**ஏற்கனவே அனுமதி பெற்று ஒரு வருடகாலத்தில் கட்டட வேலைகள் பூர்த்தியாகாதவிடத்துஅவ் விண்ணப்பதாரிகள் அனுமதியினை புதுப்பித்துக்கொள்வதோடுகட்டடத்தினைப் பூர்த்திசெய்த விண்ணப்பதாரிகள் உரியஅமைவுச்சான்றிதழைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

**06.வீதி ஒழுங்கினைப் பேணுதல்**

கிளி.நகரமையப் பகுதியில் அதிகரித்தபோக்குவரத்துக் காரண மாக, விபத்துக்களைத் தவிர்த்துக் கொள்ளும் முகமாக வியாபார நிலையங்களிற்கு முன்னால் பொருட்களை வெளியேவைத்து விற்பனை செய்வது தடை செய்யப்பட்டுள்ளது. அவற்றினை அனுசரித்து நடக்குமாறு வர்த்தக நிலைய உரிமையாளர்களிற்கு அறியத்தருகின்றேன்.

**07.விளம்பரங்களை அமைத்தல் / காட்சிப்படுத்தல்**

கரைச்சிப் பிரதேசசபையின் நிர்வாக பிரிவில் உள்ள பொதுவீதிகளின் இருமருங்கிலும் வர்த்தக நிலையங்களின் முகப்புக்களிலும் பொருத்தப்படும்/காட்சிப்படுத்தப்படும் விளம்பரங்களை 2015.02.16 ஆம் திகதிக்குமுன் உரிய கட்டணத்தைச் செலுத்தி சபையின் அனுமதியினைப் பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன். அனுமதி பெறப்படாத முகவர்கள் /நிறுவனங்கள் /வர்த்தக நிலைய உரிமையாளர்கள் மீதுநடவடிக்கை எடுக்கப்பட்டு சகல விளம்பரங்களும் உரிய நிலையங்களில் இருந்து 2015.03.31 ஆம் திகதிக்குப் பின் அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனையும் அறியத்தருகின்றேன்.

**கட்டணவிபரம் பின்வருமாறு**

| தொ.இல | விபரம் | பிளாஸ்ரிக் (01 சதுரஅடி) | துணி(01சதுரஅடி) |
|---|---|---|---|
| 1. | தனியார் வளைவுகளில் நிர்மாணிக்கப்படும் அல்லது காட்சிக்கு வைக்கப்படும் விளம்பரப்பலகைகள். | ரூபா.50.00 | ரூபா.25.00 |
| 2. | பிரதானபாதைக்கு தெரியக்கூடிய இடத்தினைப் பயன்படுத்தி பிரதானபாதைக்குஅருகில் நிர்மாணிக்கப்படும் அல்லது காட்சிப்படுத்தப்படும் விளம்பரப் பலகைகள் | ரூபா.60.00 | ரூபா.30.00 |
| 3. | உள்ளூராட்சிமன்றங்களின் வளைவுகளை பயன்படுத்திய வண்ணம் நிர்மாணிக்கப்படும் அல்லது காட்சிப்படுத்தப்படும் விளம்பரபலகைகள். | ரூபா.100.00 | ரூபா.50.00 |

**08.பொது இடங்களில் கழிவுகள் போடுதல் தொடர்பானஅ றிவித்தல்.**

கிளிநொச்சிகரைச்சிப் பிரதேசசபைக்குட்பட்டபிரதேசங்களில் கழிவுப் பொருட்களைஅனுமதியின்றிக் கொண்டுசெல்லல்,கொட்டுதல் ஆகியன பொது சுகாதாரத்தை கருத்திற்கொண்டு தடை செய்யப்பட்டுள்ளது. தவறின் பிரதேசசபையின் கட்டளைச்சட்டம் மற்றும் சுற்றுச் சூழல் பாதுகாப்புச் சட்டம போன்றவற்றின் பிரகாரம் சட்டநடவடிக்கை எடுக்கப்படும். மேலும் தங்களினால் அகற்றப்படும் திண்ம, திரவ கழிவுகள் பிரதேச சபையின் வாகனங்களின் ஊடாகவேஅகற்றப்படுதல் வேண்டும். உணவகங்களை நடத்துவோர் தமது திரவக்கழிவு நீரைவீதியின் பொதுகால்வாய் வழியாக திறந்துவிடுவதனால் பொதுமக்களுக்கு அசௌகரியமும், டெங்கு பரவும் அபாயமும் காணப்படுவதனால் மேற்படி செயற்பாட்டை மேற்கொள் பவர்களின்உணவகங்கள்பூட்டப்படுவதுடன்சட்டநடவடிக்கையும்எடுக்கப்படும்.

**09.தரகர் முறைநீக்கல்**

எமதுபிரதேசசபைஎல்லைக்குட்பட்டசந்தைகளில் தரகர் மூலமான நடைமுறை முற்றாகத் தடைசெய்யப்பட்டுள்ளது. அவற்றினை அனுசரித்து நடக்குமாறு வியாபாரிகள் வேண்டப்படுகின்றனர்.

**10.நடைபாதை வியாபாரம் தடைசெய்யப்பட்டுள்ளது.**

கரைச்சிப் பிரதேசசபையின் நிர்வாக எல்லைக்குள் அனைத்து விதமான நடைபாதை வியாபாரங்களும் தடைசெய்யப்பட்டுள்ளது. மீறுபவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. நா.வை.குகராசா**
**கரைச்சிப் பிரதேசசபை**
**கிளிநொச்சி.**

(கி-9977)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விபத்தில் காயமடைந்த மாணவன் உயிரிழப்பு

(குருமன்காடு)

வவுனியா விபத்தில் காயமடைந்த மாணவர்களில் ஒருவர் மரணம் அடைந்துள்ளார். வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயம் முன்பாக ஏ-9 வீதியில் நேற்று முன்தினம் நண்பகல் இடம்பெற்ற விபத்தில் காயமடைந்த மாணவர்களில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

வவுனியா மத்திய மகா வித்தியாலயத்தில் இருந்து ஏ-9 பிரதான வீதிக்கு மோட்டார் சைக்கிளில் பிரவேசித்த உயர்தர வகுப்பு மாணவர்கள் இருவர் கொழும்பில் இருந்து வவுனியா நோக்கி பயணித்த தனியார் பேருந்துடன் மோதி படுகாயமடைந்தனர்.

வவுனியா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட நிலையில் தோணிகல்லைச் சேர்ந்த எஸ்.துலக்சன் என்ற மாணவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார். கிருசாந்தன் என்ற மற்றைய மாணவர் தொடர்ந்தும் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார். பாடசாலைக்கு முன்னால் உள்ள பாதசாரிகள் கடவைக்கு அண்மித்து இடம்பெற்ற இந்த விபத்துத் தொடர்பாக வவுனியா போக்குவரத்து பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்

# சுகாதார தொண்டர்களுக்கு விரைவில் நிரந்தர நியமனம்

(கிளிநொச்சி)

**வடமாகாண சுகாதார தொண்டர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்குவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சின் வட மாகாண செயலாளர் இரவீந்திரன் தெரிவித்துள்ளார்.**

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள வைத்தியசாலைகளில் சுகாதாரத் தொண்டர்களாக சேர்த்துக் கொள்ளப்பட்டு பணிபுரிந்து வரும் சுகாதாரத் தொண்டர் தங்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கக் கோரி முல்லைத்தீவு மாவட்ட சுகாதார சேவைகள் பணிமனை முன்பாகவும் முல் லைத்தீவு மாவட்ட செயலகம் முன்பாகவும் கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர். இச் சுகாதாரத் தொண்டர்களின் கவனயீர்ப்புபோராட்டம்தொடர்பில் வினவிய போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடமாகாணத்தில் கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், யாழ்ப்பாணம் ஆகிய ஐந்து மாவட்டங்களில் 756 சுகாதார தொண்டர்களும் அமைய அடிப்படையில் 90 ஊழியர்களும் பணிபுரிந்து வருவதாகவும் இவர்களுக்கான நிரந்தர நியமனத்தை வழங்குவதற்கான நடவடிக்கைகளே முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை முல்லைத்தீவில்அடுத்தடுத்து இரு தினங்கள் கவனயீர்ப்பு பேரணி நடத்தப்பட்டமை தொடர்பிலும் சுகாதார தொண்டர்கள் தமது விசனத்தை தெரிவித்திருந்தனர்.

இவ்வாறு கவனயீர்ப்பு பேரணி நடத்தப்பட்டதனால் மிகுந்த சிரமங்களை எதிர்கொண்டதாகவும் அவர் மேலும் கூறினார். (அ-2-272)

# வளப்பற்றாக்குறையுடன் இயங்கும் மு/தேறாங்கண்டல் அ.த.க.பாடசாலை

முல்லைத்தீவுமாவட்டம் துணுக்காய் வலயத்தின் கீழ் இயங்கும் தேறாங்கண்டல் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை வளப்பற்றாக்குறைகளுடன் இயங்கி வருகிறது. சமீபத்தில்நடந்த பாடசாலையின்வருடாந்த இல்ல மெய்வல்லுநர் விளையாட்டுப் போட்டியில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட வடமாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் இதை நேரில் உறுதிப்படுத்தினார்.

ஏற்கனவே ரவிகரனின் 2014 ஆம் ஆண்டுக்குரிய பன்முகப்படுத்தப்பட்ட நிதி ஒதுக்கீட்டிலும் இப்பாடசாலையின் நூலகத்திற்கு நூல்கள் ஒதுக்கப்பட்டிருந்தன.




இதேவேளை முல்லைத்தீவில் மிகவும் பின்தங்கிய கிராமங்களுள் ஒன்றாகிய தேறாங்கண்டல் உள்ளது. இம் மக்கள் பெரும் வாழ்வாதார நெருக்கடியின் மத்தியிலும் பிள்ளைகளை பாடசாலைக்கு அனுப்புகின்ற நிலையில், பாடசாலையின் வளப் பற்றாக்குறை காரணமாக, பிள்ளைகளின்கற்றல்செயற்பாடுகள் பாதிக்கப்பட்டுள்ளதாக கிராம மக்கள் பிரதிநிதிகள் மற்றும பாடசாலை அதிபர், பாடசாலை அபிவிருத்திச சங்க பிரதிநிதிகள் ஆகியோர் சுட்டிக்காட்டினர்.

சீரான நூலகச் செயற்பாட்டுக்கு கட்டடம் இல்லாத நிலையும், விஞ்ஞான ஆய்வு சார் கற்கைகளுக்கு ஆய்வுகூட பொருட்கள் மற்றும் கற்பித்தல் நடவடிக்கைகளின் சீரான செயற்பாட்டிற்கு கட்டட வசதி இல்லாத நிலையும் காணப்படுகிறது. மேலும் சிறுவர்களுக்கான சிறுவர் முற்றமும் முழுமை பெறாத நிலையில் உள்ளது. இரு கட்டடங்கள் புனரமைப்பு பணிகள் பூரணப்ப டுத்தப்படாத நிலையில் உள்ளன.

அங்கு நிலவுகின்ற உட்கட்டமைப்பு வளப் பற்றாக்குறைகளை நேரில் உறுதிப்படுத்திய ரவிகரன் இது குறித்து உரிய இடங்க ளுக்கு தெரியப்படுத்துவதாக தெரிவித்தார்.(அ-2-250)

# முல்லையின் இரு பிரதேச சபைகளில் தேர்தல்

(மல்லாவி)

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள புதுக் குடியிருப்பு கரைதுறைப்பற்று ஆகிய பிரதேச செயலக பிரிவுகளுக்குரிய பிரதேச சபை தேர்தல்கள் எதிர்வரும் 28 ஆம் திகதி நடைபெறுமென தேர்தல் ஆணையாளர் மகிந்த தேசப்பிரிய அறிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக் கையில்,

கடந்த 2011 ஆம் ஆண்டு நடைபெற்ற உள்ளூராட்சி மன்ற தேர்தல்களின் போது புதுக்குடியிருப்பு, கரைதுறைப்பற்று பிரதேச சபைகளுக்கான தேர்தலை நடத்த முற்பட்ட போதும் அக் காலப் பகுதியில் இப்பிரதேசங்களில் மக்களின் மீள் குடியேற்றம் கண்ணிவெடி அகற்றல் என் பன பூரணமாக முடிவுறாத நிலையில் தேர்தல்கள் ஒத்தி வைக்கப்பட்டன.

மீண்டும் இவ்வாண்டு மார்ச் மாதம் 10 ஆம் திகதியளவில் பிரதேச சபை தேர்தல்களை மேற்படி இடங்களில் நடத்த முற்பட்ட போது அவை பல்வேறு காரணங்களால் ஒத்திவைக்கப்பட்டதாகவும் இறுதியாக எதிர்வரும் 28 ஆம் திகதி இத் தேர்தல்களை நடத்துவதற்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப்படுவதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (அ-2-15)



வ/நெடுங்கேணி சின்னடம்பன் பாரதி வித்தியாலயத்தின் இவ்வாண்டுக்கான வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நேற்றுமுன்தினம் பாடசாலையின் அதிபர் கெங்கநாதன் தலைமையில் நடைபெற்றபோது.... (படங்கள்:- குருமன்காடு செய்தியாளர்)

# விண்ணப்பப்படிவங்களை மக்களிடம் மீளவும் ஒப்படைத்தது மின்சார சபை

## குழப்பத்தில் மக்கள்

(மல்லாவி)

மாங்குளத்திலுள்ள மின்சார பொறியியலாளர் அலுவலகத்தில் வடக்கின் வசந்தம் திட்டத்தின் மூலம் மின்சாரத்தைப் பெற்றுக் கொள்வதற்காக விண்ணப்பித்த மக்களுக்கு பல மாதங்கள் கடந்த நிலையில் மின்னிணைப்பு ஏற்படுத்தப்படாது பொதுமக்கள் விண்ணப்பித்த விண்ணப்பப்படிவங்களை மீளவும் அவர்களிடம் ஒப்படைப்பதால் பொது மக்கள் மத்தியில் குழப்பநிலை தோன்றியுள்ளதுடன் இதனால் தாம் மன உளைச்சல் அடைந்துள்ளதாக பாதிக்கப்பட்ட பொது மக்கள் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பில் தெரியவருவதாவது,

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள மாங்குளம் பிராந்திய மின்பொறியியலாளர் அலுவலகத்திற்கு உட்பட்ட துணுக்காய், மாந்தை கிழக்கு பிரதேச செயலக பிரிவுகளுக்கு உட்பட்ட மக்களும் ஒட்டுசுட்டான் நெடுங்கேணி ஆகிய பகுதிகளிலுள்ள மக்களும் வடக்கின் வசந்தம் திட்டத்தின் மூலம் மின்சாரத்தைப் பெறுவதற்காக பல மாதங்களுக்கு முன்னர் விண்ணப்பப்படிவங்களை மேற்படி அலுவலகத்தில் ஒப்படைத்தனர்.

ஆயினும் இவர்களுக்கான மின்சாரத்தை வழங்க எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை.

இவ்வாறு இருக்கையில் கடந்த சில நாட்கள் தொடக்கம் மின்சாரம் வழங்கப்படாது இருக்கும் மக்களது விண்ணப்பப்படிவங்களை திருப்பி அவர்களிடமே கையளிப்பதால் மக்கள் மத்தியில் குழப்ப நிலை தோன்றியுள்ளது.

இதனால் தாம் பல்வேறு சிரமங்களுக்கு உள்ளாகியிருப்பதாகவும் இது தொடர்பில் முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் மற்றும் கிளிநொச்சி, வவுனியா ஆகிய மாவட்டங்களின் பிராந்திய மின் அத்தியட்சகர்கள் கவனத்தில் எடுத்து தமக்கு மின்சாரம் கிடைக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு பாதிக்கப்பட்ட மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (அ-2-15)

# மாற்றுத்திறனாளிகளுக்கான மருத்துவமனை மாங்குளத்தில்

(கிளிநொச்சி)

மாற்றுத்திறனாளிகளுக்கான புனர்வாழ்வு மருத்துவமனையொன்று மாங்குளம் பகுதியில் அமைக்கப்படவுள்ளதாக வடமாகாண சுகாதார அமைச்சர் பா.சத்தியலிங்கம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கையில் அதிகமாக மாற்றுத்திறனாளிகள் வடமாகாணத்தில் காணப்படுவதுடன் யுத்தத்தின் தாக்கத்தால் பாதிப்படைந்த இவர்களுக்கு புனர்வாழ்வு அளிக்கும் வகையில் வடமாகாணத்திற்கென முதலாவது புனர்வாழ்வு மருத்துவமனை மாங்குளம் பகுதியில் அமைக்கப்படவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (அ-2-272)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டார்லிங்

## திரை விமர்சனம்



காதல் தோல்வி காரணமாக தற்கொலை முடிவுக்கு வருகிறார் ஜி.வி. பிரகாஷ். இவரின் நண்பரான பாலா, சினிமாவில் இயக்குநர் ஆக முடியாததை காரணம் சொல்லி தானும் தற்கொலை செய்ய இருப்பதாக கூறி இவருடன் இணைகிறார்.

பாலாவின் தோழியான நிக்கி கல்ராணி, தானும் தற்கொலை செய்ய இருப்பதாக கூறி இவர்கள் மூவரும் தற்கொலை செய்வதற்காக ஒரு பங்களாவிற்கு செல்கிறார்கள்.

ஆனால் பாலாவும் நிக்கி கல்ராணியும் ஜி.வி. பிரகாஷின் தற்கொலையை தடுப்பதற்காகவே அவருடன் பொய் சொல்லி செல்கிறார்கள். இவர்கள் செல்லும் வழியில் தற்கொலைக்கு முயற்சி செய்து வரும் கருணாசும் இவர்களுடன் இணைகிறார்.

அனைவரும் பங்களாவிற்கு செல்கிறார்கள். அங்கு பாலாவும், நிக்கி கல்ராணியும் ஜி.வி. பிரகாஷின் தற்கொலையை தள்ளிபோட்டு வருகிறார்கள்.
மேலும் நிக்கி கல்ராணி, ஜி.வி.பிரகாஷை ஒருதலையாக காதலித்து வருகிறார்.

ஒரு நாள் ஜி.வி. பிரகாஷ் தற்கொலை செய்தே ஆக வேண்டும் என்ற முடிவு வருகிறார்.

அதற்கு பாலா, தற்கொலை செய்வதற்குமுன் நிக்கி கிலானியை ஒரேயொரு முறை முத்தம் கொடுத்துவிட்டு வா என்று சொல்ல, ஜி.வியும் நிக்கி கல்ராணிக்கு முத்தம் கொடுக்க செல்கிறார்.

அப்போது அந்த பங்களாவில் இருக்கும் ஒரு பேய், நிக்கி கல்ராணியின் உடம்பிற்குள் சென்று ஜி.வி.யை அடித்து துரத்துகிறது.

இதை நண்பர்களான பாலா, கருணாசிடம் கூறுகிறார். அவர்கள் இதை நம்ப மறுக்கிறார்கள். இவர்களையும் பேய் வாட்டி எடுக்கிறது. நிக்கி கல்ராணியை ஜி.வி.பிரகாஷ் தொடும்போதெல்லாம் இந்த பேய் நிக்கி கல்ராணியின் உடம்பினுள் புகுந்துக் கொண்டு பேய் ஆட்டம் ஆடுகிறது.

இதற்கிடையில் ஜி.வி.பிரகாசிற்கு நிக்கி கல்ராணி காதலித்து வருவது தெரிகிறது. ஜி.வி.க்கும் நிக்கி மீது காதல் ஏற்படுகிறது.

தன் காதலை நிக்கியிடம் சொல்ல முயற்சிக்கும் போதெல்லாம் அந்த பேய் நெருங்க விடாமல் தடுக்கிறது.

நிக்கி மீது பேய் இருப்பது கண்டு ஜி.வி.பிரகாஷ் வருந்துகிறார். அவளை காப்பாற்ற பேயை விரட்ட முயற்சி செய்கிறார்.

இந்த பேய் எதற்காக நிக்கி கல்ராணி உடம்பிற்குள் வருகிறது? பேயிடம் இருந்து இவர்கள் மீண்டார்களா? இல்லையா? என்பதே மீதிக்கதை.

படத்தில் ஜி.வி.பிரகாஷ் நாயகனாக அறிமுகமாகியிருக்கிறார்.

முதல் படமே என்று தெரியாதளவிற்கு நடிப்பில் ஸ்கோர் பண்ணிருக்கிறார். தாடியுடன் வலம் வந்து பேய்க்கு பயந்து நடக்கும் காட்சிகளில் சிறப்பாக நடித்திருக்கிறார்.

காமெடியிலும் கலக்கியிருக்கிறார். கிளைமாக்ஸில் ஆக்ஷன் காட்சிகளில் மிரட்டி மாஸ் ஹீரோ அந்தஸ்தை பெருகிறார். நாயகியாக நடித்திருக்கும் நிக்கி கல்ராணி ஆகியோர் பேய் ஆட்டம் ஆடியிருக்கிறார்கள்.


நண்பர்களாக வரும் பாலா, கருணாஸ் மற்றும் மந்திரவாதியாக வரும் நான் கடவுள் ராஜேந்திரன் ஆகியோர் நடிப்பால் தியேட்டரில் சிரிப்பு அலை. நீண்ட இடைவெளிக்குப் பிறகு காமெடியில் களம் இறங்கியிருக்கிறார் கருணாஸ்.

அவருக்கு இப்படம் நல்ல ரீஎன்ட்ரியாக அமைந்திருக்கிறது. சமீப காலமாக பேய் படங்களுக்கு ரசிகர்கள் மத்தியில் பெரும் வரவேற்பு பெற்று வருகிறது. இதை புரிந்து கொண்ட இயக்குநர் சாம் ஆண்டன், வழக்கமான பேய் படங்கள் என்றாலே ஒரு பங்களா பாணியில் திரைக்கதை அமைத்து இயக்கியிருக்கிறார்.


படம் ஆரம்பம் முதல் இறுதி வரை ரசிகர்களுக்கு திகிலோடு சிரிப்பையும் வரவழைத்திருக்கிறார்.

காமெடிக்கு பஞ்சம் வைக்காமல் திரைக்கதையை நகர்த்தியிருப்பது அருமை.

ஜி.வி.பிரகாஷின் இசையில் பாடல்கள் அனைத்தும் ரசிக்கும் ரகம். பின்னணி இசையில் கலக்கியிருக்கிறார். கிருஷ்ணன் வசந்தின் ஒளிப்பதிவு படத்திற்கு கூடுதல் பலமாக அமைந்திருக்கிறது. மொத்தத்தில் 'டார்லிங்' திகிலான காமெடி கலாட்டா.



# ஜீவா, பாபி சிம்ஹா இணையும் அடுத்த படம்?






கிருஷ்ணா, ரூபா மஞ்சரி நடிப்பில் வெளிவந்த யாமிருக்க பயமே படத்தின் இயக்குநர் டிகே. இவர் அடுத்து ஜீவாவை வைத்து படம் இயக்கவிருக்கிறார். "யாமிருக்க பயமே" படத்தினை தயாரித்த ஆர்.எஸ்.இன்ஃபோ எண்டர்டெயின்மெண்ட் எல்ரெட் குமார், இந்தப் படத்தினையும் தயாரிக்கிறார்.


பெயரிடப்படாத இந்தப் படத்தில் ஜீவா மற்றும் பாபி சிம்ஹா இருவரும் முக்கிய கதாப்பாத்திரங்களில் நடிக்கிறார்கள். இரண்டு கதாப்பாத்திரத்திற்கும் கதையில் மிக முக்கிய ரோல் இருப்பதாகவும் தெரிவித்துள்ளார்கள்.

கதாநாயகிகள் யார் என்பது இன்னும் முடிவாகவில்லை. விரைவில் படப்பிடிப்பு நடைபெறும் என்று அறிவித்துள்ளனர். முழுக்க முழுக்க காமெடி கலந்த த்ரில்லர் மற்றும் ஹாரர் படமாக இருக்கும் என்கிறது இயக்குநரின் நெருங்கிய வட்டாரம்.

# விஜய் செய்த உதவி, அஜித்தின் தனிமை!

### எஸ்.ஜே.சூர்யா ஓபன் டாக்





தமிழ் சினிமாவிற்கு வாலி, குஷி, நியூ என தொடர் ஹிட் படங்களை கொடுத்தவர் எஸ்.ஜே.சூர்யா. இவரது இயக்கம் நடிப்பில் இசை படம் திரைக்கு வந்துள்ளது.

இப்படம் குறித்த ப்ரோமோஷன் நிகழ்ச்சியில் விஜய், அஜித் குறித்து மனம் திறந்துள்ளார் இவர். இதில் 'விஜய் அவ்ளோ பெரிய ஹீரோ இன்னும் எனக்காக அவர் மனசுல இவ்ளோ பெரிய இடம் கொடுத்திருப்பார்னு நான் நெனைக்கவே இல்ல.

இத்தனை வருஷம் கழிச்சு ஒரே வார்த்தைல நான் 10 வருஷம் சினிமாவுல இல்லை என்பதை மக்கள் மறக்குற மாதிரி செய்துவிட்டார்.

நான் கடந்து வந்த பாதைக்கு முதல் விதை போட்டவரு அஜித். நல்ல மனுஷன் இப்போ கொஞ்சம் நாளா தன்னை தனிமைபடுத்திட்டாரு, அவரு போன் கூட யூஸ் பண்றதில்லை. மெயில் அனுப்பியிருக்கேன் என்னோட இசை டிரெய்லரை, அஜித் பார்த்திருப்பார் என்று நினைக்கிறேன்' என்று கூறியுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# தவளை இளவரசியும் குரங்கு அரக்கர்களும்!



...இளவரசி தொடர்ந்து நடந்தாள். தேவதை சொன்ன வீடு வந்தது. மாலை நேரத்தில் ஆறு அன்னப் பறவைகள் வீட்டுக்கு வந்தன. தான் அவர்களைக் காப்பாற்ற வந்திருப்பதாகத் தெரிவித்த இளவரசி, தேவதை கூறியதையும் அவர்களிடம் சொன்னாள்.

பிறகு அண்ணன்களுக்காக அவர்களிடம் ஒரு வார்த்தையும் பேசாமல் தொடர்ந்து சட்டையைப் பின்னிகொண்டிருந்தாள்.

ஒருநாள், பக்கத்து நாட்டு இளவரசன் வேட்டைக்கு வந்தான். காட்டுக்குள் வழி தவறியவன், இளவரசி இருந்த வீட்டை வந்தடைந்தான். "ஏதாவது சாப்பிடக் கிடைக்குமா?" என்று கேட்டான்.

இளவரசி பதில் பேசாமல், உணவை அளித்தாள். அவளின் அழகும் அமைதியும் அவனுக்கு பிடித்துப் போயின. "நீ என்னைக் கல்யாணம் செய்துகொள்கிறாயா?" என்று கேட்டான்.

இளவரசி பதில் சொல்லவில்லை. அந்த இளவரசன், அவளைத் தன் நாட்டுக்கு தூக்கிச் சென்றான். அவள் போகும் வழியில் நூல் உருண்டையை உருட்டியபடியே சென்றாள்.

மாலையில் வீட்டுக்கு வந்த அன்னப் பறவை சகோதரர்கள், அவள் விட்டுச் சென்ற நூல் உருண்டையைப் பார்த்து, அதன் வழியே அரண் மனையை அடைந்தனர். அங்கே இளவரசன், இளவரசியை மணம் முடித்திருந்தான். அன்னப்பறவைகள் தனமும் மாலையில் வந்து தங்கையைப் பார்த்து விட்டு, அருகில் இருந்த மரங்களில் தங்கிக் கொண்டன. இளவரசிக்குக் குழந்தை பிறந்தது.

அந்த நாட்டு மந்திரிக்கு இளவரசியைப் பிடிக்கவேயில்லை. அதனால், இளவரசி தூங்கும் போது, குழந்தையை திருடிச் சென்று காட்டில் போட்டுவிட்டான். அந்தக் குழந்தையை அன்னப் பறவைகள் எடுத்துச் சென்றன.


அடுத்த நாள், "குழந்தை எங்கே?' என இளவரசன் கேட்டபோது, அவள் பதில் சொல்லாமல் சட்டையைப் பின்னிக்கொண்டிருந்தாள். அதற்கு மேல் இளவரசன் ஏதும் கேட்கவில்லை.

இரண்டாவது குழந்தைக்கும், மூன்றாவது குழந்தைக்கும் இதே போல நடந்தது. அப்போதும் இளவரசி பேசவில்லை. ஆத்திரமடைந்த இளவரசன், அவளைக் கொல்வதற்கு உத்தரவிட்டான்.

அப்போது இளவரசி சட்டைகளைப் பின்னி முடித்திருந்தாள். ஆறாவது சட்டையில் கை மட்டுமே பாக்கி.

அவளைக் கொலைக் களத்துககு அழைத்துச்சென்ற போது ஆறு அன்னப்பறவைகள் பறந்து வந்தன. இளவரசி தன் கையில் இருந்த சட்டைகளை அவற்றின் மீது வீசினாள். அன்னப் பறவைகள், மனிதர்களாக மாறின. ஆறாவது சட்டையில் கை இல்லாததால், ஆறாவது அண்ணனுக்கு கைக்குப் பதிலாக, அன்னத்தின் இறக்கையே இருந்தது.

சகோதரர்கள், சாபம் விலகி



மனித உரு எடுத்ததும் அவர்களைப் பார்த்து ஆனந்தக் கண்ணீர் வடித்து, பேச ஆரம்பித்தாள் இளவரசி. நடந்ததை அறிந்த இளவரசன், மந்திரியைச் சிறையில் அடைத்தான். அன்னப் பறவைகளின் பாதுகாப்பில் இருந்த குழந்தைகள் அரண்மனைக்குக் கொண்டுவரப்பட்டன.

பிறகு அவர்கள், தந்தையைச் சந்தித்து நடந்ததைச் சொன்னார்கள். ராஜாவுக்கு ஏகப்பட்ட சந்தோஷம். அப்படியானால், அந்தச் சூனியக்கார ராணி? அவள் ஏற்கனவே சிறையில் அடைக்கப்பட்டிருந்தாள். (முற்றும்)

## கல்பனா சாவ்லா



விண்வெளிக்கு பயணம் செய்த இந்தியாவின் முதல் பெண்மணி என்ற பெருமைக்குரியவர் கல்பானா சாவ்லா,

இவர், இந்தியாவிலுள்ள ஹரியானா மாநிலத்தில் கர்னல் என்ற ஊரில் 1961 ஆம் ஆண்டு ஜ10லை மாதம் 1 ஆம் திகதி பனாரஸ்லால் சாவ்லாவுக்கும், சன்யோகிதா தேவிக்கும் மகளாக, இவர் ஒரு பஞ்சாபி குடும்பத்தில் பிறந்தார். இவருக்கு சுனிதா மற்றும் தீபா என்ற இரண்டு சகோதரிகளும், சஞ்சய் என்ற சகோதரனும் இருந்தனர். கல்பானா சாவ்லா, தனது ஆரம்ப கல்வியை தனது ஊரில் உள்ள அரசு பள்ளியில் தொடங்கினார். 1982 இல் "பஞ்சாப் பொறியியல் கல்லூரியில்" விமான ஊர்தியியல் துறையில் கல்விப் பயின்று இளங்கலைப் பட்டமும் பெற்றார்.

இவர், 1983 இல் ஜீன் பி எர ரே ஹாரிசன் என்ற விமானப் பயிற்சி ஆசிரியரை மணம் முடித்தார். பின்னர், 1984 இல் அமெரிக்காவில் உள்ள "டெக்சாஸ் பல்கலைக்கழகத்தில்" விண்வெளிப் பொறியியல் துறையில் முதுகலைப் பட்டம் பெற்றார். 1986ல் பௌல்தேரில் உள்ள "கோலோரடோ பல்கலைக்கழகத்தில்" இரண்டாவது முதுகலைப் பட்டமும், பிறகு 1988ல் வெண்வெளி பொறியியல் துறையில் முனைவர் பட்டமும் பெற்றார்.

1988 ஆம் ஆண்டு, நாசா அமெஸ் ஆராய்ச்சி கூடத்தில் "ஒசெர்செட் மேதொட்ஸ்இன்க்யின்" துணைத்தலைவராக பணியாற்றிய அவர் விஃஎஸ்.டி.ஓ.எல் (V/STOL) இல் சி.எஃடி (CFD) ஆராய்ச்சி செய்தார். விமானம் மற்றும் கிளைடர்களை ஓட்டக் கற்றுக்கொடுக்க தகுதிச் சான்றிதழ் பெற்றதோடு மட்டுமல்லாமல், ஓட்டவும் அனுமதி பெற்றிருந்தார்.

1995 ல் நாசா விண்வெளி வீரர் பயிற்சிக் குழுவில் சேர்ந்த அவர், அடுத்த இரண்டு ஆண்டுகளில் "கொலம்பிய விண்வெளி ஊர்தியான எஸ்.டி.எஸ்-87 (STS-87) இல்" பயணம் செய்வதற்குத் தேர்வு செய்யப்பட்டார். 1997 ஆம் ஆண்டு மேற்கொண்ட இந்த பயணத்தில், சுமார் 372 மணி நேரம் விண்வெளியிலிருந்து சாதனைப் புரிந்து வெற்றிகரமாக பூமி திரும்பினார். இதன்மூலம் விண்வெளிக்குச் சென்ற முதல் இந்தியப் பெண் என்ற பெருமையும் பெற்றார்.

மீண்டும், அடுத்த ஐந்து ஆண்டுகளில் தன்னுடைய இரண்டாவது பயணத் திற்குத் தயாரானார். ஈற்றில், 2003ஆம் ஆண்டு ஜனவரி 16-ந் தேதி விண்வெளி ஆராய்ச்சிக்காக, அமெரிக்காவின் கென்னடி நிலையத்திலிருந்து கொலம்பியா விண்கலம் எஸ்.டி.எஸ்-107 (STS-107) அனுப்பி வைக்கப்பட்டது. இந்திய வம்சாவளி பெண்ணாகிய கல்பனா சாவ்லா, உள்ளிட்ட 7 பேர் அதில் பயணித்தனர். 16 நாள் ஆய்வை முடித்து வெற்றிகரமாக பூமிக்குத் திரும்பிய அவர்கள் சென்ற அந்த விண்கலம், அமெரிக்காவின் டெக்ஸாஸ் வான்பரப்பில் வெடித்துச் சிதறியது. கல்பனா சாவ்லா உள்பட ஏழு விலைமதிப்பற்ற விண்வெளி வீரர்களும் அதில் பலியாகினர்.

ஒரு சாதாரண பள்ளியில் படித்து, பலர் வியக்கும்படி தன் கனவுகளை நனவாக்கி வாழ்ந்து காட்டியவர் கல்பனா சாவ்லா. பெண்ணினத்தின் பெருமைக்கு எடுத்துக்காட்டாய் விளங்கிய அவர், இந்தியாவிற்கு உலகப் புகழ் சேர்த்தவர் என்றால் அது மிகையாகாது. 'கனவுகளைக் கண்டு அந்த கனவுகளை நனவா க்குவதற்கு விடாமுயற்சியோடும், முழுமனதோடும் செறபட்டால் வெற்றி நிச்சயம்' என்ற உண்மையை உலகிற்கு உணர்த்தி சென்ற வீரப்பெண் அவர்.

## 02.2015 01 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1662 - ஒன்பது மாத முற்றுகையின் பின்னர் சீனாவின் இராணுவத் தளபதி கொக்சிங்கா தாய்வான் தீவைக் கைப்பற்றினார்.
- 1788 - ஐசாக் பிறிக்ஸ் மற்றும் வில்லியம் லோங்ஸ்ட்ரீட் ஆகியோர் நீராவிப் படகுக்கான காப்புரிமம் பெற்றனர்.
- 1793 - ஐக்கிய இராச்சியம் மற்றும் நெதர்லாந்து மீது பிரான்ஸ் போரை அறிவித்தது.
- 1832 - ஆசியாவின் முதலாவது அஞ்சல் (தபால்) வண்டி சேவை கண்டியில் ஆரம்பமாகியது.
- 1864 - டென்மார்க்-புரூசியா போர் ஆரம்பமானது.
- 1880 - யாழ்ப்பாணத்திற்கும் பருத்தித்துறைக்குமிடையில் முதலாவது தபால் வண்டி சேவையை ஆரம்பித்தது.
- 1884 - ஒக்ஸ்ஃபோர்ட் ஆங்கில அகராதியின் முதற்பதிப்பு வெளியானது.
- 1893 - தொமஸ் எடிசன் தனது முதலாவது அசையும் படத்துக்கான படப்பிடிப்பகத்தை நியூ ஜேர்சியில் கட்டி முடித்தார்.
- 1913 - உலகின் மிகப்பெரிய தொடருந்து நிலையம் Grand Central Terminal நியூயோர்க் நகரில் திறக்கப்பட் டது.
- 1924 - சோவியத் ஒன்றியத்தை ஐக்கிய இராச்சியம் அங்கீகரித்தது.
- 1946 - நோர்வேயின் ட்றிகிவா லீ ஐக்கிய நாடுகள் சபையின் முதலாவது செயலாளர் நாயகமாகத் தெரிவு செய்யப்பட்டார்.
- 1958 - எகிப்து மற்றும் சிரியா ஆகியன இணைந்து 1961 வரையில் ஐக்கிய அரபுக் குடியரசு என ஒரு நாடாக இயங்கின.
- 1979 - 15 ஆண்டுகள் நாடு கடந்த நிலையில் வாழ்ந்த ஈரானின் மதத்தலைவர் அயத்தொல்லா கொமெய்னி டெஹ்ரான் திரும்பினார்.
- 2005 - நேபாள மன்னர் ஞானேந்திரா நாடாளுமன்றத்தைக் கலைத்து நாட்டைத் தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தார்.

### பிறப்புகள்

- 1905 - எமிலியோ செக்ரே, நோபல் பரிசு பெற்றவர் (இ. 1989)
- 1931 - போரிஸ் யெல்ட்சின், ரஷ்ய முன்னாள் அதிபர் (இ. 2007)

### இறப்புகள்

- 1958 - கிளிண்டன் டேவிசன், நோபல் பரிசு பெற்ற அமெரிக்க இயற்பியலாளர் (பி. 1888)
- 1964 - பம்மல் சம்பந்த முதலியார், தமிழ் நாடகத்துறை யின் முன்னோடி (பி. 1873)
- 1976 - வேர்னர் ஐசன்பேர்க், நோபல் பரிசு பெற்ற ஜேர் மானிய இயற்பியலாளர் (பி. 1901)
- 1976 - ஜோர்ஜ் விப்பிள், நோபல் பரிசு பெற்ற அமெரிக்க அறிவியலாளர் (பி. 1878)
- 1986 - அல்வா மீரடல், நோபல் பரிசு பெற்ற சுவீடன் எழுத தாளர் (பி. 1902)
- 1999 - வானம்பாடி யோகராஜ், வில்லிசை கலைஞர், நாடக ஆசிரியர், நடிகர், மேடைப்பாடகர் (பி.1948)
- **2003 - கல்பனா சாவ்லா, விண்வெளி வீராங்கனை** (பி. 1961)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் வாழ்க்கை வரலாறு...

இதில் ஒரு ரஜினி ஹீரோ. மற்றொரு ரஜினி பார்பர்! இவர் மகா கஞ்சன். இவருடைய செய்கைகள் வித்தியாசமாகவும், வயிறு குலுங்க சிரிக்க வைப்பதாகவும் இருக்கும். கடைசியில் தீபா துரோகம் செய்வதால், கொலை செய்து விடுவார்.

ஹீரோ ரஜினி - ஸ்ரீதேவி காதலை மென்மையாகச் சித்தரித்திருந்தார், மகேந்திரன்.

படத்தின் உச்சகட்டத்தில், ஸ்ரீதேவி உருக்கமாகப் பாட, எதிரிகளை வீழ்த்திவிட்டு ரஜினி ஓடி வருவார். அந்தக் காட்சி மெய் சிலிர்க்கச் செய்யும்.

கண்ணதாசனும், கங்கை அமரனும் எழுதிய பாடல்களுக்கு, இளையராஜா அற்புதமாக இசை அமைத்திருந்தார்.

அசோக்குமாரின் படப்பிடிப்பு பிரமாதம்.

1980 சுதந்திர தினத்தன்று வெளிவந்த "ஜானி", நூறு நாட்களுக்கு மேல் ஓடியது.

**மகேந்திரன் அனுபவம்**

"ஜானி" படமானபோது ஏற்பட்ட அனுபவங்கள் பற்றி டைரக்டர் மகேந்திரன் கூறியிருப்பதாவது:-

"ஜானிக்கு முன்பு வரை, ஸ்ரீதேவியின் அழகை மட்டும் படங்களில் பார்க்க முடிந்தது. ஜானியில்தான் முதன் முறையாக அவருடைய நடிப்பாற்றலை எல்லோரும் உணர முடிந்தது.

ஜானியில் ரஜினிக்கு இரண்டு வேடங்கள். என்ன அழகாய் வித்தியாசப்படுத்தி நடித்தார்! இருந்தாலும், "ஸ்ரீதேவியின் நடிப்புக்கு ஈடு கொடுத்து என்னால் அந்தக் காட்சியில் நடிக்க இயலவில்லை" என்று அவ்வப்போது கூறுவார். அதுதான் ரஜினிகாந்த்!

**நூறு குடைகள்**

ஜானி" கடைசி நாள் ஷூட்டிங். ஒரு மாதம் முன்னரே சொல்லியிருந்தபடி, மழை அடிக்கும் வேளையில் மேடையில் ஸ்ரீதேவி பாடும் பாடல் காட்சிக்கு நூறு குடைகளும், இருநூறு ஆட்களும தேவை என்று தயாரிப்பாளரிடம் சொல்லியிருந்தேன். ஜானி சம்பந்தப்பட்ட சில காட்சிகளை சென்னையில் பகலில் ஒரு பகுதியில் எடுத்து



ஜானியில் ரஜினியின் மாறுபட்ட தோற்றம்.

## "ஜானி" யில் புதுமையான இரட்டை வேடம்

விட்டு உச்சகட்ட பாடல் காட்சி எடுக்க மாலையில் ஒய்.எம்.சி.ஏ. மைதானத்திற்கு வந்தால், குடையும் இல்லை, ஆளும் இல்லை! மழைத் தண்ணீருக்காக வரவழைக்கப்பட்டிருந்த தீயணைப்பு படை வண்டி மட்டுமே நிற்கிறது.

குடையும் ஆளும் கிடைக்காததற்கு தயாரிப்பாளர் ஏதேதோ காரணம் சொல்ல நான் இடிந்துபோய் உட்கார்ந்து விட்டேன். "நான் நினைத்த மாதிரி இந்த கிளைமாக்ஸ் பாடல் காட்சியை எடுக்க முடியாதா?" என்று சோர்வடைந்தேன். ரஜினி என்னிடம் ஓடி வந்தார். என் சோர்வுக்குக் காரணம் கேட்டார். சொன்னேன். தயாரிப்பாளரிடம் ஓடினார்.

"ஒருநாள்தான் உங்கள் கால்ஷீட்டும், ஸ்ரீதேவி கால்ஷீட்டும் இருக்கிறது. இந்த நிலையில், கிடைக்காத குடைகளுக்கும், ஆட்களுக்கும் நான் எங்கே போவது?" என்றார் தயாரிப்பாளர்.

"ஒரு நாள் இல்லை சார்! இன்னும் ஒரு வாரமோ - பத்து நாளோ, மகேந்திரன் சார் சொல்ற வரைக்கும் இந்தப் பாட்டை முடிக்காம நானோ ஸ்ரீதேவியோ இங்கேயிருந்து போகமாட்டோம். டைரக்டர் நினைக்கிற மாதிரி இந்தப் பாடலை எடுக்கவிடுங்க" என்றார், ரஜினி தீர்க்கமாக! "இன்றைக்கு விட்டால் தீயணைப்பு வண்டி இன்னும் ஒரு மாதத்திற்கு கிடைக்காது. நான் என்ன பண்றது?" என்று திரும்பவும் தயாரிப்பாளர் பல காரணங்களைச் சொல்லவே, "நிலைமையை நான் சமாளிக்கிறேன். இத்துடன் விட்டுவிடுங்கள்" என்று ரஜினியை சமாதானப்படுத்தினேன். அன்று இரவு, விடிய விடிய படப்பிடிப்பு நடத்தி, பாடல் காட்சியை எடுத்து முடித்தேன். "ஜானி" வெளியாகி வெற்றிப்படமானது. நடிப்பில் மட்டுமல்ல, நட்பிலும் ஆழமானவர் ரஜினி." இவ்வாறு மகேந்திரன் கூறியுள்ளார்.

**எல்லாம் உன் கைராசி**

அடுத்து ரஜினி நடித்து வெளிவந்த படம் **"எல்லாம் உன் கைராசி."** இதற்கு கதை, திரைக்கதை எழுதி டைரக்ட் செய்தவர் எம்.ஏ. திருமுகம். ரஜினியுடன் சீமா, சவுகார் ஜானகி, சச்சு, அசோகன், மேஜர் சுந்தர்ராஜன், சுருளிராஜன் ஆகியோர் நடித்தனர்.

**இசை இளையராஜா.**

09-10-1980 இல் வெளிவந்த இந்தப்படம், எதிர்பார்த்த வெற்றி பெறவில்லை.

**பொல்லாதவன்**

குடும்பக் கதைகளை படமாக்கி வந்த "முக்தா" சீனிவாசன், ரஜினியை வைத்து தயாரித்த படம் **"பொல்லாதவன்."** இதில் ரஜினியுடன் லட்சுமி, ஸ்ரீபிரியா ஆகியோர் இணைந்து நடித்தனர். மற்றும், சுருளிராஜன், டெல்லிகணேஷ், வி.கோபாலகிருஷ்ணன், பேபி அஞ்சு ஆகியோரும் நடித்தனர். வசனம்: தூயவன். இசை: எம்.எஸ்.விஸ்வநாதன். முரட்டு இளைஞன் வேடத்தில் ரஜினி பிரமாதமாக நடித்து, ரசிகர்களைக் கவர்ந்தார். 06-11-1980 இல் வெளிவந்த இப்படம் நூறு நாள் ஓடிய வெற்றிப்படம்.

*(தொடரும்)*

# கருவாச்சி காவியம்



**வைரமுத்து- 65**

குள்ளாலயே எடுத்து துண்டா வைக்கிற மாதிரி மேல் தோள உச்சுன்னாப்புல பிச்சுட்டுத் தின்னுடி ஆத்தான்னு திங்கக் குடுத்தா.

தின்னவும் வெத்தல போட்ட மாதிரி ஆகிப்போச்சு கருவாச்சி வாயி.

தவிக்கிற வாய்க்கி அங்கங்க தண்ணி வச்சுருக்கடி கடவுள்னு கூடி வந்த மேகங்கள களைச்சு களைச்சு வீசுது காத்து.

திடீர்னு எறங்கி வந்து மூஞ்சையில படீர்னு அடிச்சுட்டு ஒரே ஓட்டமா ஓடி ஒ ளிஞ்சு போகுது மழை.

வெட்ட வெளியில ஆதிக்கம் செலுத்தி நிக்கிது ஒரு கனத்த வேப்பமரம்.

நடந்து நடந்து தொண்ட காஞ்சு போச்சு கருவாச்சிக்கு.

நாக்கும் மீனும் ஒண்ணோ என்னமோ, தண்ணி இல்லாட்டி ரெண்டுமே செத்துப்போயிரும் போல இருக்கு.

கஞ்சப்பய பிச்ச போடுற மாதிரி சில்லறை சில்லறயா விழுற மழைத் துளியில நாக்க நீட்டி நனைச்சுக்கிறா கருவாச்சி.

இதைப் பாத்துட்டா பின்னுக்கு வந்த வைத்தியச்சி.

நில்லுங்கடின்னு எல்லாரையும் நிறுத்திட்டுப் போறவழியில பொதர்ல இருந்து ஒரு கல்லுச் செடி மேல முந்தானைய விசுக்குன்னு வீசி பொத்துன்னாப்புல இழுத்துக்காம் போட திருகி எடுத்தா ஒரு கள்ளிப் பழத்தை.

சும்மா நீலமும் சிவப்பும் பூத்து நிக்குது அது.

பாறையில போட்டு ஒரு மீன உரசுற மாதிரி முள்ள உரசுனா.



சொல்லிக்கிட்டு நடந்தாக மேற்கொண்டு நாலு பேரும்.

வெள்ளக்[illegible] பொம்பள வெரட்டி [illegible] மாதிரி [illegible] அதுல போயி ஒதுங்கினாக. ஏண்டி இருளாயி குத்துக்கல்லு மாதிரி பேசாம வாறதுக்கு கூதலுக்கு ஒரு கத வருங்கதை எதற்கு விடுகதை சொல்றேன்.

விடுவி பாப்போம். சொல்லு. கத்தி போல் எல்லை இருக்கும் கவரிமான் பூப்பூக்கும்.

திங்க பழம் பழுக்கும். திங்காத காய் காய்க்கும் அது என்னா?

தெரியாதாக்கும். கருவாச்சிக்கு புடுங்கிக கொடுத்தேனே கள்ளிப் பழம் அதானே.

இல்ல. ஆழ மரம்.

பொத்தான் பொதுவா சொல்லா ஆத்தா புத்தியச் செலவழி. வேப்ப மரம் அதுதான? அப்படிப்போடு தலையெல்லாம் மூளையடியம்மா கருவாச்சிக்க. ஆள் செத்த அடையாளமே இல்ல அன்னஞ்சிக்குள்ள.

புணத்த நாக்காளியில ஒக்கார வச்சுட்டு ரெண்டு ஊது வத்தியும் கொழுத்தி வச்சுட்டு சண்டைக்காரங்க மாதிரி ஒருத்தர் ஒருத்தர் பார்க்காம ஒக்காந்திருந்தாங்க பத்து பதினைஞ்சு ஆளுங்க.

எலவு வீட்டுக்குன்னு ஒரு மூஞ்சி இருக்கா இல்லையா? அத மறக்காம எடுத்து மாட்டியிருந்தாக எல்லாரும். ஏழெட்டுக்கிழவிகளோட புலம்பல் வேற கண்ணுல ஈரப்பசையே இல்லாம.

*(தொடரும்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மைத்திரி அரசின் இடை

(நேற்றைய தொடர்ச்சி)...

**ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையிலான புதிய அரசாங்கத்தின் சலுகைகள் நிறைந்த இடைக்கால வரவு செலவுத்திட்டம் (பட்ஜெட்) - 2015 30.01.2015 அன்று நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க வினால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. இந்த வரவு செலவுத் திட்டத்தை சமர்ப்பித்து அவர் மேலும் உரையாற்றுகையில்,**




தற்போதைய பாராளுமன்றமானது தனித்துவமானதுடன் இன, மத பண்புகளைக் கொண்ட கலவையொன்றாக காணப்படுவது மாத்திரமல்லாமல் இதற்கு முன்னர் நாம் எப்பொழுதும் கண்டிராத அரசியல் ரீதியான நட்புறவைக் கொண்டதாகவும் காணப்படுகின்றது. 100 நாட்கள் புரட்சியினை வெற்றி பெறச் செய்வதற்கு அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்களினாலும் வழங்கப்பட்டுள்ள அர்ப்பணிப்பு எமக்கு வழங்கப்பட்ட மிக உயர்ந்த தட்டிக் கொடுப்பாகும்.

பாராளுமன்ற உறுப்பினர்களின் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்டம் மக்களுக்கு குறிப்பாக பின்தங்கிய பிரதேசங்களிலுள்ளவர்களுக்கு பல்வேறு வசதிகளை வழங்குகின்ற சாதனமொன்றாகக் காணப்படுகின்றது. இந்த வருடத்திலிருந்து ஒவ்வொரு பாராளுமன்ற உறுப்பினருக்கும் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்டத்தின் கீழ் வழங்கப்படுகின்ற 5 மில்லியன் ரூபா இரட்டிப்பாக ரூபா 10 மில்லியனாக (100 சதவீத அதிகரிப்பு) வழங்கப்படும். இது மேலதிகச் செலவினமாக ரூபா ஆயிரத்து 125 மில்லியனாகக் காணப்படுவதுடன் பாராளுமன்ற உறுப்பினர்கள் பிரதிநிதித்துவப்படுத்தக் கூடிய தமது பிரதேசங்களில் தமது சேவைகளை அதிகரிப்பதற்காக வழங்கப்படுகின்ற சாதகமான நடவடிக்கையொன்றாக நாம் கருதுகின்றோம்.

## தேசத்திற்கு மகுடம் பாதக நிலையினை சாதகமாக மாற்றுதல்

முன்னைய அரசாங்கத்தின் விருப்பத்திற்குரிய கருத்திட்டமொன்றான தேசத்திற்கு மகுடம் கண்காட்சியானது பல்வேறுபட்ட குறைபாடுகளையும் ஊழல்களையும் ஏற்படுத்தியது. 2014 இல் இக்கண்காட்சிக்காக நிதி அமைச்சினால் 14ஆயிரம் மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ள அதேவேளை, ஏனைய அமைச்சுக்களினால் பாரியளவிலான தொகை செலவிடப்பட்டுள்ளது.

தேசத்திற்கு மகுடம் கண்காட்சியானது வீண் விரயமாகக் காணப்பட்டதுடன் சிலர் நன்மையடைவதற்கும் அதன் மூலம் தம் புகழ் பாடுவதற்குமான மகுடமாகக் காணப்பட்ட அதேவேளை, தேசியப் பொருளாதாரத்திற்கு பாரியளவு அழிவினையும் ஏற்படுத்தியது. இலங்கை மக்களுக்காக எவ்வித உணர்வுமின்றி பணத்தினை செலவிடுவது பாலுணவு விலைகளை குறைப்பதிலும் நுகர்வோருக்கு பயனளிக்கக் கூடிய அத்தியாவசியப் பொருட்கள் பலவற்றிற்கான விலைகளைக் குறைப்பதிலும் செலவிட முடியுமாக இருந்திருத்தல் வேண்டும்.

இந்த வீண் விரயமிக்க திட்டத்தினை நிறுத்துவதற்கும் இவ்வருடமும் எதிர்காலங்களிலும் அவற்றினை செயற்படுத்தாதிருப்பதற்கும் நான் முன்மொழிகின்றேன். எவ்வாறாயினும், தேவையான துறைகளில் தற்பொழுது இடம் பெற்று வரும் அபிவிருத்திக் கருத்திட்டங்களை நிறைவு செய்வதற்கு ஒரு பில்லியன ரூபாவினை நாம் ஒதுக்கீடு செய்துள்ளோம்.

அரசியல் தேவைகளை மேம்படுத்துவதற்காக மாத்திரம் ஒதுக்கீடு செய்யப்பட்ட இந்த நிதி தற்பொழுது மனிதாபிமான மற்றும் நீதமான, மக்கள் நட்பு கருத்திட்டங்களுக்காக பயன்படுத்தப்படவுள்ளது. இந்த வரவு செலவுத் திட்டத்தினை தயாரிக்கின்ற உத்தியோகத்தர்களுக்கு சேமிப்பினை மிக இலகுவாக மேற்கொள்ள முடியுமாக இது காணப்பட்டது.

## சுகாதார நலன்புரி செலவினங்களை மொ.உ.உற்பத்தியில் 3 சதவீதமாக அதிகரித்தல்

சுதந்திரம் பெற்றதிலிருந்து தொடர்ந்து ஆட்சியிலிருந்த அரசாங்கங்கள் நாட்டிலுள்ள அனைத்து பிரஜைகளுக்கும் இலவ்ச மருத்துவ, நலன்புரி ஏற்பாடுகளை வழங்குகின்ற சுகாதார நலன்புரி திட்டங்களில் குறிப்பிடத்தக்களவு பங்களிப்பு செய்துள்ளன. இதன் விளைவாக, பிராந்தியத்திலுள்ள ஏனைய நாடுகளுடன் ஒப்பிடுகையில் இலங்கை பிரதான சுகாதார சுட்டிகளில் குறிப்பிடத்தக்களவு முன்னேற்றம் அடைந்துள்ளது.

எவ்வாறாயினும், சுகாதாரத்துறை பெற்றிருந்த நன்மதிப்பானது தொற்றாத நோய்களின் அதிகரிப்பினாலும் இடத்துக்கிடம் பரவுகின்ற நோய்களினாலும் தற்பொழுது சவாலுக்குட்படுத்தப்பட்டுள்ளது. இது இறப்பு வீதங்களின் அதிகரிப்புக்கு காரணமாக அமைந்துள்ளதுடன் இவ்விடயங்களை தீர்ப்பதற்கான உறுதியான நடவடிக்கைகளை எடுக்க வேண்டிய தேவையும் ஏற்பட்டுள்ளது.

## சீனி, பால்மா, கோதுமைமா, பாசிப்பயறு, நெத்தலி விலைகள் குறைப்பு

முக்கிய சுகாதார சேவை வழங்குநர் என்ற வகையில் அரசாங்கம் இது தொடர்பில் மிக முக்கிய பங்கினை வழங்க வேண்டியுள்ளது. இதனால் அரசாங்கம் அடுத்த வருடங்களில் 2013 இல் மொ.உ. உற்பத்தியில் 1.4 சதவீதமாக காணப்பட்ட சுகாதாரப் பராமரிப்புக்கான செலவினங்களை ஏறக்குறைய 3 சதவீதமாக அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளது.

அனைத்து வைத்தியசாலைகளிலும் 24 மணிநேர வெளிநோயாளர் சேவைப் பிரிவுகள், சிறுநீரக நோயாளர்களுக்கான உதவி மற்றும் சத்திரசிகிச்சைகளுக்காக காத்திருப்போரின் எண்ணிக்கையினை குறிப்பிடத்தக்களவு குறைப்பதற்கான முயற்சிகள் என்பவற்றிற்கான நிதியளிப்பு சுகாதார அமைச்சின் கலந்தாலோசனையுடன் மேற்கொள்ளப்படும். மக்களுக்கு தேவையான சுகாதார மருத்துவ பராமரிப்பு தேவைகளை வழங்குவதில் தேவையான தகவல்களை பெற்றுக் கொள்வதற்கு அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்படுவதுடன் இலங்கை உயர்ந்த ஆரோக்கியமிக்க நாடொன்றாகக் கருதப்படும் அளவு நிதி ஒதுக்கீடு அதிகரிக்கப்படும் என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை.

## கல்விச் செலவினத்தினை மொ.உ.உற்பத்தியில் 6 சதவீதமாக அதிகரித்தல்

கல்விக்கான செலவினங்கள் பொருளாதார வளர்ச்சிக்கு அத்தியாவசியமானது என்பதுடன் பொருளாதாரமொன்றின் சமூக ஏற்பாடுகளுக்கும் அவசியமானது என்பதனை நீங்கள் நன்கறிவீர்கள். கல்விக்கான அரசாங்கத்தின் அதிகூடிய செலவினமானது அனைத்து சிறுவர்களுக்கும் சமத்துவமான கல்வியினை உறுதிப்படுத்துவதுடன் மனித மூலதன அபிவிருத்தி மட்டத்தினை அதிகரிக்கச் செய்கின்றது. எனவே, நாம் சர்வதேச மட்டத்தில் தகைமை பெற்றவர்களாக தயாராகுவது சிறந்ததாகும்.

சமகால பூகோள மயமாக்கப்பட்ட உலகத்தில் கல்விக்கான தேவை குறிப்பிடத்தக்களவு வளர்ச்சியடைந்துள்ளது. இந்த தேவைகளை நிறைவு செய்வதற்காக பிராந்தியத்திலுள்ள ஏனைய நாடுகள் ஒப்பீட்டு ரீதியில் கல்விக்கான செலவினத்தினை அதிகமாக மேற்கொள்கின்றன. வளர்ச்சியடைந்த பொருளாதாரங்களில் காணப்படும் கல்விக்கான அரசாங்கத்தின் செலவினம் மொ.உ.உற்பத்தியில் 5.3 சதவீதமாகக் காணப்படுவதுடன் ஒப்பிடுகையில் ஆசியாவில் 2.9 சதவீதமாகக் காணப்படுகின்றது.

எவ்வாறாயினும், இலங்கை அரசாங்கம் கல்விக்கான செலவினத்தினை மொ.உ. உற்பத்தியில் ஏறக்குறைய 2 சதவீதமாக மாத்திரம் மேற்கொள்கின்றது. தனியார் துறை கல்விச் செலவினம் குறிப்பிடத்தக்களவு அதிகரித்த போதிலும், அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்படும் கல்விக்கான செலவின அதிகரிப்பு வளர்ந்துவரும் சர்வதேச சந்தை நிலைமைகள் மற்றும் அதன் தேவைகளினைக் கருத்திற் கொண்டு அத்தியாவசியமானதாகக் காணப்படுகின்றது.

வறியவர்கள் கல்வியினை பெற்றுக் கொள்வதனை விரிவாக்கும் வகையில் கல்விக்கான செலவிடல் தேவைகள் அதிகரிக்கப்பட வேண்டுமென்பதுடன் வளர்ச்சிக்கான பங்களிப்பினை உறுதிப்படுத்தல் வேண்டும். உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துதல் மற்றும் பெற்றுக் கொள்ள ஏற்பாடு செய்தல் என்பன முன்னேற்றமடைந்த கல்வியினையும் சுகாதாரத்தினையும் பெற்றுக் கொள்வதற்கான வாய்ப்புகளை வறியவர்களுக்கு ஏற்படுத்திக் கொடுக்கின்றன. இந்த வகையில், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் முன்மொழியப்பட்டவாறு கல்விக்கான செலவினத்தினை மொ.உ.உற்பத்தியில் 6 சதவீதத்தினை அடையும் வகையில் ப்டிப்படியாக அதிகரிப்பதற்கான முன்னேற்பாடுகளை அரசாங்கம் அறிமுகப்படுத்தும் என்பதனை நான் இங்கு சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

## வாழ்க்கைச் செலவினைக் குறைப்பதற்கான முன்மொழிவுகள்

தற்பொழுது நான் எமது 100 நாட்கள் புரட்சியில் மற்றுமொரு முக்கிய விடயத்தினை உங்கள் கவனத்திற்கு கொண்டு வருவதற்கு விரும்புகின்றேன். அது முன்னைய ஆட்சியாளரினால் விட்டுச் செல்லப்பட்ட தாங்கிக் கொள்ள முடியாத வாழ்க்கைச் செலவினத்திலிருந்து பொதுமக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்காக அதிகளவிலான சலுகைகளை வழங்குவதாகும்.



வாழ்க்கைச் செலவு தொடர்பான பிரச்சினைகளை தீர்க்காமை வறுமையின் கீழ் உள்ளவர்களுக்கு பல பிரச்சினைகளைத் தோற்றுவித்துள்ளதுடன் பதவியேற்று 20 நாட்களுக்குள் வழங்கப்பட்ட நிவாரணங்கள் மைத்திரி நிர்வாகத்தின் விளைவுகளை வெளிக்காட்டியுள்ளன.

எமது அரசாங்கம் இலங்கை மக்களுக்கு அதிகமான நிவாரணங்களை வழங்குவதுடன் அவற்றினை அடுத்த வருடங்களிலும் மேற்கொள்வதற்கான ஆணையினைப் பெற்றுள்ளோம்.

## எரிபொருள் விலைகளைக் குறைத்தல்

பெற்றோலியப் பொருட்களின் விலைகளை குறிப்பிடத்தக்களவு குறைத்ததன் மூலம் அரசாங்கம் 100 நாட்கள் புரட்சியின் முக்கிய திட்டமொன்றினை ஏற்கனவே செயற்படுத்தியுள்ளது.

டீசலின் விலையினை லீற்றரொன்றுக்கு 95 ரூபாவாக 14.4 சதவீதத்தினால் நாம் குறைத்துள்ளோம். பெற்றோலின் விலை லீற்றரொன்று 117 ரூபாவாக 22 சதவீதத்தினால் குறைக்கப்பட்டுள்ளதுடன் மண்ணெண்ணெய் விலை லீற்றரொன்று 65 ரூபாவாக 20 சதவீதத்தினால் குறைக்கப்பட்டுள்ளது. மீன்பிடி சமூகத்தினர், சிறியளவிலான மரக்கறி செய்கையாளர்கள் மற்றும் சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சி துறையினருக்கு மேலும் ஒத்துழைப்பு வழங்கும்

வகையில் மேலும் லீ…
தன் மூலம் மண்ணெ…
ன்று 59 ரூபாவாக கு…
இவற்றினை நீங்க…
கருத முடியாது?
2014 செப்டெம்பர்…
டீசல் மற்றும் மண்ணெ…
விலைகள் குறைவ…
அவ்வாறான விலை…
மாற்றங்களினையும்…
சர்வதேச சந்தை…
விலைகளின் மூலம்…
இந்நாட்டின் மக்களு…
அர்ப்பணிப்புடன் செய…
பெற்றோலிய விலைக…
கப் பெற்ற முழுமைய…
பொருட்கள் மீதான வ…
ருக்கு வழங்குவதற்கு…
இந்நடவடிக்கையி…
வரிகளாக சேகரிக்க…
இழக்க வேண்டி ஏற்ப…
முன்னைய அரசா…
களினை அடிப்படைய…
எத…யும் …
மக்களிடமிருந்து ப…
யினையே மேற்கொ…

காலப்போக்கில்…
அடிப்படையாக வை…
மின்சாரக் கட்டணங்…
அறிமுகப்படுத்துவதற்…
இது உள்நாட்டு எண்…
கட்டமைப்பில் அதிக…
சர்வதேச சந்தையில்…
மேலதிக நிதிச் சு…
கூட்டுத்தாபனம் மற்…
வழங்குகின்றன.
மாற்று சக்தி மூல…
செலவினத்தினை கு…
வகையில், அரசாங்க…
அதற்குக் குறைந்த…
மூலதன முதலீடுக…
மதியினை உள்ளட…
பிறப்பாக்கிகளை நிறு…

## பயணிகள் … போக்குவரத்…

தற்போதைய மே…
மக்களுக்கு மேலதிக…
கட்டணம் ஆகக் குை…
வான்களுக்கான க…
த்தினாலும் குறைக்க…

## அத்தியா… வரி…

பொதுமக்களுக்கு…
நாட்கள் புரட்சியின்…
பிரயோகிக்கப்பட்டிரு…
வாக்குறுதியினை ஜ…

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# க்கால பட்ஜெட்-2015

மேலும் லீற்றரொன்றுக்கு 6 ரூபாவினால் குறைப்ப
ம் மண்ணெண்ணெயின் விலையினை லீற்றரொ
ருபாவாக குறைப்பதற்கு நான் முன்மொழிகின்றேன்.
னை நீங்கள் ஏன் குறிப்பிடத்தக்க நடவடிக்கைகளாக
பாது?

செப்டெம்பர் மற்றும் டிசெம்பர் மாதங்களில் பெற்றோல,
ும் மண்ணெண்ணெய் என்பவற்றின் உள்நாட்டு
குறைவடைந்த போதிலும் முன்னைய ஆட்சியில்
ன விலைக் குறைப்புகள் எவ்வித தேவையான
ரினையும் ஏற்படுத்தவில்லை.

தேச சந்தையில் காணப்படுகின்ற எண்ணெய்
ன் மூலம் பெறப்படும் எத்தகைய நன்மையினையும்
மக்களுக்கு வழங்குவதற்கு நாம் உண்மையில்
புடன் செயற்படுகின்றோம். இதனால்தான் சர்வதேச
ய விலைகளில் ஏற்பட்ட வீழ்ச்சியின் மூலம் கிடைக்
முழுமையான நன்மையினையும் பெற்றோலியப்
மீதான வரிகளை குறைத்ததன் மூலம் நுகர்வோ
ங்குவதற்கு அரசாங்கம் தீர்மானித்தது.

வடிக்கையினால் அரசாங்கம் நுகர்வோரிடமிருந்து
சேகரிக்கப்பட வேண்டிய ரூபா 85 பில்லியனை
ண்டி ஏற்பட்டது.

னய அரசாங்கம் குறைவடைந்த எண்ணெய் விலை
அடிப்படையாகக் கொண்டு மக்களுக்கு நிவாரணம்
ம் [illegible]ங்கவில்லை என்பதுடன் பாதிக்கப்பட்ட
ிருந்து பணத்தினை சூறையாடுகின்ற வேலை
மேற்கொண்டு வந்தது.



பாக்கில் சர்வதேச சந்தைகளின் விலைகளை
யாக வைத்து எரிபொருளுக்கு மாத்திரமல்லாது
ட்டணங்களுக்கும் விலையிடல் திட்டமொன்றினை
டுத்துவதற்கு அரசாங்கம் திட்டமிட்டு வருகின்றது.
ட்டு எண்ணெய் விலை மற்றும் மின்சாரக் கட்டண
ல் அதிக நெகிழ்ச்சிப் போக்கினை ஏற்படுத்துவதுடன்
ந்தையில் எண்ணெய் விலை தளம்பலுக்கேற்ப
நிதிச் சுமை எதனையும் திறைசேரி, இ.பெ.
னம் மற்றும் இ.மி.சபை என்பன நிவாரணமாக
ிறன.

க்தி மூலங்களை ஊக்குவித்தல் மற்றும் அரசாங்க
தினை குறைப்பதற்கான நடவடிக்கைகள் என்ற
அரசாங்க நிறுவனங்களில் 7 வருடங்கள் அல்லது
றைந்த காலப்பகுதிக்குள் உபகரணங்களுக்கான
தலீடுகளை மீள வழங்கும் வகையில் பெறு
உள்ளடக்கிய நுகர்வுக்காக சூரிய சக்தி மின்
ளை நிறுவுவதற்கு நான் முன்மொழிகின்றேன்.

## ரிகள் பஸ் கட்டணங்கள், பாடசாலை வரத்து கட்டணங்களை குறைத்தல்

தைய பேச்சுவார்த்தைகளின் அடிப்படையில்
மேலதிக நிவாரணம் வழங்கும் வகையில் பஸ்
ஆகக் குறைந்தது 10 சதவீதத்தினாலும் பாடசாலை
கான கட்டணம் ஆகக் குறைந்தது 5 சதவீத
குறைக்கப்படும்.

## த்தியாவசியப் பொருட்கள் மீதான வரிகளைக் குறைத்தல

க்களுக்கு நிவாரணம் வழங்குவதற்காக 100
ட்சியின் கீழ் 10 அத்தியாவசிய பொருட்கள் மீது
கப்பட்டிருந்த அதிக வரியினை குறைப்பதற்கான
ினை ஜனாதிபதித் தேர்தல் பிரசாரங்களின் போது

நாம் வழங்கியிருந்தது உங்களுக்கு நினைவிருக்கலாம்.

கடந்த 29ஆம் திகதி நள்ளிரவிலிருந்து பின்வரும் அத்தியாவசியப் பொருட்களுக்கான விலைகள் குறைக்கப்படும் என்பதனை இவ்விடத்தில் தெரிவிப்பதையிட்டு நான் மகிழ்ச்சியடைகின்றேன். இறக்குமதியின் போது திரட்டிய வரியாக அறவிடப்பட்ட விசேட நுகர்வுப் பொருள் அறவீடானது குறிப்பிடத்தக்க 9 பொருட்கள் தொடர்பில் நீக்கப்படுவதுடன் கோதுமை மா மீதான இறக்குமதித் தீர்வையும் நீக்கப்படும். பால் மா மீதான சில்லறை விலை நியாயமானளவு குறைக்கப்படும்.

1. **சீனி:** சீனி எமது அன்றாட வாழ்வில் மிக முக்கிய நுகர்வுப் பொருள் ஒன்றாகக் காணப்படுகிறது. தற்பொழுது விதிக்கப்படுகின்ற விசேட நுகர்வுப் பொருள் அறவீடான 28 ரூபா 10 ரூபாவினால் குறைக்கப்பட்டு கிலோ கிராம் ஒன்று 18 ரூபாவாக அறவிடப்படும். இதன் விளைவாக ரூபா 5ஆயிரத்து 243 மில்லியன் வருமான இழப்பு ஏற்படுகின்றது. ஆகவே சீனியின் சில்லறை விலையானது 85 ரூபாவாக குறைவடைதல் வேண்டும்.

முன்னைய அரசாங்கத்தில் சீனி என்ற விடயத்தினைக் கவனிப்பதற்காக அமைச்சர் ஒருவர் நியமிக்கப்பட்டிருந்த போதும் துரதிர்ஷ்டவசமாக அவரின் அமைச்சின் மூலம் வறிய மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கு முடியாமற் போனது.

2. **பால்மா:** அண்மைக் காலத்தில் பால்மாவிற்கான சர்வதேச விலை குறிப்பிடத்தக்களவு வீழ்ச்சியடைந்திருப்பதனை நீங்கள் நன்கறிந்திருப்பீர்கள்.

எவ்வாறாயினும், இதன் முழுப்பயனும் இதுவரை நுகர்வோருக்கு கிடைக்கப் பெறவில்லை. எனவே, 400 கிராம் பால்மா பைக்கற் ஒன்றிற்கான விலையினை 61 ரூபாவினால் குறைப்பதன் மூலம் 400 கிராம் பால்மாவிற்கான ஆகக் கூடிய சில்லறை விலையினை 325 ரூபாவாக குறைப்பதற்கு நாம் தீர்மானித்துள்ளோம்.

எமக்கு தேவையான நேரத்தில் விலைக் குறைப்புக்கு பெருமனதுடன் தமது இணக்கத்தை தெரிவித்த பாலுணவுப் பொருட்களின் இறக்குமதியாளர்களுக்கு நான் நன்றி கூறுகின்றேன். நாம் மைத்திரி நிர்வாகத்தின் கீழ் செயற்படுகிறோம் என்ற வகையில் இந் நிலையினை மாற்றியமைத்து அத்தகைய இறக்குமதியாளர்கள் இறக்குமதிகளிலிருந்து உள்நாட்டுப் பால் உற்பத்தியின்பால் தமது முதலீடுகளை மேற்கொள்ளுமாறு நான் கேட்டுக்கொள்கின்றேன். தமது தொழிற்றுறைகளை அபிவிருத்தி செய்வதற்கு அரசாங்கத்திலிருந்து சாதகமான மாற்றங்கள் சலுகைகளாகக் கிடைக்கப் பெறும்.

3. **சஸ்ரோஜன்:** நோயாளிகளுக்கான நிறையுணவாக பெரும்பாலும் சிபாரிசு செய்யப்படுகின்ற உணவுகளில் சஸ்ரோஜன் ஒன்றாகும். இவ்வுணவு தேவைப்படுகின்ற வறியவர்களினால் பெற்றுக் கொள்ள முடியாதளவு அதன் விலை காணப்படுகின்றது. எனவே, 400 கிராம் மாவிற்கு ஏறக்குறைய 100 ரூபா விலையினை குறைப்பதற்காக 15 சதவீத சுங்கத் தீர்வையினை நாம் நீக்கியுள்ளோம். இதன் மூலம் இலங்கை மக்களுக்கு தேவையான நிவாரணம் வழங்கப்படுகின்றது.

உள்நாட்டுப் பால் உற்பத்தியாளர்களை ஊக்குவிப்பதற்காக தற்பொழுது காணப்படுகின்ற வரிகளினை தொடர்ந்தும் பேண வேண்டிய தேவை காணப்படுவதனால் பால்மா மீதான வரிகளில் நாம் எவ்வித மாற்றங்களையும் செய்யவில்லை. பால் உற்பத்தியாளர்களுக்கு வழங்கப்படுகின்ற உத்தரவாத விலையினை 10 ரூபாவினால் அதிகரிப்பதன் மூலம் லீற்றரொன்று 70 ரூபாவிற்கு கொள்வனவு செய்வதனால் உள்நாட்டு பால் உற்பத்தியாளர்கள் ஊக்குவிக்கப்படுகின்றனர்.

4. **கோதுமை மா:** கோதுமை தானியம் மீது விதிக்கப்படும் இறக்குமதித் தீர்வை கிலோ கிராம் ஒன்றிற்கு 10 ரூபாவினால் குறைககப்படுவதன் மூலம் கோதுமை மாவின் விலையும் குறைக்கப்படுகின்றது. கோதுமை மாவிற்கான விலை கிலோ கிராம் ஒன்று ரூபா 12.50 சதத்தினால் குறைக்கப்படும்.

5. **பாண்:** கோதுமை மா விலை குறைவடைந்ததுடன் மின்சாரம் மற்றும் எரிபொருள் விலையில் ஏற்பட்ட குறைவு காரணமாக ஒரு இறாத்தல் பாணின் விலையானது குறைந்தபட்சம் 6 ரூபாவினால் குறைவடையும். தோட்டத் தொழிலாளர்கள் கோதுமை மா மற்றும் பாண் விலை குறைவடைவதனால் அவர்களது வாழ்க்கை முறையின் அடிப்படையில் நோக்கும்பொழுது மிகவும் மகிழ்ச்சியடைவர் என நான் நம்புகின்றேன்.

6. **பாசிப்பயறு:** பாசிப்பயறு மீது தற்பொழுது விதிக்கப்படும் 40 ரூபா விசேட நுகர்வுப் பொருள் அறவீடு 30 ரூபாவினால் குறைக்கப்பட்டு கிலோ கிராம் ஒன்றுக்கு 10 ரூபாவாக அறவிடப்படும். இதன் மூலம் இது வருமானத்தினை ரூபா 519 மில்லியனாக குறைவடையச் செய்யும். எரிபொருள் விலைகள் குறைவடைந்ததனாலும் பாசிப்பயறுக்கான சில்லறை விலை கிலோ கிராம் ஒன்றுக்கு ஏறக்குறைய 40 ரூபாவினால் குறைவடையுமென நான் நம்புகின்றேன்.

7. **நெத்தலி:** நெத்தலிக்கான விசேட நுகர்வுப் பொருள் அறவீடு தற்பொழுது 26 ரூபாவாகக் காணப்படுவதுடன் 15 ரூபா குறைக்கப்பட்டு கிலோ கிராம் ஒன்றுக்கு 11 ரூபாவாக அறவிடப்படும். இதனால் அரசாங்கத்திற்கான வருமானத்தில் ரூபா 657 மில்லியன் குறைவடையும்.

பல்வேறு காரணங்களுக்காக மக்கள் பெரிய மீன்களை உணவாகக் கொள்கின்ற காலம் காணப்பட்டதுடன் நெத்தலிக்கான விலை குறைவடைகின்ற போது போஷாக்கு நிறைந்த பொருட்களில் ஒன்றான நெத்தலியினை நுகர்வதன் மூலம் சமூகத்திலுள்ள வறிய மக்கள் நன்மையடைய முடியும்.

8. **ரின் மீன்:** இது வரிச்சலுகை வழங்க வேண்டுமென நாம் நம்பிய மிக முக்கிய அத்தியாவசிய நுகர்வுப் பொருட்களில் ஒன்றாகும். எனவே, ரின்மீனுக்கான தற்போதைய விசேட நுகர்வுப் பொருள் அறவீடான ரூபா 102 இனை 52 ரூபாவினால் குறைப்பதன் மூலம் கிலோ கிராம் ஒன்றுக்கு 50 ரூபா அறவிடப்படும். இதன் மூலம் நுகர்வோருக்கு பாரியளவு நிவாரணத்தினை வழங்க முடியும். இந்த நடவடிக்கையினால் வருமான இழப்பு ரூபா ஆயிரத்து 57 பில்லியனாகும். எண்ணெய் விலைகளில் ஏற்பட்ட வீழ்ச்சியுடன் மேற்கொள்ளப்பட்ட இந்நடவடிக்கையினால் ரின்மீனின் சந்தை விலை கிலோ கிராம் ஒன்றுக்கு 60 ரூபாவினால் குறைக்கப்படும்.

இப்பின்னணியில், உண்மையான பெறுமதி சேர்ப்புடன் உள்நாட்டு ரின் மீன் உற்பத்தியினை ஆரம்பிக்க இருக்கின்ற தொழில்முயற்சியாளர்களுக்கு அரசாங்கம் உதவி வழங்கும் என்பதனை தெரிவித்துக் கொள்வதில் மகிழ்ச்சியடைவதுடன் முக்கியமான சமுத்திர வளங்களை நாம் கொண்டிருக்கின்றோம் என்ற வகையில் மீன் வளத்தினை சிறந்த முறையில் பயன்படுத்துவதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டிய தேவை காணப்படுவதாக நாம் நம்புகின்றோம். நாட்டில் பல ரின்மீன் உற்பத்தியாளர்கள் காணப்படுவதுடன் அவர்கள் வரிப் பாதுகாப்பினை வேண்டுகின்றனர். தற்பொழுது காணப்படும் அதிகரித்த வெளியீட்டில் அதிக ஒருங் கிணைந்த முறைமை காணப்படுமாயின் அரசாங்கம் மேலதிக உதவியினை வழங்குவதற்கு தயாராக இருக்கின்றது.

ரின் மீன் நுகர்வு பிரதானமாக குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களிலும் கடல் மீன் கிடைக்கப் பெறாத வெளிப் பிரதேசங்களிலும் வாழ்கின்றவர்களினாலும் முக்கியமாக நுகரப்படுகின்றது என்பதனையும் நான் மீண்டும் தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன். குறைந்த விலை மேலதிக போஷாக்குணவான மீன் உணவினை மக்கள் நுகர்வதற்கான வாய்ப்பினை வழங்குகின்றது.


9. **கொத்தமல்லி:** முழுக் கொத்தமல்லி மீதான விசேட நுகர்வுப் பொருள் அறவீடு தற்பொழுது 46 ரூபாவாகக் காணப்படுவதுடன் கிலோ கிராம் ஒன்று 20 ரூபாவினால் குறைக்கப்பட்டு ரூபா 26 ஆக அறவிடப்படும். உடைக்கப்பட்ட அல்லது தூளாக்கப்பட்ட கொத்தமல்லி மீதான அறவீடு கிலோ கிராம் ஒன்றுக்கு ரூபா 202 இலிருந்து ரூபா 150 இனை குறைப்பதன் மூலம் 52 ரூபாவாக அறவிடப்படும். இந் நடவடிக்கையினால் மொத்த வருமான இழப்பு ரூபா 635 மில்லியனாகக் காணப்படும். கொத்தமல்லி என்பது எமது சிறுபராயத்திலிருந்து அனைத்து வகையான நோய்களுக்குமான சுதேச மருத்துவ மூலிகை ஒன்றாகும். முன்னைய ஆட்சியாளர்களினால் கொத்தமல்லிகூட பாதுகாக்கப்படவில்லை என்பது துரதிர்ஷ்டவசமானதாகும்.

10. **உளுந்து:** இது மிக முக்கியமான நுகர்வுப் பொருள் என்பதுடன் குறிப்பாக தமிழ் மக்கள் தமது விருப்பத்திற்குரிய உணவுகளை இதன் மூலம் தயாரித்துக் கொள்கின்றனர். உளுந்து மீது தற்பொழுது விதிக்கப்படும் விசேட நுகர்வுப் பொருள் அறவீடு கிலோ கிராம் ஒன்றுக்கு 110 ரூபாவிலிருந்து 60 ரூபா குறைக்கப்பட்டு 200 ரூபாவாக அறவிடப்படும். உழுந்து மா மீதான விசேட நுகர்வுப் பொருள் அறவீடு கிலோ கிராம் 300 ரூபாவிலிருந்து 100 ரூபா குறைக்கப்பட்டு 50 ரூபாவாக அறவிடப்படும். இந்த விலைக் குறைப்பின் முழுமையான நன்மை யினை உரிய நுகர்வோருக்கு முழுமையாக வழங்குமாறு உணவுப் பொருள் தயாரிப்பாளர்களை நான் வேண்டிக் கொள்கின்றேன்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்னுயிர் ஈந்தது எதற்காக?



இந்தித் திணிப்புக்கு எதிராக தமிழக மாணவர்கள் கொதித்து எழுந்து 1965 ஆம் ஆண்டு ஜனவரி 25 ஆம் நாளில் நடத்திய போராட்டம் வரலாறு காணாத போராட்ட மாகும். இப்போராட்டத்தில் கீழப்பழுவூர் சின்னச்சாமி உள்பட ஏழு பேர் தீக்குளித்து உயிர்த் தியாகம் செய்தனர். இருவர் நஞ்சுண்டு மாண்டனர். மாணவர் இராசேந்திரன் துப்பாக்கிச் சூட்டில் கொல்லப்பட்டார்.

கோவை குமாரபாளையம், வெள்ளக் கோவில், திருப்பூர், கரூர், மணப்பாறை, பொள்ளாச்சி ஆகிய ஊர்களில் நடந்த துப்பாக்கிச் சூட்டில் நூறு பேருக்கும் மேல் இறந்தனர்.

தமிழகத்தில் மாணவர்கள் நடத்திய இந்தப் போராட்டத்திற்கு இணையான ஒரு போராட்டம் இதற்கு முன்னரோ, பின்னரோ நடைபெற்றது இல்லை. தங்களது எதிர் காலம் இந்தித் திணிப்பால் பாதிக்கப்படும் என்ற உணர்வினால் உந்தித் தள்ளப்பட்டு மாணவர்கள் தன்னிச்சையாக நடத்திய போராட்டம் இந்தப் போராட்டம்.

தமிழக அரசியலில் மகத்தான மாற்றத்தை இந்தப் போராட்டம் ஏற்படுத்திற்று. இப்போராட்டம் நடைபெற்று 50 ஆண்டுகள் நிறைவடைந்து தமிழகமெங்கும் மொழிப் போராட்டத்தின் பொன் விழா கொண்டாடப்பட்டு வருகிறது.

இப்போராட்டம் என்ன நோக்கத்திற்காக நடைபெற்றதோ அந்த நோக்கம் இந்த 50 ஆண்டு காலத்தில் ஒரு சிறிதளவேனும் நிறைவேறியிருக்கிறதா என்பதை நாம் எண்ணிப் பார்ப்போமானால் வெட்கித் தலைகுனிய வேண்டியிருக்கும்.

இந்தி அரியணை ஏறினால் தாய்மொழியான தமிழ் பின்னுக்குத் தள்ளப்படும் நமது வாழ்வுரிமையும் பறிபோகும் என்பதற்காகத்தான் மாணவர்கள் போராடினார்கள். ஒன்பது பேர் தீக்குளித்தும் நஞ்சுண்டும் உயிர்த்தியாகம் செய்தார்கள். மேலும் நூற்றுக்கணக்கான மக்கள் காவல் துறையின் துப்பாக்கிச் சூடுகளுக்கு இரையாகி மாண்டார்கள்.

மாணவர்களின் போராட்டத்தால் 1967 ஆம் ஆண்டு நடைபெற்ற சட்டப் பேரவைத் தேர்தலில் தி.மு.க. வெற்றிபெற்று ஆட்சியைக் கைப்பற்றியது. ஆனால், தமிழ்மொழி அரியணை ஏற்றப்படவில்லை. மொழிப் போரைப் பயன்படுத்தி ஆட்சிக்கு வந்த கட்சிகள் ஆங்கிலத்திற்கு மகுடம் சூட்டின.

தமிழ்நாட்டில் இந்தியைத் தடுக்க வேண்டுமானால், ஆட்சி மொழியாக, கல்வி மொழியாக, நீதிமன்ற மொழியாக தமிழ் ஆக்கப்படவேண்டும். அதுதான் இந்தி உள்பட பிறமொழிகளின் ஆதிக்கம் தமிழ்நாட்டில் படராமல் தடுக்கும்.

ஆனால், திராவிடக் கட்சிகள் ஆங்கிலத்தின் மூலம் மட்டுமே இந்தியைத் தடுக்க முடியும் என்று கருதின.

மூத்த அறிஞர் இராஜாஜி கூறிய "என்றென்றும் ஆங்கிலம் ஒருபோதும் இந்தி கூடாது" என்ற அறிவுரையை தங்களது வழிகாட்டு நெறியாக திராவிடக் கட்சிகள் ஏற்றுக் கொண்டன.

காமராசரின் ஆட்சியில் உயர்நிலைப் பள்ளிவரை தமிழே பயிற்சி மொழியாக இருந்தது. அனைவருக்கும் இலவசக் கல்வி அளிக்கப்பட்டது. ஏழைக் குழந்தைகளுக்கு மதிய உணவு வழங்கப்பட்டது.

இதன் விளைவாக தமிழ்நாட்டில் ஏழு சதவீதமாக இருந்த கல்வியறிவு படைத்தவர்களின் எண்ணிக்கை, காமராசர் காலத்தில் 37 சதவீதமாக உயர்ந்தது. அவர் அமைத்த அடித்தளத்தின் விளைவாக இன்று தமிழகத்தில் 70 சதவீதத்திற்கும் மேலானவர்கள் கல்வியறிவு பெற்றுள்ளனர்.

புகுமுக வகுப்பு வரை கல்வியை அவர் இலவசமாக்கினார். பட்டப்படிப்பு வரை தமிழ்வழிக் கல்வியை கொண்டு வர நடவடிக்கைகள் தொடங்கப்பட்டன.

ஆட்சி மொழிச் சட்டம் கொண்டுவரப்பட்டு சகல துறைகளிலும் தமிழே ஆட்சி மொழியாகத் திகழ்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

ஆனால், "தமிழ்" "தமிழ்" என்று முழங்கியவர்களின் ஆட்சி நடைபெற்ற கடந்த 48 ஆண்டு காலத்தில் தமிழ்நாட்டில் தமிழ் பயிற்று மொழியாக இல்லை. பள்ளிகளின் எண்ணிக்கையும், ஆசிரியர்களின் எண்ணிக்கையும் குறைந்தன.

புதிய பள்ளிகளைத் திறக்க அரசு முன் வருவதில்லை. இருக்கும் பள்ளிகளும் சீர் கேடுற்ற நிலையில் உள்ளன. ஆங்கில வழிக் கல்விப் பள்ளிகள் புற்றீசல்போல் பெருகிவிட்டன. கல்வி வணிகமாக்கப்பட்டு வசதிபடைத்தவர்களின் குழந்தைகளுக்கு மட்டுமே உரிய தாக்கப்பட்டுவிட்டது.

1978 ஆம் ஆண்டில் தனியார் பள்ளிகளுக்கு மானியம் அளிப்பதை அரசு நிறுத்தியது. தனியார் பள்ளிகள் மெட்ரிக் பள்ளிகளாக மாறத் தொடங்கின. அரசே இதற்கு ஊக்கம் அளித்தது.

1978 ஆம் ஆண்டு வரை மெட்ரிக் பள்ளிகள் சென்னை, மதுரை பல்கலைக்கழகங்களின் கட்டுப்பாட்டில் இயங்கின. அப்போது மொத்தம் 34 பள்ளிகள் மட்டுமே இருந்தன. ஆங்கிலோ - இந்திய குழந்தைகளும் பிற மாநிலங்களைச் சேர்ந்தவர்களின் குழந்தைகளும் இவற்றில் படித்தன.

சென்னைப் பல்கலைக் கழகத் துணைவேந்தராக இருந்த மால்கம் ஆதிசேஷையா, "மெட்ரிக் பள்ளிகளை நடத்துவது பல்கலைக்கழகத்தின் வேலையல்ல" என்று கூறி கைகழுவினார். எனவே, பொதுக்கல்வித் துறை இயக்குநர் மெட்ரிக் கல்வி அமைப்பு ஒன்றினை ஏற்படுத்தினார்.

இப்பள்ளிகளைக் கட்டுப்படுத்தும் நெறிமுறைகள் சட்டத்திட்டங்களில் இல்லை. எனவே, இடப்பரப்பு, கட்டடம், சுகாதார வசதி, பயிற்சி பெற்ற போதுமான ஆசிரியர்கள் எதுவும் இல்லாமல் மெட்ரிக் பள்ளிகள் ஏராளமாக தொடங்கப்பட்டன.

மெட்ரிக் பள்ளிகளுக்கு போதுமான மாணவர்கள் வேண்டுமென்றால், ஆங்கில வழிக் கல்வி முறையில் அமைந்த மழலையர் பள்ளிகள் வேண்டும். எனவே அப்பள்ளிகளும் முளைத்தன.

தொடக்கக் கல்விச் சட்டப்படி இப்பள்ளிகளில் தமிழே பயிற்சி மொழியாக இருக்க வேண்டும். ஆங்கிலம் பயிற்சி மொழியாக இருக்க முடியாது. எனவே ஆங்கிலவழி மழலையர் பள்ளிகள், இச்சட்டத்தின் கீழ் வராமல் இருப்பதற்காக தங்களைப் பதிவு செய்து கொள்ளவில்லை.

தமிழ்நாட்டில் தற்போது 3,000 த்திற்கும் மேற்பட்ட மெட்ரிக் பள்ளிகள் உள்ளன. அவற்றில் பாதி பள்ளிகள் அரசு அங்கீகாரம் பெறாதவையாகும்.

இந்தியாவிலேயே மெட்ரிக் பள்ளிகள் தமிழகத்தில்தான் அதிகம். திராவிடக் கட்சிகள் இவற்றுக்கு ஆக்கமும் ஊக்கமும் தந்து வளர்த்துவிட்டன.

ஆண்டுதோறும் வரவு - செலவுத் திட்டத்தில் கல்விக்கு ஒதுக்கப்படும் தொகை படிப்படியாகக் குறைக்கப்பட்டது. கல்வித் துறையை மேம்படுத்துவதைப் பற்றி ஆராய அமைக்கப்பட்ட பல நிபுணர் குழுக்கள் அளித்த பரிந்துரைகள் மீது எத்தகைய நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

ஆங்கில மழலையர் பள்ளிகள் 15,000, ஆங்கிலப் பள்ளிகள் 2,400, சி.பி.எஸ்.இ. 1,500, கேந்திரிய வித்யாலயா பள்ளிகள் 150, ஆங்கிலோ - இந்திய பள்ளிகள் 42 ஆகியவை தமிழ்நாட்டில் தமிழ்மொழியை ஒரு பாடமாகக்கூட வைக்காமல் இயங்கிக் கொண்டிருக்கின்றன. ஆசிரியர் பயிற்சி பெறாதவர்களும் போதிய கல்வித் தகுதியற்றவர்களும் இவற்றில் ஆசிரியர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

தமிழ்நாட்டில் உள்ள எல்லாப் பள்ளிகளிலும் மழலையர் வகுப்பு முதல் ஐந்தாம் வகுப்புவரை தமிழ் மட்டுமே பயிற்று மொழியாக இருக்க வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து தமிழ்ச்சான்றோர் பேரவையும் பிற தமிழ் மன்றங்களும் 1999 ஆம் ஆண்டு சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டத்தை நடத்தின.

அப்போது முதலமைச்சராக இருந்த மு. கருணாநிதி, அமைச்சராக இருந்த தமிழ்க் குடிமகனை அனுப்பிப் பேச்சுவார்த்தை நடத்தினார்.

தமிழைப் பயிற்று மொழியாக்குவது குறித்து ஆராய்ந்து அறிக்கை தர நீதியரசர் மோகன் தலைமையில் தமிழறிஞர் தமிழண்ணல், முத்துக்குமரன், இளங்குமரனார், வா.செ.குழந்தைசாமி ஆகியோரைக் கொண்ட குழுவை அமைத்தார்.

இக்குழு அளித்த பரிந்துரையில் தொடக்கப்பள்ளிகளில் தமிழ் மட்டுமே பயிற்சி மொழியாக இருப்பதற்கான சட்டத்தை அரசு கொண்டு வரவேண்டும் என அழுத்தம் திருத்தமாக கூறப்பட்டிருந்தது. ஆனால், அன்றைய முதல்வர் கருணாநிதி சட்டம் கொண்டுவராமல் அரசு ஆணை மட்டும் பிறப்பித்தார்.

அந்த அரசாணையை எதிர்த்து ஆங்கில வழி பள்ளிகள் உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்து அந்த அரசாணையை செல்லாததாக்கின. அதை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் தமிழக அரசால் போடப்பட்ட மேல் முறையீடு இன்னமும் நிலுவையில் இருக்கிறது.

தமிழ்நாட்டில் தொடர்வண்டி நிலையங்களின் பெயர்ப் பலகைகளில் இருந்த இந்தி எழுத்தை தார் பூசி அழிக்கும் போராட்டத்தை நடத்தியது தி.மு.க. என்பது மறக்க முடியாத ஒன்றாகும். ஆனால், அதே கட்சியைச் சேர்ந்த ஒருவர் மத்திய அரசில் அமைச்சராக பதவி வகித்தபோது, தமிழக சாலைகளில் உள்ள தொலை கற்களில் இந்தி எழுத்துகள் பொறிக்கப்பட்டன.

முதல் வகுப்பில் தொடங்கி பட்டப் படிப்பு வரை தமிழே கற்காமல் ஒருவர் பட்டம் பெற முடியும் என்ற நிலைமை தமிழகத்தில் நீடிக்கிறது. பிற மாநிலங்களில் அந்தந்த மொழிகளே கல்வி மொழியாகவும் ஆட்சி மொழியாகவும் நீதிமன்ற மொழியாகவும் அமைந்திருக்கின்றன.

ஆனால், தமிழ்நாட்டில் மட்டும் தமிழ் சவலைப் பிள்ளையாக கவனிப்பாரற்று மூலையில் கிடக்கிறது. மொழிப்போரில் தமிழுக்காகத் தங்கள் உயிர்களைத் தியாகம் செய்தவர்கள் எதற்காக அவ்வாறு செய்தார்கள்?

ஆங்கிலத்தை அரியணை ஏற்றுவதற்காகவா? தமிழைப் புறக்கணித்துவிட்டு ஆங்கிலப் பதாகையை உயர்த்திப் பிடிப்பவர்கள் ஆட்சிக் கட்டிலில் அமர்வதற்காகவா அந்தத் தியாக சீலர்கள் தங்களைத் தாங்களே அழித்துக்கொண்டார்கள்?

அடக்குமுறைகளுக்கு அடிபணியாமல் தமிழைக் காக்க உயிரிழந்தும், சிறைக் கொட்டடிகளில் சொல்லொண்ணாத கொடுமைகளைத் தாங்கியும் எண்ணற்ற வகையில் போராடியவர்களின் தோள்களின்மீது ஏறி ஆட்சிக்கட்டிலில் அமர்ந்த திராவிடக் கட்சிகள், தமிழை அரியாசனத்திலிருந்து கீழிறக்கி ஆங்கிலத்தை ஏற்றி அமர வைத்துவிட்டன. ஆனால், இன்னமும் தமிழ் தமிழ் எனப் பேசி மக்களை மயக்குவதற்கு முயற்சி செய்யும் துணிவு அவர்களுக்கு மட்டுமே கைவந்த கலையாக இருக்கிறது.

பழ. நெடுமாறன்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கே.பி.குறித்த இரகசிய அறிக்கையை புலனாய்வுத் துறையினர் சமர்ப்பிப்பு!

(கொழும்பு)

**தமிழீழ விடுதலைப் புலிகளின் முன்னாள் சர்வதேச ஆயுதக் கொடுக்கல்-வாங்கல்களின் பொறுப்பாளர் குமரன் பத்மநாதன் எனப்படும் கே.பி.தொடர்பில் இரகசிய அறிக்கை ஒன்றை புலனாய்வுப் பிரிவினர் அரசாங்கத்திடம் நேற்று முன்தினம் இரவு சமர்ப்பித்துள்ளனர். இந்த அறிக்கையில் இதுவரையில் வெளியிடப்படாத பல்வேறு தகவல்கள் உள்ளடக்கப்பட்டுள்ளது என தெரிவிக்கப் படுகிறது.**


இது குறித்து மேலும் தெரிய வருவதாவது,

குமரன் பத்மநாதனுக்கு எதிராக ஏற்கனவே ஜே.வி.பி. முறைப்பாடு ஒன்றை செய்துள்ளது.

நாட்டில் அழிவுகளை ஏற்படுத்தும் நோக்கில் ஸ்லின் எனப்படும் விமானங்களை இந்தோனேஷியாவிலிருந்து இலங்கைக்கு குமரன் பத்மநாதனே கொண்டு வந்துள்ளார்.

பங்களாதேஷின் விவசாய நிறுவனமொன்றிடமிருந்து விமானங்கள் கொள்வனவு செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறான பல குற்றச்சாட்டுக்கள் குமரன் பத்மநாதன் மீது சுமத்தப்பட்டுள்ள நிலையில் மேற்படி அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.



இதேவேளை குமரன் பத்மநாதன் தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்படும் என அரசாங்கம் அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

எனினும், விமல் வீரவன்ஸவின் தேசிய சுதந்திர முன்னணி போன்ற கட்சிகள் குமரன் பத்மநாதனுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கக்கூடாது என வலியுறுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-5)

## அனல் மின் நிலையத்தில் 3302 கோடி ரூபா மோசடி

(கொழும்பு)

நுரைச்சோலை மின் நிலைய நிர்மாணப் பணிகளின் போது கடந்த அரசாங்கம் 3ஆயிரத்து 302 கோடி ரூபா நிதி மோசடி செய்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அப்போதைய பிரதி மின்வலு மற்றும் எரிசக்தி அமைச்சரும் அரசாங்கத்தின் முக்கியஸ்தர் ஒருவரும் இணைந்து இவ்வாறு தரகுப் பணம் பெற்றுக்கொண்டுள்ளனர் என ஊழல் தவிர்ப்பு அமைப்பின் ஏற்பாட்டாளர் வசந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

இந்த மோசடி குறித்த சகல தகவல்களும் எம்மிடம் உண்டு. இது தொடர்பில் கையூட்டல் மற்றும் மோசடி தவிர்ப்பு ஆணைக்குழுவிடம் முறைப்பாடு செய்யப்படும்.

இந்த மொத்த தரகுப் பணம் ஆயிரத்து 716 கோடி மற்றும் ஆயிரத்து 586 கோடி என்ற அடிப்படையில் பகிரப்பட்டுள்ளது.

சீன நிறுவனமொன்று நுரைச்சோலை அனல் மின் நிலையத்தை உற்பத்தி செய்யும் சந்தர்ப்பத்தை பெற்றுக்கொண்டமைக்காக டி சில்வா என்பவருக்கு இந்த மொத்த தரகுப் பணத்தையும் வழங்கியுள்ளது.

சிங்கப்பூர் வங்கிக் கணக்குகளில் இந்தப் பணம் வைப்புச் செய்யப்பட்டுள்ளது என வசந்த சமரசிங்க நேற்று முன்தினம் கொழும்பில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)

## சட்டக் கல்லூரி பரீட்சை வினாத்தாள்கள் மூன்று மொழிகளிலும் வழங்கப்படும்

சட்டக்கல்லூரி பரீட்சை வினாத்தாள்கள் மூன்று மொழிகளிலும் வழங்கப்படும் என நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். சட்டக் கல்லூரிக்கான பரீட்சைகள் நடத்தப்படும் போது எதிர்வரும் காலங்களில் மூன்று மொழிகளிலும் மாணவர்களுக்கு வினாத்தாள்கள் வழங்கப்படவுள்ளது.

மாணவர்கள் விரும்பிய மொழியில் பரீட்சை வினாத்தாளுக்கு பதிலளிக்க முடியும் என அவர் தெரிவித்துள்ளார்.

சட்டக்கல்லூரி பரீட்சை மொழி மூலம் தொடர்பில் நீண்ட நாள் சர்ச்சை நீடித்து வந்தமை குறிப்பிடத்தக்கது.

சட்டக்கல்லூரியில் மாணவர்கள் எதிர்நோக்கி வரும் பிரச்சினைகள் தொடர்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற சந்திப்பில் பங்கேற்ற போது நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ இதனைத் தெரிவித்துள்ளார்.(இ-5)

## தனியார் துறையினருக்கு புதிய சட்டத்தின் மூலம் சம்பளத்தினை அதிகரிக்க நடவடிக்கை வேண்டும்

### ஜே.வி.பி.அரசிடம் கோரிக்கை

(கொழும்பு)

புதிய அரசாங்கத்தின் இடைக் கால வரவு செலவு திட்டத்தை வரவேற்றுள்ள மக்கள் விடுதலை முன்னணியின் ஊடக பேச்சாளர் விஜித ஹேரத், தனியார் துறையினரின் சம்பள உயர்வினைக் கோரிக்கையாக மட்டுப்படுத்தாது புதிய சட்டம் கொண்டுவரப்பட்டு உடனடியாக சம்பள உயர்வை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென வலியுறுத்தியுள்ளார்.

கொழும்பு பெலவத்தையில் அமைந்துள்ள மக்கள் விடுதலை முன்னணியின் கட்சி அலுவலகத்தில் நேற்று முன்தினம் வெள்ளிக் கிழமை ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த அரசாங்கத்தின் அளவற்றதும் மிதமிஞ்சியதுமான வரிக் கொள்கையின் கார ணமாக தாங்க முடியாத வாழ்க்கை சுமையைக் கொண்டிருந்த நாட்டு மக்களுக்கு நேற்றைய தினம் சுமை கணிசமான அளவு குறைவடைந்துள்ளது. அது போன்று புதிய வரவு செலவு திட்டத்தில் நிதியமைச்சர் தனியார் துறையினருக்கும் சம்பளம் 2 ஆயிரத்து 500 ரூபாவால் அதிகரிக்கப்படல் வேண்டும் என்று விடுத்த கோரிக்கை நடைமுறைக்கு வரும் என்பதில் பூரண நம்பிக்கை இல்லை.

அதனால் 2005 இலக்கம் 15 என்ற சட்ட மூலம் அமுல் செய்ய ப்பட்டு அல்லது புதிய சட்டமொன்று பாராளுமன்றத்தில் கொண்டு வரப்பட்டு அதன் வாயிலாக தனியார் நிறுவன ஊழியர்களுக்கு சம்பள உயர்வு வழங்க வேண்டும் என்று நிதியமைச்சரிடம் வேண்டுகோள் விடுக்கிறோம். இவ்வாறு புதிய அரசு செய்யுமாயின் அரச ஊழியர்களை விட அதிகமாயிருக்கும் தனியார் நிறுவன ஊழியர்களில் பெருந்தொகையினர் நன்மையடையக் கூடியதாய் அமையும்.

அத்துடன் அரச ஊழியர்களுடைய சம்பள உயர்வு வழங்கப்படுகின்ற போதே ஓய்வூதியமும் அதிகரிக்கப்படல் வேண்டும். ஓய்வூதிய அதிகரிப்பை ஏப்ரல் மாதம் வரை பிற்போடப்பட்டுள்ளமை ஏற்கத்தக்கதாக இல்லை. மேலும் கசினோ தொடர்பில் விதிக்கப்பட்டுள்ள வரி ஒரு முறை மட்டும் என்று நிதியமைச்சர் கூறியதில் தெளிவு இல்லை. அவ்வாறு ஒரு முறை மட்டும் வரி செலுத்திய பின் மீண்டும் அவர்கள் விடுதலை அடைவர். அவ்வாறாயின் அந்த வரிக்கொள்கையில் அர்த்தமில்லை. அதனால் இந்த வரித்திட்டம் பற்றி நிதியமைச்சர் மக்களுக்கு தெளிவுரை வழங்க வேண்டும்.

அத்துடன் சிறந்த பொருளாதாரக் கொள்கையொன்றை முன்வைத்து அதன் மூலம் வரவு செலவு திட்டம் வகுக்கப்பட்டு அதனால் மக்கள் சலுகைகளைப் பெற வழி செய்ய வேண்டும்.

புதிய அரசொன்று உருவாகியதாலேயே இவ்வாறான சலுகைகள் கிடைத்துள்ளன. இந்தச் சலுகைகள் குறுகிய கால நலன்களாக அல்லாது நீண்ட கால நலன்களாக மாற்றிக் கொள்வது நாட்டுமக்களு [illegible] என்று அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

## வாரம் ஒரு தகவல்

### எண்ணம் இருப்பது எங்கே?

"அப்பா, உங்களை ஒரு சிந்தனையாளர் என்று ஊரில் எல்லோரும் சொல்கிறார்கள்"

"ஆமாம் அதில் என்ன சந்தேகம் உனக்கு?"

"அதில் எனக்கு சந்தேகமில்லை என்னுடைய சந்தேகம் வேறு"

"என்ன சந்தேகம் ? கேள்"

"மனசு என்று சொல்கிறோமே அது எங்கே இருக்கிறது?"

"என்னுடைய மகன் நீ. அதனால்தான் இவ்வளவு புத்திசாலித் தனமாக கேட்கிறாய்.

எண்ணத்தை தவிர மனம் என்ற ஒன்று தனியே கிடையாது. எண்ணங்கள் தோன்றுகின்ற இடம் என்று ஒன்று இருப்பதாக கற்பனை செய்து கொண்டு அந்த இடத்தையே மனம் என்கிறோம்.உள்ளே நுழைந்து விபரித்தால் உண்மையான மனம் என்று ஒன்றைப் பார்க்க முடியாது. இப்படி மனம் இல்லை என்று இயல்பான நிலையை உணர்ந்து அடங்கினால் சாந்தி உண் டாகும்."

"அடேயப்பா"

"அவசரப்படாதே! இன்னும் கேள். மனம் என்பது பொய். அதன் உருவம் மாயம். ஆகையினால் மெய்யொடு பொருந்திய யோகி அந்த மனத்தின் வசப்படாமல் தனிமரமாய் நிற்பான்"

"அற்புதமான விளக்கம் அப்பா. இது உங்களுடைய சொந்த சிந்தனையா?"

"இது என்னுடைய சிந்தனை இல்லையப்பா. ரமணருடைய நிந்தனை. இதைப் பற்றியெல்லாம் நாமும் சிந்திக்க வேண்டும். ஏனென்றால் சிந்தனை என்பது மனிதனுக்கு இருக்கும் மகத் தான ஒரு சக்தி. ஒவ்வொரு மனிதனும் சுயமாக சிந்திக்க வேண் டும்."

"அது சரி சுயமாக சிந்திப்பது என்றால் என்னப்பா?"

"கொஞ்சம் இரு, உன் அம்மாவிடம் கேட்டுச் சொல்கிறேன்."

தென்கச்சி கோ.சுவாமிநாதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






**11, ஜனவரி 2015 அன்று ஞாயிறு வலம்புரியில் "பறிகொடுத்திட்டேன்" என்ற தலைப்பில் கணவனை இழந்த பெண்தலைமைத்துவக் குடும்பங்களைப் பற்றிய கதை ஒன்று வெளிவந்தது. 18 ஜனவரி 2015 ஞாயிறு அந்தப் பெண்ணின் நிலை பற்றிய விபரங்களுடன், பிரச்சினைகளிலிருந்து விடுபடுவதற்கான வழிமுறைகள் பற்றி, பெண்கள் அபிவிருத்திக்கான யாழ். மாவட்ட இணைப்பாளர், செல்வி. நவரட்ணம். உதயணி அவர்களின் நேர்காணல் வெளிவந்தது. தொடர்ந்து வாசகர்களின் கேள்விகளுக்கு அவர் பதிலளிக்கின்றார்.**

வனிதா,
அச்சுவேலி.

1.வணக்கம்எனதுபெயர்வனிதா. நான் திருமணமாகி நான்கு குழந்தைகளின் தாயார். அலுவலகம் ஒன்றில் பணியாற்றி வருகின்றேன். பிரச்சினை என்னவென்றால் எனது அலுவலகத்தில் பணிபுரிகின்ற சக பெண்மணி ஒருவர்கணவனை இழந்தவர். அவருக்கும் மூன்று குழந்தைகள். அவருடைய கணவர்



தற்கொலை செய்து இறந்து விட்டார். கடந்த ஐந்து வருடங்களாக தனித்து குழந்தைகளைப் பராமரித்து வருகின்ற அவ, தன்னுடைய எல்லாப் பிரச்சினைகளையும் என்னிடம் சொல் லுவா, சிலவேளை அழுவா, கடந்த சில நாட்களாக அவா, தன்னுடைய தூரத்து உறவினர்ஒருவர்தன்னை திருமணம் செய்வதற்கு கேட்பதாகவும் தனக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை என்றும் கவலைப்பட்டா, அவவுக்கு திருமணத்தில் ஆசை இருப்பதாகவும் எனக்குப் புரிந்தது. ஆனால் பிள்ளைகள் என்ன நினைப்பார்கள் என்று தடுமாறுகின்றா, சிலவேளை வாழ்க்கையே வெறுக்கிறது வனிதா, பேசாமல் அவர் போன இடத்துக்கே போய்விடலாம் என்று தோன்றுகின்றது! என்று சொல்லுவா! நான் அவவுக்கு ஏதாவது வகையில் உதவி செய்ய ஆசைப்படுகின்றேன். என்ன விதத்தில் அவவை ஆறுதல்படுத்தலாம்?

நீங்கள் அவருக்கு உதவி செய்ய வேண்டும் என்றெண்ணி இவ்வினாவைக் கேட்டிருப்பது

1.**விதவை என்ற ரீதியில் அவருடைய உளத்தாக்கங்கள்:** கணவர் தற்கொலை செய்து கொண்டு இறந்தமையால், மனைவிக்கு உளரீதியாக பிரிவுத் துயருடன் களங்கம் நிறைந்த அவப்பெயர் ஒன்றும் ஏற்பட்டிருக்கலாம். ஆனாலும் அந்தப் பெண் தன்னுடைய பிள்ளைகளுக்காகவும், எதிர்காலத்தின் நலன் கருதியும் வேலைக்குச் செல்வது பாராட்டத்தக்கது. அவரால் தன்னுடைய சொந்தக்காலில் நிற்க முடிகின்றது. பல விதவைப் பெண்கள் சமூகத்தில் முன்னுக்கு வந்து தொழில் புரிவதற்குத் தயங்கி நிற்கின்ற வேளையில், இப்பெண் தொடர்ந்தும் வேலை செய்கின்றார். எனவே அவர் ஓர் தன்னூக்கம் மிக்கவராகவே இருப்பார். ஆனாலும் சில வேளைகளில் அவருடைய மனம் அன்பு, அரவணைப்பு என்று கணவனின் பாசத்துக்காக ஏங்குகின்ற சந்தர்ப்பங்களும் உண்டு. அவைகிடைக்காத வேளையில், ஏன் நான் வாழவேண்டும் என்ற அவர் தற்கொலை ஆபத்து பற்றியும் சிந்திக்கின்றார். அது

வரவேற்கத்தக்கது. ஆனாலும் குறித்த அலுவலகப் பணியாளரின் விருப்பங்கள், கவலைகள், ஏககங்கள்தொடர்பில்உங்கள்கணிப்பினையே குறிப்பிட்டிருக்கின்றீர்கள். இருந்தாலும்குறித்த பெண்மணி தொடர்பில் நாம் அவரை நேரடியாகச் சந்தித்தால்தான் சரியான கணிப்பைச் செய்ய முடியும். இங்கு நாம் நான்கு விடயங்களில் முக்கியத்துவம் செலுத்திப் பார்க்க வேண்டும்.

நன்மையானது அல்ல. அவருடைய உள்ளத்தை இவ்விடயங்களில் ஆற்றுப்படுத்த வேண்டிய நிலை இருக்கின்றது. அவர்பிள்ளைகளை நல்ல முறையில் பராமரித்தல், வேலைக்கு போவது, தனது கால்களில் நிற்பது போன்ற அவரின் செயல்களை மதித்துப் பாராட்ட வேண்டும். நேரான ஊக்கத்தையும் அனுசரணையும் கொடுத்து அவரது தன்னம்பிக் கையையும் மதிப்பையும் கட்டியெழுப்ப உதவவேண்டும். ஆனாலும் மனதில் அடக்கி வைக்காது அவ்வப்போது அவர் உங்களிடம் பரிமாறும் விடயங்களை அமைதியாகச் செவிமடுத்து, அவ்வப்போது ஆறுதல் அளிப்பது சிறந்த விடயமாகும்.

2.**மறுமணம் பற்றி அவருடைய பார்வை:** மறுமணம் பற்றிய விடயத்தில் நாம் எந்த முடிவையும்அவர்கள்மேல்திணித்தல் கூடாது. தாங்களாகவே எடுக்கின்ற முடிவுகளில் தான் அவர்கள் திருப்திப்பட்டுக் கொள்வார்கள். வேறு ஒருவரைத் திருமணம் செய்து கொள்வதில் தனக்கு ஏற்படும் சாதக, பாதகங்களை ஆராய்ந்து பார்த்து முடிவெடுக்க வேண்டியநிலைஅவருக்குஉண்டு. மாறாக இல்லையப்பா, நீங்கள் திருமணம் செய்து கொள்வது தான் நல்லது என்றோ, இல்லை திருமணம் செய்ய வேண்டாம் என்றோ முடிவைக் திணித்துக் கூறிவிடமுடியாது. தன்னுடைய எதிர்காலம், பிள்ளைகளின் எதிர்காலம் போன்ற விடயங்களில் கவனம் செலுத்தி யோசித்து முடிவெடுக்க வேண்டியது அவரது கடமையாகும்.

3.**மறுமணத்தை நாடும் நபர் பற்றிய விபரமும் சரியான தகவல்களும்:** மறுமணம் முடிக்க கேட்ட நபர் தொடர்பான முழு விபரமும், அவரின் நடத்தை, அவரின் எதிர்பார்ப்புக்கள் என்பவை பற்றித் தெளிவாகவும், சரியான தகவல்களையும் கேட்டறிந்து கொள்ள வேண்டும்.

அவரைத் திருமணம் செய்து கொண்ட பின்னர், வரப் போகின்ற காலத்தில் அவர் குடும்பத்தை நன்றாகக்கவனித்துக்கொள்வாரா? பிள்ளைகளின் படிப்பு, வாழ்க்கை என்பவற்றில் அக்கறையுடன் இருப்பாரா? என்பவை பற்றி குறித்த ஆணின் மேல் முழு நம்பிக்கை ஏற்பட்டாலேயே அவரை மறுமணம் செய்கின்ற முடிவை எடுக்க முடியும்.

4.**பிள்ளைகளின் விருப்பு வெறுப்பும், புதிய நபர் தொடர்பான பிள்ளைகளின் எண்ணமும்:** தங்களுடைய தந்தையை இழந்த பிள்ளைகள், தாயின் உணர்வுகளைப் புரிந்து கொள்ளக்கூடிய நிலைக்கு வரவேண்டும். அதே வேளை தந்தையின் இடத்துக்கு ஓர் புதிய நபர் வருவாராயின் அவரை ஏற்றுக் கொள்ளும் மனப்பக்குவத்துக்கும், சமூகத்தின் சஞ்சலம் மிக்க பார்வைக்கு ஈடு கொடுக்கும் நிலைக்கும் வர வேண்டும்.

மொத்தத்தில் இவையனைத்தும் செய்வதற்கு உங்கள் தனி ஓர் நபரால் முடியும் என்று கூறமுடியாது. அவரை, உளவளத்துணையாளர் ஒருவரிடம் அனுப்பி வேண்டிய வழிகாட்டலைப் பெற்றுக் கொள்ளச் சொல்லுங்கள்.

சுகுமார்
வட்டுக்கோட்டை.

2.நாம் என்னதான் செய்தாலும் ஓர் குடும்பத்தில் தந்தையின் வெற்றிடம், எப்போதுமே நிரப்ப முடியாதது. ஆனாலும் பிள்ளைகள் தந்தையின் இழப்பை ஏற்றுக் கொண்டு வாழ்வில் முன்னேறி ஆளுமைமிக்கவராக வாழ்வதற்கு உளரீதியாக எவற்றைச் செய்ய வேண்டும்?

உண்மைதான். குடும்பத்தலைவன் ஒருவனின் இழப்பு ஈடு செய்ய முடியாததுதான். ஆனாலும் தந்தையின்றி வளர்ந்த குழந்தைகள் ஆளுமை மிக்கவராக வளர்ந்து மிகப் பெரிய நிலைக்கு வந்து உலகம் போற்ற வாழ்ந்தவர்கள் பலர். தந்தைதான் எந்த ஒரு குழந்தைக்கும் முதலாவது முன்மாதிரி. அவரைப் பார்த்துத்தான் கற்றுக் கொள்ளத் தொடங்குகின்றனர். ஆனால் அவருடைய இழப்பில், சிறந்த பாதுகாப்பை, வருமானத்தை, அன்பு அரவணைப்பை, கண்டிப்பை என்று பலவிடயங்களைப் பிள்ளைகள் இழந்து விடுகின்றனர். "தந்தை சொல்மிக்க மந்திரமில்லை" என்று பெரியோர் கூறுவர். ஏனெனில் குடும்பத்தில் தந்தையின் சொல்லுக்கு எப்போதுமே மதிப்பும், பயம் கலந்த மரியாதையும் இருக்கும். அவற்றை பிள்ளைகள் இழக்கும் போது, தந்தையின் இடத்தை ஈடுசெய்ய வேண்டிய கட்டாயம் இருக்கின்றது.

குறிப்பாக, குடும்பத்தில் மூத்த வளர்ந்த பிள்ளை தந்தையின் பொறுப்புக்களையும், கடமைகளையும் ஏற்று முன்வந்து செய்து கொண்டு ஏனைய சகோதரர்களை வழிநடத்துகின்ற சந்தர்ப்பங்கள் அதிகமுண்டு. அவ்வாறு வளர்ந்த பிள்ளைகள் இல்லாவிடின் அவர்களுடைய சித்தப்பா, மாமா என்று உறவினர்களை தந்தையின் இடத்தில் வைத்து அவர்களின் பேச்சுக்கு கட்டுப்பட்டு வாழும் நிலையும் உண்டு. இன்னும் சிலர் தங்கள் பெரிய தந்தையை அப்பா என்று அழைப்பதுமுண்டு. இவை அனைத்தும் தந்தையின் இடத்தை நிரப்பும் செயற்பாடுகள். இவற்றை விட சிறுவயதிலிருந்தே, சிறுவர் குழுச் செயற்பாடுகளிலும், ஏனைய கல்விசாரா செயற்பாடுகளிலும் ஈடுபடக் குழந்தைகளை ஊக்குவிக்க வேண்டும். தந்தையைப் பற்றி எண்ணங்களை சுதந்திரமாக வெளிப்படுத்தவும், மற்றவர்களோடு பகிர்ந்து கொள்ளவும் சந்தர்ப்பமளிக்க வேண்டும். தாய் இவ்விடயத்தில் மிகவும் கவனமாக இருக்க வேண்டும். தந்தையின நல்ல பக்கங்களைக கூறி, "நீ அப்பாவைப் போல அறிவாகப்பேசுகின்றாய்","தம்பிக்கு அப்பாவின்ரை மூக்கு மாதிரி கூர் மூக்கு" "நடையைப்பார் அப்பிடியே அப்பாதான்" என்று பிள்ளைகளிடம், அப்பாவின் இயல்புகளைக் கூறி, வர்ணித்து அவரின் நல்ல தன்மைகளைப் பற்றி இடையிடையே சொல்லி நெறிப்படுத்த வேண்டும்.

(இதன் தொடர்ச்சி அடுத்த வாரம்)

**வாசகர்களிடமிருந்து கேள்விகள், கருத்துக்கள் எதிர் பார்க்கப்படுகின்றன.**

**தரமானவை துறைசார்ந்த நிபுணர்களின் பதில்களுடன் வலம்புரியில் வெளியாகும்.**

**அனுப்ப வேண்டிய முகவரி:**

**சாந்திகம் ஊடகக்குழு,**
**8, 8/1, கற்பக விநாயகர் ஒழுங்கை,**
**கச்சேரி நல்லூர் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

**மின்னஞ்சல் மூலமாக அனுப்பப்படும் கேள்விகளும் கருத்துக்களும் ஏற்றுக்கொள்ளப்படும்.**

**E.mail:psych@sltnet.lk**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரதமர் ரணிலை தோற்கடிக்க மகிந்த களமிறங்க வேண்டும்

## உதய கம்மன்பில கூறுகிறார்

(கொழும்பு)





**பிரதமர் ரணில் விக்ரமசிங்கவை தோற்கடிக்க வேண்டுமாயின், முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பிரதமர் வேட்பாளராக களமிறங்க வேண்டுமென மேல் மாகாண சபை உறுப்பினர் உதய கம்மன்பில தெரிவித்தார்**

எதிர்வரும் பொதுத் தேர்தல் நாட்டைப் போன்றே கூட்டமைப்பிற்கும் மிக முக்கியமானது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் பொதுத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு தோல்வியைத் தழுவினால், இனனும் 20 ஆண்டுகளுக்கு எதிர்க்கட்சியில் இருக்க நேரிடும்.

அந்த தோல்வியை ஏற்றுக் கொள்ள மனதை திடப்படுத்திக் கொள்ள வேண்டியதுதான். நாட்டில் பிரிவினைவாதம் உருவாகி தனி நாடு ஒன்று உருவாவதனை தடுக்க முடியாது. பொதுத் தேர்தலில் கூட்டமைப்பு வெற்றியீட்ட வேண்டுமாயின் பிரதமர் வேட்பாளராக மகிந்த ராஜபக்ச போட்டியிட வேண்டும். வேறு யார் போட்டியிட்டாலும் ரணில் வெற்றியீட்டுவார். மகிந்தவை வெற்றியீட்டச் செய்ய புதிய கூட்டணி ஒன்றை அமைக்கவும் நாம்தயார்என உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் பொதுத் தேர்தல் தொடர்பில் சிங்கள ஊடகமொன்று எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த போது இதனைக் தெரிவித்தார். (இ-5)

## பேக்கரி உற்பத்திகளின் விலைகள் குறைக்கப்படும்



பாண் தவிர்ந்த ஏனைய பேக்கரி உற்பத்திகளின் விலைகளையும் குறைப்பது தொடர்பில் ஆராய்வதாக அகில இலங்கை பேக்கரி உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது. புதிய அரசாங்கத்தின் இடைக்கால வரவு-செலவுத் திட்டத்தில் கோதுமை மாவின் விலை 12 ரூபா 50 சதத்தினால் குறைக்கப்பட்டதை அடுத்து இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டதாக சங்கத்தின் தலைவர் கூறினார். இதேவேளை முச்சக்கரவண்டி கட்டணங்களை 10 சதவீதத்தாலும், பாடசாலை வான்களுக்கான கட்டணங்களை 5 வீதத்தாலும் குறைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று உள்ளக போக்குவரத்து அமைச்சர் தெரிவித்துள்ளார். இந்தக் கட்டண முறை பெப்ரவரி மாதம் முதலாம் திகதியிலிருந்து நடைமுறைக்குவரும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-11)

## ரணிலின் வாகனம் மீதான தாக்குதல் குறித்து விசாரணை

கடந்த 2013ஆம் ஆண்டு ஜூன் மாதம் எதிர்க்கட்சி தலைவர் ரணில் விக்ரமசிங்க பயணித்த வாகனத்திற்கு பலபிட்டிய பிரதேசத்தில் நடந்த தாக்குதல் சம்பவம் தொடர்பாக முறையான விசாரணைகள் மேற்கொள்ள வேண்டும் என அம்பலாங்கொட பொலிஸாருக்கு மீண்டும் முறைப்பாடு கிடைத்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த சம்பவம் தொடர்பாக பலபிட்டிய பிரதேச சபை உறுப்பினர் அஜித் அசேல டி சொய்சா மீண்டும் முறைப்பாடு செய்துள்ளார்.

தாக்குதல் இடம்பெற்ற தினம் அம்பலாங்கொட பிரதேச சபை உறுப்பினர் பொலிஸாருக்கு முறைபாடு செய்திருந்தார். எனினும் இது வரை முறையான விசாரணை மேற்கொள்ளவில்லை எனவும் தெரிவித்தார். (இ-5)

## கட்டாரில் வாகன விபத்தில் சிக்கிய இலங். விமானப் பணிப் பெண் பலி!

கட்டார் டோஹாவில் இடம் பெற்ற வாகன விபத்தொன்றில் இலங்கை விமானப் பணிப் பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

மேலும் விமானப் பணியாளர்கள் இருவர் உட்பட மற்றுமொரு விமானப்பணிப்பெண்ணும் படுகாயமடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த டிசெம்பர் மாதம் 12ஆம் திகதி அத்துருகிரிய, ஹோகந்தரவில் இடம்பெற்ற விமான விபத்தில் பலியான விமானியின் மனைவியே, இந்த விபத்தில் பலியாகியிருப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. (இ-5)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 270

பிச்சைக்கார நலச்சங்கம்




லக்ஷி லக்ஷி




சியாமினி சியா

"எங்க தெருவில எனக்கு நிறைய எதிரிகள் இருக்காங்கிறது எனக்கு இப்பத்தான் தெரியுது"!!!
"என்னடி சொல்றே?"



"ஆமாக்கா... நேத்து கோவிச்சிட்டுப் போன மாமியார் கிழவியை எங்க தெருக்காரங்களே சமாதானப்படுத்தி திரும்ப கூப்பிட்டு வந்துட்டாங்களே!!!"

பிருந்தன்

**இதுதான் நாகரிகம் அடையாதவனுக்கும், நாகரிகம் அடைந்தவனுக்கும் உள்ள வித்தியாசம்**



சந்திரன் சாலி

சர்தார் கோயிலில் சத்தமாக கடவுளிடம் வேண்டிக்கொள்கிறான்.
சர்தார் சிறுவன் : கடவுளே பஞ்சாப் மாநிலத்தின் தலைநகரமாக நியூயோர்க்கை சீக்கிரமாக மாற்று என்று.
அருகில் இருப்பவர் : தம்பி ஏன்பா இப்படி வேண்டுகிறாய்?
சர்தார் சிறுவன் : இல்ல மடம் நான் பரீட்சையில் அவ்வாறு எழுதிவிட்டேன். அவரு மாத்திவிட்டால் விடை சரியாகிவிடும் அதனால் தான் என்று



சிவம் சக்தி




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valam.puri.16 எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ராஜபக்ஷவின் குடும்பத்தினருக்கு எதிராக 2000 முறைப்பாடுகள் இதுவரை பதிவு

(கொழும்பு)

**முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, பசில்,கோத்தபாய, யோசித்த, ஷிரந்தி உள்ளிட்ட ராஜபக்ஷ குடும்பத்தினரினதும் அரசியல்வாதிகளினதும் ஊழல் தொடர்பிலான முறைப் பாடுகள் 2000 பதிவாகியுள்ளன. இவற்றில் 30 முறையீ டுகளே இலங்கை ஊழல் தடுப்பு ஆணைக் குழுவில் தாக்கல் செய்யப்பட்டுள் ளன.இது குறித்தான தம்மிடமுள்ள மேலும் 20 முறைப் பாடுகள் விரைவில் தாக்கல் செய்யப்படும். குறித்த முறைப் பாடுகளில் 150 மகிந்த ராஜபக்ஷ விற்கு எதிரானது என ஊழல் எதிர்ப்பு குரல் அமைப்பு சுட்டிக்காட்டியது.**

## ஊழல் எதிர்ப்பு குரல் பட்டியல்

கொழும்பிலுள்ள தேசிய நூல கத்தில் நேற்று முன்தினம் இடம் பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டின் போதே அதன் ஏற்பாட்டாளர் வசந்த சமர சிங்க இதனை தெரிவித் தார்.

அவர் மேலும் கூறுகையில்,

முன்னைய அரசாங்கம் பல ஊழல் மோசடிகள், குற்றச்சாட் டுகளுக்கு உள்ளாகியுள்ளது. இந் நிலையில் இது தொடர்பில் இலஞ்ச ஊழல் தடுப்பு ஆணைக் குழுவில் முறைப்பாடு செய்யப்பட்ட போதிலும் எந்தவொரு நடவடிக்கையும் எடுத்த பாடில்லை.

ஊழல் எதிர்ப்பு குரல் அமைப்பி னது ஊழல் மோசடி தொடர்பிலான ஆவணங்களை தற்போது திரட்டி வருகிறது.

இதற்கமைய இதுவரை 2000 முறைப்பாடுகள் எம்மிடம் கிடைக் கப் பெற்றுள்ளன. குறித்த முறைப் பாடுகளானது முன்னாள் ஜனாதி பதி மகிந்த ராஜபக்ஷ, பஷில் ராஜபக்ஷ, கோத்தபாய ராஜபக்ஷ, ஷிரந்தி ராஜபக்ஷ, யோசித்த, ரோஹித்த ராஜபக்ஷ உள்ளிட்ட ராஜபக்ஷ குடும்பத்தினரிற்கும் மேலும் முன் னைய அரசாங்கத்தை பிரதி நிதித் துவப்படுத்திய அமைச்சர்கள் தொட ர்பிலான மோசடி குறித்த முறைப் பாடுகளும் எமக்கு கிடைக்கப்பெற் றுள்ளன.

இதற்கமைய மகிந்த ராஜபக் ஷவிற்கு எதிராக 150 முறைப்பாடு களும் சஜித்வாஸ் குணவர்தன எம்.பி.க்கு எதிராக 200 முறைப் பாடுகளும் கிடைக்கப்பெற் றுள்ளன. இவற்றில் 30 முறைப்பாடுகள் இலஞ்ச ஊழல் தடுப்பு ஆணைக் குழுவிடம் ஒப்படைக்கப்பட்டுள் ளது.

மேற்குறித்த முறைப்பாடுகளை உரிய முறையில் செய்து மேலும் 20 முறைப்பாடுகள் விரைவில் தாக்கல் செய்யப்படவுள்ளது.

குறித்த முறைப்பாடுகளுக்கு அமைவாக சஜித்வாஸ் குண வர்த் தன எம்.பி.யின் மனைவியின் பெயரில் சிங்கப்பூரில் ஹோட்டல் இருப்பதாகவும் முன்னாள் அமைச்சர் மஹிந் தானந்த அளுத்கம கேவிற்கு சிங்கப்பூர் வங்கி ஒன்றில் கணக்கு இருப்பதாகவும் தகவல் கிடைக் கப்பெற்றுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

## சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 100 | 120 | 100 | 100 |
| உருளைக்கிழங்கு | 60 | 80 | 70 | 70 |
| பச்சைமிளகாய் | 300 | 400 | 300 | 400 |
| தக்காளி | 200 | 260 | 220 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 60 | 45 | 50 |
| கோவா | 100 | 100 | 120 | 120 |
| கரட் | 200 | 150 | 120 | 200 |
| பூசணி | 70 | 100 | 60 | 100 |
| புடோல் | 70 | 80 | 70 | 80 |
| வாழைக்காய் | 100 | 120 | 80 | 100 |
| சின்ன வெங்காயம் | 60-90 | 120 | 110 | 120 |
| பெரிய வெங்காயம் | 80 | 80 | 80 | 80 |
| பாகற்காய் | 100 | 150 | 120 | 200 |
| வெண்டிக்காய் | 100 | 120 | 80 | 100 |
| கருணைக் கிழங்கு | 60 | 60 | 50 | 80 |
| பயற்றங்காய் | — | 120 | 130 | 140 |
| லீக்ஸ் | 250 | 250 | — | 300 |
| பீற்றூட் | 180 | 200 | 160 | 200 |
| கறிமிளகாய் | — | 350 | 300 | 200 |
| முருங்கைக்காய் | — | 600 | — | — |
| போஞ்சி | 180 | 250 | 200 | 160 |
| கத்தரிதம்புள்ள | — | 100 | 60 | 80 |
| கீரை - 1 பிடி | 20 | 30 | 20 | 30 |
| தேசிக்காய் | 40 | 60 | 50 | 40 |
| தேங்காய் (ஒன்று) | 25-60 | 50 | 40-45 | 35-40 |
| இராசவள்ளி | 100 | 130 | 120 | 120 |
| வெங்காயப்பூ | 90-120 | 160 | 180 | 200 |

## பிரதம நீதியரசரை நீக்குவதற்கான அதிகாரம் ஜனாதிபதிக்கு இல்லை!

### வாசுதேவ சுட்டிக்காட்டு

பிரதம நீதியரசர் ஒருவரை நியமிக்கும் அதிகாரம் நிறை வேற்று அதிகாரம் கொண்ட ஜனாதி பதிக்கு உள்ளதே தவிர அவரை நீக்குவ தற்கு அதிகாரம் கிடையாது. நீக்கும் அதிகாரம் பாராளுமன்றத்திற்கே உள்ளதென வலியுறுத்தும் ஜனநா யக இடதுசாரி முன்னணியின் தலை வரும் பாராளுமன்ற உறுப்பினரு மான வாசுதேவ நாணயக்கார பிரதம நீதியரசரை வெளியே ற்றும் நிலையியற் கட்டளைகளில் குறை கள் இருப்பதாகவும் அது திருத் தப்பட வேண்டுமென்றும் அவர் தெரிவித்தார்.

இது தொடர்பாக முன்னாள் அமைச்சரும் எம்.பி. யுமான வாசு தேவ நாணயக்கார மேலும் தெரி விக்கையில்,

முன்னாள் பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கா பாரா ளுமன்ற நிலையியற் கட்டளை களுக்கமைய மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் பிரேரணை நிறைவேற்றப்பட்டு சபாநாயகரின் ஒப்புதலுடன் வெளியேற்றப்பட்டார்.

இவ்வாறான அதிகாரம் பாராளு மன்றத்திற்கே உள்ளது. பாராளு மன்றத்தின் முடிவை மீறுவதற்கு ஜனாதிபதிக்கு அதிகாரம் கிடை யாது.இலங்கையின் நீதித்துறை பாராளுமன்றத்திற்கு கட்டுப்பட்ட தாகவே உள்ளது. பிரதம நீதியரசர் ஒருவரை நியமிக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு உள்ளது. ஆனால் அவரை வெளியேற்றும் அதிகாரம் ஜனாதிபதிக்கு கிடையாது.

அவ் அதிகாரம் பாராளு மன்றத் திற்கே உள்ளது. எனவே ஜனாதி பதி மைத்திரிபால சிறிசேன பிரதம நீதியரசரை வெளியேற்றியமை பாராளுமன்ற இறையாண் மையை மீறிய செயற்பாடாகும்.

அத்தோடு அது பிழையான ஒரு முன்னுதாரணமாகும்.பிரதம நீதி யரசர் ஒருவரை வெளியேற்றுவது தொடர்பான பாராளுமன்ற நிலை யியற் கட்டளைகளில் குறைபா டுகள் இருக்கின்றன என அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

## பிரிவுத்துயர் பகிர்வு



**சிவலிங்கம் சர்வதர்சன்**

180, அரசடி வீதி, கந்தர்மடத் தைப் பிறப்பிடமாகவும் 23/3A, ஹாமேர்ஸ் அவனியூ, வெள் ளவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட சிவலிங்கம் சர்வதர்சன் (Bussiness Management Executive, Witel Solutions, Maradana) கடந்த 28 ஆம் திகதி புதன்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று காலை 9.30 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் பூதவுடல் கோம்பயன்மணல் இந்து மயானத் தில் தகனம் செய்யப்படும்.



**திருமதி கதிரவேற்பிள்ளை திலகமணி**

ஏழாலை மேற்கைப் பிறப்பிட மாகவும்வசிப்பிடமாகவும்கொண்ட கதிரவேற்பிள்ளை திலகமணி கடந்த 29 ஆம் திகதி வியாழக் கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று காலை 8 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் பூதவுடல் உசத்தியோடை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.



**எட்வேட் சாமுவேல்**

கொழும்பை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட எட் வேட் சாமுவேல் கடந்த 28 ஆம் திகதி புதன்கிழமை அன்று கால மானார்.

அன்னாரின் பூதவுடல் நாளை திங்கட்கிழமை யாழ்ப்பாணம் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.



**திருமதி தவராசா புவனேஸ்வரி**

மாதகலைப் பிறப்பிடமாகவும் சண்டிலிப்பாயை தற்காலிக வசி ப்பிடமாகவும் கொண்ட தவராசா புவனேஸ்வரி நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை அன்று கால மானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று நண்பகல் 12 மணிக்கு மாசியாப்பிட்டி சண்டிலிப்பாயில் உள்ள அவ ரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் பூதவுடல் கொட்டுப் பனை இந்துமயானத்தில் தகனம் செய்யப்படும்.



**திருமதி கணபதிப்பிள்ளை திருவாட்டி வள்ளியம்மை**

கரவெட்டி மேற்கு சம்பந்தர் கடை யடியைப் பிறப்பிடமாகவும் நெல் லியடி கிழக்கு, முடக்காட்டை வசிப் பிடமாகவும் கொண்ட கணபதிப் பிள்ளை திருவாட்டி வள்ளியம்மை காலமானார். அன்னாரின் பூதவுடல் இன்று முற்பகல் 10.00 மணி க்கு சோனப்புச் சுடுகாட்டில் தகனம் செய்யப்படும்.



**சுப்பையா அரியரத்தினம்**

மட்டுவில் தெற்கு, சாவகச்சேரியை பிறப்பிடமாகவும் கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட சுப் பையா அரியரத்தினம் கடந்த 29 ஆம் திகதி வியாழக்கிழமை அன்று காலமானார். அன்னாரின் பூதவுடல் இன்று பொறளை மயானத்தில் தகனம் செய்யப்படும்.



**திருமதி நடராசா சறோஜினிதேவி**

திருகோணமலை,சமாது ஒழுங்கையை பிறப்பிடமாகவும் தற்போது கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட நடராசா சறோஜினிதேவி கடந்த 26 ஆம் திகதி திங்கட்கிழமை அன்று கனடாவில் காலமானார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் 4 ஆம் திகதி புதன்கிழமை கனடாவில் நடைபெறும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெல் அறுவடைக்கான

# இயந்திர கூலி அதிகம்

## கட்டுப்படுத்துமாறு விவசாயிகள் கோரிக்கை

(மல்லாவி)

**அரசாங்கத்தினால் டீசலுக்கான விலை குறைப்பு செய்யப்பட்டபோதிலும் முல்லைத்தீவு, கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களில் உள்ள விவசாயிகளுக்கு இதனால் நன்மை ஏற்படவில்லையெனவும் நெல் அறுவடை செய்யும் இயந்திரத்தின் கூலி 7 ஆயிரம் ரூபா தொடக்கம் 9 ஆயிரம் ரூபா வரையில் அறவிடப்படுவதுடன் நெல்குற்றும் கூலி கிலோவிற்கு 5 ரூபாவிற்கு மேல் அறவிடப்படுவதாகவும் இதனால் தாம் பாதிக்கப்பட்டுள்ளதால் வடமாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் விரைந்து நடவடிக்கை எடுத்து கூலியை நிர்ணயம் செய்து தரவேண்டும் என பாதிக்கப்பட்டுள்ள விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.**

இது தொடர்பில் அவர்கள் தெரிவிக்கையில், கடந்த 2010 தொடக்கம் 2014ஆம் ஆண்டுவரை வறட்சியினாலும் மற்றும் வெள்ளப் பெருக்கினாலும் விவசாய நடவடிக்கைகள் பாதிப்புக்குள்ளான நிலையில் நடப்பாண்டில் கிடைத்த மழைவீழ்ச்சியையடுத்து நெற்செய்கை மேற்கொண்டோம்.

தற்போது நெல் அறுவடை வேலை நடைபெறும் நிலையில் ஏக்கர் ஒன்றிற்கு அறுவடை இயந்திரத்தின் கூலியாக 7 ஆயிரம் ரூபா தொடக்கம் 9 ஆயிரம் ரூபாா வரை இடத்திற்கு இடம் கூலி மாறுபட்டு அறவிடப்படுகின்றது.

ஒரு ஏக்கர் நெல் அருவி வெட்டுவதற்கு சராசரி 12லீற்றர் டீசல் செலவாகும் நிலையில் ஒரு லீற்றர் டீசல் 95 ரூபா வீதம் ஆயிரத்து 140 ரூபாவே செலவு ஏற்படுகின்றது.

இவ்வாறிருக்கும்போது ஏன் அதிகரித்த கூலி அறவிடப்படுகின்றது என விவசாயிகளால் கேள்வி எழுப்பப்படுகின்றது.

கடந்த காலங்களில் ஏக்கர் ஒன்றிற்கு 4 ஆயிரம் ரூபா தொடக்கம் 5 ஆயிரம் ரூபா வரை அறுவடை இயந்திரத்தின் கூலி அறிவிடப்பட்ட நிலையில் தற்போது டீசல் விலை குறைவடைந்த நிலையில் அறுவடை இயந் திரத்தின்கூலி அதிகரிப்பதாகவும் சுட்டிக்காட்டப்படுகிறது.

எனவே விவசாய அமைச்சர் விரைவாக நடவடிக்கை எடுத்துஅறுவடை இயந்திரத்தின் கூலியை கட்டுப்பாட்டு நிர்ணயம் செய்ய வேண்டுமென பாதிக்கப்பட்ட விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-2-15)

## இராமநாதபுரம் வயலூரில் புதிர் எடுத்தல் விழா

(கிளிநொச்சி)

வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் ஏற்பாட்டில் பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தினால் கிளிநொச்சி மாவட்டத்தில் இராமநாதபுரம் வயலூர் முருகன் கோவில் ஆலய பிரதேசத்தில் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை காலை 8 மணியளவில் புதிர் எடுத்தல் விழா பண்பாட்டலுவல்கள் திணைக்கள பிரதிப்பணிப்பாளர் திருமதி உஷா சுபலிங்கம் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார்.

இந்நிகழ்வில் எமது பாரம்பரிய உழவுத்தொழிலின் ஓர் அங்கமான புதிர் எடுத்தல், புதிதுண்ணல் மற்றும் கிராமிய கல நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளதாக வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் சி.சத்தியசீலன் அறிவித்துள்ளார். (அ-2)




## கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன



(மருதநகர்)

கிளிநொச்சி மருதநகர் சேர்பொன் இராமநாதன் முன்பள்ளியில் கல்வி கற்கும் மாலை நேர பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன.

மருதநகர் கிழக்கு கிராம அபிவிருத்தி சங்கத்தலைவர் அ.சத்தியானந்தம் தலைமை யில் இந்நிகழ்வு நேற்று முன்தினம் இடம் பெற்றது. இதில் கரை ச்சி பிரதேசசபையின் உபதவிசாளர் ப.நகுலேஸ்வரன், பாண்டியன் குளம் பிரதேசசபை தலைவர் என்.செந்தூரன் ,கரைச்சி பிரதேச சபை உறுப்பினர் ப.சேதுபதி ஆகியோரும் கலந்து கொண்ட னர்.

இந்நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரனின் பன்முகப்படுத்தப்பட்ட நிதியிலிருந்து மருதநகர் விஜியத்தார் சனசமூக நிலையத்திற்கு ஒரு தொகுதி தளபாடங்களும் வழங்கப்பட்டன. இதனை பாராளுமன்ற உறுப்பினரின் பிரத்தியேக செயலாளர் பொன். காந்தன் வழங்கினார். (அ-2-258)

## கிளி.வைத்தியசாலை வளாகத்தினுள் வாகனங்கள் சேதமாக்கப்படுகின்றன

### ஊழியர்கள் விசனம்

(கனகபுரம்)

கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் கடமை புரிகின்றவர்களுக்கென வைத்தியசாலை வளாகத்தினுள் அமைக்கப்பட்டுள்ள துவிச்சக்கரவண்டி பாதுகாப்பு நிலையத்தில் நிறுத்தி வைக்கப்படும் வாகனங்கள், துவிச்சக்கரவண்டிகள் என்பன விசமிகளால் சேதப்படுத்தப்படுவதாக வாகன உரிமையாளர்களால் கவலை தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பில் தெரியவருவதாவது,

இரவுக்கடமைக்காக வைத்தியசாலைக்கு வரும் ஊழியர்கள் குறித்த இடத்தில் நிறுத்தி வைக்கும் மோட்டார் சைக்கிள்கள், துவிச்சக்கரவண்டிகள் என்பவற்றைஎடுத்துச் செல்வதற்கென மறுநாள் காலை வரும் போது நிறுத்தப்பட்ட வாகனங்கள் காற்றுப்போய் இருப்பதாக பாதிக்கப்பட்ட ஊழியர்களால் தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன் மோட்டார் சைக்கிளில் பொருத்தப்பட்டிருக்கும் கண்ணாடிகள் அடித்து உடைக்கப்படுவதுடன் சிலவேளைகளில் அவை களவாடப்பட்டிருப்பதாகவும் அவர்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை அங்கு நிறுத்தி வைக்கப்படும் துவிச்சக்கரவண்டிகளின் பூட்டை விசமிகள் சேதப்படுத்துவதுடன் அவை திருட்டுப் போவதாகவும் பாதிக்கப்பட்டவர்களால் சுட்டிக் காட்டப்படுகின்றது.

எனவே நிறுத்தி வைக்கப்படும் வாகனங்கள், துவிச்சக்கரவண்டிகள் களவு போகாமல் இருப்பதற்கு வைத்தியசாலை நிர்வாகத்தினர் ஒழுங்குகளை மேற்கொள்ள வேண்டுமென பாதிக்கப்பட்ட ஊழியர்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (அ-2-259)

## இராணுவ சிவில் அலுவலக பாவனையில் வன்னேரிக்குள பொதுநோக்கு மண்டபம்

### தம்மிடம் ஒப்படைக்குமாறு மக்கள் கோரிக்கை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி வன்னேரிக்குளப் பிரதேசத்தில் மக்கள் மீள்குடியேற்றப்பட்ட நிலையிலும் அங்கு அமைக்கப்பட்டுள்ள பொது நோக்கு மண்டபம் இதுவரை மக்கள் பாவனைக்கு முழுமையாக கையளிக்கப்படவில்லையென அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

குறித்த பகுதியில் மக்கள் மீள்குடியேறிய பின்னரும் இராணுவத்தினரால் குறித்த பொது நோக்கு மண்டபம் சிவில் அலுவலகத்தின் பாவனைக்கு இன்றுவரை பயன்படுத்தப்பட்டு வருவதால் தாம் கூட்டங்களைக் நடத்துவதில் பல்வேறு இடர்பாடுகளை சந்திப்பதாகத் தெரிவிக்கின்றனர்.

அத்துடன் குறித்த கட்டடத்தை இராணுவத்தினர் இரவுவேளைகளில் தங்குவதற்கும் பயன்படுத்தி வருவதாக அப்பிரதேச மக்களால் சுட்டிக்காட்டப்படுகின்றது. இதேவேளை இக்கிராமத்திலுள்ள பொது அமைப்புக்கள் கூட்டங்களை நடத்துவதற்கு இம்மண்டபத்தையே பயன்படுத்தி வருகின்றனர். அவ்விடத்தில் இராணுவம் இருப்பதால் பொதுமக்கள் கூட்டங்களில் பங்கேற்பதற்கு தயக்கம் காட்டி வருகின்றனர்.

இதனால் கிராம முன்னேற்றம் தொடர்பான கூட்டங்களுக்கு பொதுமக்கள் பூரண ஒத்துழைப்பு வழங்குவதில்லையென பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளால் கவலை தெரிவிக்கப்படுகின்றது.

எனவே இராணுவத்தினரின் பயன்பாட்டில் உள்ள குறித்த மண்டபத்தை பொதுமக்களின் நன்மை கருதியும் கிராமத்தின் முன்னேற்றம் கருதியும் விடுவித்து தருமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (அ-2-277)



வடமாகாண பண்பாட்டு அலுவல்கள் திணைக்களத்தின் நிதி அனுசரணையுடன் கரைச்சி பிரதேச செயலகத்தின் கலாசாரப் பேரவை கிளிநொச்சி மாவட்டத்தை சேர்ந்த கவிஞர்கள், கலைஞர்களை ஒன்றிணைத்து கிராம காற்றின் கானம் மற்றும் குழந்தைப்பாடல்கள் என்ற இரண்டு இறுவெட்டுக்களை அண்மையில் வெளியிட்டபோது...

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மகிந்தவின் பயணப்பாதை முடிவிற்கு வருகிறதா?

**"த நேசன்" ஊடகத்திற்கு ரசிக்கா ஜெயக்கொடி எழுதிய "மகந்தவின் பயணப்பாதை முடிவிற்கு வருகிறதா?" என்னும் தலைப்பில் வெளியான கட்டுரையின் தமிழாக்கம் பிரசுரிக்கப்படுகிறது.**



...அந்தக் கூட்டத்திலேயே புதிய எதிர்க்கட்சித் தலைவராக நிமால் சிறிபால டீ சில்வாவும் பிரதான- எதிர்க்கட்சி கொறடா (chief opposition whip) வாக ஜோன் செனிவிரட்ணவும் கட்சியால் நியமிக்கப்பட்டனர். சுதந்திரக் கட்சியின் பங்கிற்கு நாட்டின் சட்டவாக்க பாராளுமன்றக் குழுவுக்கு தலைமை தாங்கி வழி நடத்துவதற்கு ஏதுவான ராஜபக்சவின் மீள் பிரவேசத்திற்கான சாத்தியக் கூறுகளெதனையும் டீ சில்வாவினது அந்த நியமனம் இயலாததாக்கியுள்ளது. முன்னர் பாராளுமன்ற குழுத்தலைவராக இருந்த நிமால் சிறிபால டீ சில்வா இப்போது கட்சியினால் மேற்படி பதவிக்கு நியமிக்கப்பட்டுள்ளார்.

எதிர்கட்சித் தலைவரென்ற இந்த நியமனத்துடன் நிமால் சிறிபால டீ சில்வாவே அடுத்துவரும் பொதுத் தேர்தலில் பிரதம மந்திரி வேட்பாளராகும் தகுதியைப் பெற்றுக் கொள்கிறார் என நம்பலாம். அதாவது, தேர்தலின்போது கட்சித் தலைவர் மைத்திரிபால சிறிசேன அவர்கள் நடுநிலை (Neutral position) நின்று நடவடிக்கைகளனைத்திலுமான உயர் ஒழுக்கப் பெறுமதியினை அவதானித்து மேற்பார்வை செய்யும் அதேநேரம் டீ சில்வா தேர்தல் பிரசார இயக்கச் செயற்பாடுகளை நடத்திச் செல்வார் என்பதே அதன் பொருளாகும். அடுத்த பொதுத் தேர்தலில் மக்களின் தெளிவான ஆணையைப் பெற்று அதிகாரத்திற்கு வரும் எந்தவொரு அரசியல் கட்சியுடனும் சேர்ந்தே செயற்படக் கூடிய ஓர் நிலையிலேயே அவர் இருப் பார்.











பொதுத்தேர்தலில் 'UNP' அதிகாரத்தைக் கைப்பற்றுமானால் தற்போதைய அரசே சொற்பமாற்றத்துடன் தொடர்ந்தும் இயங்கும்.

'SLFP' அதிகாரத்திற்கு வருமானால் நிமால் சிறிபால டீ சில்வாவை பிரதம மந்திரியாகக் கொண்ட புதிய மந்திரி சபையொன்றினை ஜனாதிபதி சிறிசேனா நியமிப்பார்.

மேற்படி இரண்டு சந்தர்ப்பங்களிலும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவுக்கு சம்பந்தமே இருக்காது.

வருகின்ற பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிடுவது மற்றும் தேசிய பட்டிலில் இடம்பிடிப்பது அல்லது புதிய தேர்தல் ஒழுங்குமுறைகளுக்குட்பட்ட வழிகள் மூலம் மட்டுமே ராஜபக்ச உள்நுழைய முடியும். இந்தவிதமான நகர்வுங்கூட, புதிய 'SLFP' தலைவரும் அண்மைய ஜனாதிபதித் தேர்தலில் அவரது பிரதான போட்டி எதிராளியுமாகிய புதிய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் சம்மதத்தின் பேரிலேயே மேற்கொள்ளப்படலாம். எனவே, மகிந்த ராஜபக்சவின் அரசியல் எதிர்காலம் இவ்விதமாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் கைகளிலேயே தங்கியதாக உள்ளது.

அதேநேரம் முன்னர் குறிப்பிட்ட அந்த புதன் அன்றே மகிந்த ராஜபக்ச ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை சபாநாயகரது இல்லத்திலும் சந்தித்திருந்தார். டிசெம்பர் முற்பகுதியில் ஜனாதிபதி போட்டியாளர்கள் தமது வேட்பு நியமனக் கடிதங்களை தேர்தல் திணைக்களத்தில் நேரடியாக எதிர்கொண்டு கையளித்ததன் பின்னர் அவர்களிருவரும் சந்தித்துக் கொண்ட முதல் சந்தர்ப்பமும் இதுவேயாகும்.

முன்னாள் ஜனாதிபதி தனது கட்சியின் மூத்த உறுப்பினர்களைச் சந்தித்து, பதவிக்கு வரும் புதிய ஜனாதிபதியிடம் தனது கட்சித் தலைவர் பதவியை கையளிக்க விரும்புவதாக அறிவித்ததைத் தொடர்ந்து உடனடியாகவே இந்த சந்திப்பும் இடம்பெற்றது.

புதிய ஜனாதிபதி மீது தாம் கொண்ட அன்பினால் இத் தீர்மானத்தை அவர் மேற்கொண்டார் என்பதல்ல. கட்சியின் பெரும்பான்மை உறுப்பினர்கள் மைத்திரிபால சிறிசேனவிக்கு ஆதரவு தெரிவித்த அதே நேரம் ராஜபக்சவுடைய ஒத்துழைப்பின்மையால் கட்சிக்குள் பாரிய பிளவு ஏற்படும் நிலை தெளிவாகவே தெரிந்தது.

ஜனாதிபதி சிறிசேனவுடனான தனது அச்சந்திப்பின்போது தனது குடும்ப உறுப்பினர்களது பாதுகாப்பினை உறுதிப்படுத்துமாறு, விசேடமாக பாராளுமன்ற உறுப்பினரான தனது மகன் நாமல் ராஜபக்சவின் பாதுகாப்பை அவர் கோரியிருந்தார். தனது மகனுக்கு விடுக்கப்பட்ட உயிர் அச்சுறுத்தல் பற்றி தங்காலை பொலிஸ் அவர் செய்திருந்த முறைப்பாடு பற்றியும் முன்னாள் ஜனாதிபதியால் அவரிடம் எடுத்துக்கூறப்பட்டது. இதற்குப் பதிலாக ராஜபக்ச குடும்ப உறுப்பினர்களது பாதுகாப்பை உறுதி செய்வதற்கான அவசிய நடவடிக்கைகளை தாம் எடுப்பதாகவும் நிலைமைகள் அவதானிக்கப்படுமென்றும் அவரிடம் கூறப்பட்டது.

'SLFP' அதிகாரம் கைமாறுவது முன்னாள் அரசாங்கத்திற்கெதிரான கையூட்டு மற்றும் பல்வேறு ஊழல்களுக்குமெதிரான குற்றச்சாட்டுக்கள் மட்டில் தற்போது மேற்கொள்ளப்பட்டுவரும் புலன் விசாரணைகளை எவ்விதம் பாதிக்கும் என்பது பற்றி இங்கு ஆராய்வதுங்கூட முக்கியமானதேயாகும். மைத்திரிபால சிறிசேனவை ஆதரித்த குழுவினால் உண்மையில் மக்களுக்கான தேர்தல் வாக்குறுதியாக முன்வைக்கப்பட்ட ஊழ லுக்கெதிரான முன்னார்வ முயற்சிகளுக்கு மேற்படியான புதிய கட்சித் தலைமை மாற்றம் ஊறுவிளைவித்துவிடுமோ என்றதொரு ஐயப்பாடு பல வட்டாரங்களிலிருந்து ஏற்கனவே கிளம்பியிருக்கிறது.

கடந்த பத்துவருடங்களுக்கு மேற்பட்ட காலமாக இடம்பெற்றிருந்த கையூட்டல் மற்றும் ஊழல் நடவடிக்கைகள் சம்பந்தமான விபரங்களை பொது மக்களிடமிருந்து திரட்டுவதற்கான பொறி முறையொன்றினை புதிய அரசு ஏற்கனவே ஏற்படுத்தி நடைமுறைப்படுத்தியுமிருக்கிறது.

'UNP'யைச் சேர்ந்த முன்னாள் மாகாண ஆலோசகர் ஷிறால் லக்திலக்கவும் மின்சக்தி மற்றும் சக்தி வலு அமைச்சரான பாட்டலி சம்பிக்க ரணவக்கவுமே இந்த பொறி முறையை செயற்படுத்தி வருகின்றனர். அத்துடன் ஜனாதிபதி சிறிசேனாவின் 100 நாள் பொறிமுறையுங்கூட கையூட்டுக் குற்றச்சாட்டுக்கள் மட்டில் விசேட ஆணைக்குழுவொன்றினை ஏற்படுத்தி விசாரணைகளை மேற்கொள்வதாக வாக்குறுதிகளை வழங்கியுள்ளது.

அதேநேரம், 'SLFP' யின் உள்ளக அதிகார மாற்றம் தற்போது இடம்பெற்றுவரும் கையூட்டு மற்றும் ஊழல் மட்டிலான விசாரணைகளைப் பாதிக்கப்போவதில்லை என தேசிய ஒருமைப்பாட்டு அரசின் ஊழல் எதிர்ப்பு தீவிர செயற்பாட்டாளர்கள் ஏற்கனவே உறுதியாக தெரிவித்துள்ளனர். 2005-2015 இற்குமிடைப்பட்ட காலகட்டத்தில் இடம்பெற்ற 'கையூட்டு- ஊழல்' நடவடிக்கைகளுக்குப் பொறுப்பான வர்களுக்கு எதிராக கடுமையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமென அவர்கள் 'த நேஷன்' ('நாடு') ஊடகத்திற்கு அறிவித்துள்ளனர்.

மேற்படி காலகட்டம் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் இரு பதவிக் காலங்களை உள்ளடக்கியதாகும்.

'ஊழல் ஒழிப்பு' மட்டில் மேற்கொள்ளப்படும் முன்னார்வ முனைப்பு நடவடிக்கைகளுக்கான பேச்சாளர் ஒருவர் இது பற்றிய தமது கருத்துக்களை வலியுறுத்தும் போது, "ஜனாதிபதியே கூட இந்த 'ஊழல்ஒழிப்பு' நடைமுறைகளில் தலையீடு செய்து செல்வாக்குச் செலுத்த முடியாது" என்று கூறினார்.

பதவி அதிகாரங்கள் இதுமட்டில் கடந்த காலங்களில் செலுத்தியிருந்த செல்வாக்குப் போன்றவை இனிமேலும் இடம்பெறாத விதத்தில் புதிய அரசு இப்புதிய நடைமுறைகளைத் தொடர்ந்தும் பலப்படுத்தும் என்பதே அவர்களது கூற்றாகும். (முற்றும்)

**தமிழில்-யோகர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குப்பைமேடுகளும் கோபுரங்கள் ஆவதுண்டு.
இது காலத்தின் நியதி.
-ஓர் அறிஞர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## பத்தாண்டு குடிசைப் பதியிருந்து மீள்குடியமரும் மருதடியானே!

ஆட்சி மாறி அமைதிச் சூழல் கண்டாலன்றி
மீள்குடி அமரேன் என்று பத்தாண்டு காலம்
குடிசைக் கோயிலில்
குந்தியிருந்த நம் முதல்வன் மருதடியான்
வீறு கொண்டு தான் இருந்த இடம் செல்லும்
செய்தி கேட்டோம்
அப்பாடா! இனி நமக்கென்ன குறை?

வடக்கின் முதலமைச்சராய் சத்தியம் செய்தக்கால்
முதல்வர் விக்கிக்கு உன்தன் திருவுருவை
முதற்பரிசாய் மகிந்தனார் வழங்கிய போதே
இனிக்குறைவில்லை என்றுணர்ந்தோம்
அட்டமத்தான் சூழ அவர் சென்று விட்டார்...
அடடா! பத்தாண்டு காலம்
நீ கொண்ட விரதம் புரிந்திலோம் நாம் இங்கு
தமிழர் தம் வாக்கு
இலங்காபுரியில் தலைமை தரும்
காலம் கண்ட பின்பே
என் சொந்த இடத்தில் குடிபுகுவேன்
என்றிருந்த உன் திருவருளை
சிற்றறிவும் இல்லா இச் சிறியேன் புரிந்திலேன்

அட! வலிவடக்கில் காணி விடுவிப்பு என்ற பின்தான்
திருக்குடமுழுக்குக் காண்பேன் என்று
நீ போட்ட சபதம்
உன் பற்றிலா எனக்கு எங்ஙனம் புரியும்?

எரிவாயு, எரிபொருள் என்றனைத்தும்
எகிறி நின்றவேளை,
எனக்கேன் எரிவேள்வி என்று நீ கொண்ட கோபம்
எகிறிய விலை தணிந்த தென்ற பின்பே
யாகத்தில் எழுந்து
மீள்குடியமர்வேன் என்று நீ எடுத்த சபதம்
நின் கடைக்கண் பார்வையும் கருத்திலெடுக்கா
எந்தனுக்கு எப்படிப் புரியும்?

புழுங்கும் சிறைகளில் துயரம் விழுங்கி
பரந்த பார் காணாது கண்ணயரும்
வதைபடு தமிழ் இளைஞர் குறை கண்டு
பத்தாண்டு பாலாலயத்தில் வாசம் செய்த
நின் பெருந்தியாகத்தை
எப்படியும் எதுவும் எழுதலாம்
என்றிருக்கும் ஊடகப் பண்பாட்டில்
வீழ்ந்துழலும் எந்தனுக்கு எப்படிப் புரியும்?

மானிப்பாய் வீதியால் போகும்
கோர்ணமேந்துப் பணியாளர்
வேலை செய்நாளில் தினமும் வந்து
உன் சந்நிதியில் வீழ்ந்து வணங்கி
சம்பளம் கூடாதோ; பட்ட கடன் தீராதோ;
மோட்டார் சைக்கிளும் கிடையாதோ
என்றிரந்து அவர் போகும் பரிதாபத்தில்
பத்தாண்டு குடிசையில் நீ இருந்து
பத்தாயிரம் படி உயர்வு என்ற பின்பே
இருந்த இடம் ஏகுவேன் என
நீ கொண்ட சபதத்தை
நாயிற் கடைப்பட்ட நான் புரியாமல் போனேனே

ஓ! மானிப்பாய் மருதடி வாழ் முதல்வோனே!
நாளை உனக்கு நடக்கும் குடமுழுக்கு
ஈழம்வாழ் தமிழருக்கு தரும் உயர்வு
பாரெல்லாம் ஈழத்தமிழருக்காய் குரல் கொடுக்கும்
வலிதந்தார் வதைபடுவர்; ஜெனிவா என்ன?
உன் தந்தை தலைமையில்
தேவலோகத்து விசாரணையில்,
கருடபுராணத்துக் காதை நடந்தேறும்
அப்பனே! மருதடியானே! குடமுழுக்கு நீ காண
என் இதயம் எல்லாம் குளிருதடா!
முடிந்தால், சந்திரனை உழக்கிய உன் காலை
என் தலையில் வை
முழுநிலவாய் இருப்பதை விட, தேய்ந்து வளர்ந்து
மூன்றாம் பிறையாய் இருப்பது மேல்.

# விலைகளை குறைக்காத குடாநாட்டு வியாபாரிகள் மீது சட்ட நடவடிக்கை

## பாவனையாளர்கள் அலுவல்கள் அதிகாரசபை எச்சரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டிலுள்ள அனைத்து வர்த்தக நிலையங்களிலும் நாளை திங்கட்கிழமை முதல் விலைக்குறைப்புச் செய்யப்பட்ட விலைகளிலேயே பொருட்கள் விற்பனை செய்யப்பட வேண்டும் எனவும் தவறும் பட்சத்தில் வியாபாரிகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் யாழ்.மாவட்ட பாவனையாளர் அதிகார சபையின் இணைப்பதிகாரி த.வசந்த சேகரன் எச்சரித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

புதிய அரசாங்கத்தினால் விலைக் குறைப்புச் செய்யப்பட்ட 10 பொருட்கள் தொடர்பாக யாழ்.குடாநாட்டிலுள்ள வியாபார நிலையங்களில் நேற்றைய தினம் ஆய்வொன்றை மேற்கொண்டிருந்தோம். சுமார் 25 வியாபார நிலையங்களுக்குச் சென்று விலை குறைப்பு செய்யப்பட்ட பொருட்களின் புதிய விலைகளின்படி விற்பனை செய்யப்படுகிறதா என்பதை பாவனையாளர் அதிகார சபையின் குழு ஆய்வினை மேற்கொண்டிருந்தது.

இதில் அநேகமான விற்பனை நிலையங்களில் பழைய விலையின் படியே பொருட்கள் விற்பனை செய்யப்படுவதை அறிந்து கொள்ளமுடிந்தது.

எனவே, விலைக்குறைப்புச் செய்யப்பட்ட விலைகளின்படி நாளை முதல் சகல விற்பனையாளர்களும் பொருட்களை விற்பனை செய்யவேண்டும். இல்லையெனில் விற்பனையாளர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

அதேவேளை பொருட்கள் இருந்தும் அவற்றைப் பதுக்கி வைத்திருத்தல் என்பது மிகவும் கடுமையான தண்டனைக்குரிய குற்றமாகும். அவ்வாறு பதுக்கி வைத்திருக்கும் நிலையில் அவை கண்டு பிடிக்கப்பட்டால் எந்தவித காலதாமதமுமின்றி சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

மேலும் எரிவாயுவின் விலை மாத்திரமே போக்குவரத்துச் செலவு உள்ளடங்கலாக விற்பனை செய்ய அனுமதிக்கப்பட்டுள்ளது. இவ்விடயம் தொடர்பாக பாவனையாளர்கள் அதிகார சபையுடன் பேச்சு வார்த்தை நடத்தப்பட்டு இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளது. ஆனால் ஏனைய பொருட்களுக்கு எந்தவிதமான போக்கு வரத்துச் செலவையும் உள்ளடக்க அனுமதியளிக்கப்படவில்லை.

இதேவேளை பாண்விலை தொடர்பாக பல முறைப்பாடுகள் எமது அதிகார சபைக்குக் கிடைத்துள்ளன. நாளை முதல் சகல பொருட்களும் புதிய விலைகளின்படி விற்பனை செய்யப்பட வேண்டும்.

மேலும் அங்கர், லக்ஸ்பிறே முகவர் நிலையங்களுக்கு நேரடியாக விஜயம் செய்து எந்தவித போக்குவரத்துச் செலவுகளும் உள்ளடக்காத நிலையில் பால்மா விநியோகம் செய்யப்பட வேண்டும் என அறிவுறுத்தியுள்ளோம்.

இதேவேளை பாவனையாளர் அதிகார சபையினர் தொடர்ந்து பொருட்களின் விலைகள் தொடர்பாக வியாபார நிலையங்களுக்குச் சென்று சோதனை நடவடிக்கைகளையும் பதுக்கப்படும் பொருட்கள் தொடர்பாகவும் விசாரணைகளை மேற்கொள்ளவுள்ளனர். அத்துடன் எரிவாயுவின்விலையை மீளாய்வு செய்ய வேண்டிய நிலையில் தாம் உள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ)

# "நமது சொற்கள் நமது செயல்களில் எதிரொலிக்கச் செய்வோம்"

இன்று எமக்குத் தரப்படும் பைபிளின் நற்செய்திப்பகுதி இயேசு தீய ஆவி பிடித்திருந்த ஒருவரை குணமாக்கியதை விளக்குகின்றது. அதுவும் அதிகாரத்தோடு தீய ஆவியை அதட்டி துரத்தியதைக் காட்டுகின்றது. 'வாயை மூடு, இவரை விட்டு வெளியே போ" என்று இயேசு அதனை அதட்டினார். இது மாற்கு நற்செய்தி 1:21-28 பகுதியிலிருந்து எடுக்கப்படுகின்றது. தொழுகைக்கூடத்தில் தீய ஆவி பிடித்திருந்த ஒருவர் இருந்தார். அவரைப் பிடித்திருந்த ஆவி, 'நாசரேத்து இயேசுவே, உமக்கு இங்கு என்ன வேலை? எங்களை ஒழித்துவிடவா வந்தீர்? நீர் யார் என எனக்குத் தெரியும். நீர் கடவுளுக்கு அர்ப்பணமானவர்" என்று கத்தியது.

### பரமபிதா காட்டிய பாதை

21ஆம் நூற்றாண்டில் மனிதர்கள் போதனைகளைவிட சாதனைகளுக்கும், அறிவுரைகளைவிட வாழ்க்கை அனுபவங்களுக்கும் அதிக அழுத்தம் தருகின்றனர். இந்த மனநிலை இன்று எல்லாருக்கும் இருக்கிறது. அன்றும் இருந்தது இயேசுவின் காலத்திலும். அவரது போதனைகளைக் கேட்ட மக்கள் வியந்தனர். காரணம் அவரது போதனை அதிகாரம் நிறைந்ததாக இருந்தது.

அந்த அதிகாரத்தை இயேசுவின் செயல்களிலும் அவர்கள் கண்டனர். இயேசு தீய ஆவியிடம் 'வாயை மூடு. இவரைவிட்டு வெளியே போ" என்று அதிகாரத்தோடு அதட்டி, வெளியேற்றினார். எனவேதான், மக்கள் திகைப்புற்று, 'இது என்ன? இது அதிகாரம் கொண்ட புதிய போதனையாய் இருக்கிறதே! என்று வியந்தனர். இயேசுவின் போதனை அனைவரையும் வியப்பில் ஆழ்த்தியது. இயேசுவின் செயல்கள் அனைவரையும் திகைப்புறச் செய்தது. நமது சொற்கள் அதிகாரம் கொண்டதாக அமைய வேண்டுமென்றால், மற்றவர்களை திகைப்புற செய்ய வேண்டுமானால், நமது சொற்களுக்கும், செயல்களுக்கும் முரண்பாடு இல்லாமல் இருக்கவேண்டும். நமது சொற்கள் நமது செயல்களில் எதிரொலிக்க வேண்டும்.

'உமக்கு இங்கு என்ன வேலை?" நமக்குச் சம்பந்தமில்லாத இடத்தில் அல்லது சம்பந்தமில்லாத நேரத்தில் நாம் ஒரு இடத்தில் அல்லது ஒரு நேரத்தில் இருந்தால் நம்மைப் பார்த்து மற்றவர்கள் கேட்கும் கேள்வியே இது. இடத்திற்கும், நேரத்திற்கும் ஒருவர் பொருந்தவில்லை என்பதையே இந்தக் கேள்வி காட்டுகிறது.

தீய ஆவி இயேசுவிடம் கேட்ட கேள்வியும் இது: 'நாசரேத்து இயேசுவே, உமக்கு இங்கு என்ன வேலை? எங்களை ஒழித்துவிடவா வந்தீர்? நீர் யார் என எனக்குத் தெரியும். நீர் கடவுளுக்கு அர்ப்பணமானவர்."

மேலோட்டமாகப் பார்த்தால், இது நடுக்கமுற்ற ஒரு தீய ஆவியின் அதட்டலான கேள்விபோலத் தோன்றினாலும், தொடர்ந்து வருகின்ற செய்தி ஒரு விசுவாச அறிக்கை. ஆம், அலகையே இயேசுவை கடவுளுக்கு அர்ப்பணமானவர் என்று அறிக்கையிடுகின்றது. அது மட்டுமல்ல, கடவுளுக்கு அர்ப்பணமான இயேசுவின் வேலைகளில் ஒன்று தீமைகளை ஒழிப்பது என்பதையும் அது அறிக்கையிடுகின்றது.

இயேசுவின் அர்ப்பண வாழ்வின் இலக்கை சீடர்கள் அனைவரின் முன்னிலையில் விசுவாச அறிக்கையாக தீய ஆவி வெளிப்படுத்துகின்றது என்றே நாம் பொருள்கொள்ளலாம்.

இயேசுவுக்கு மட்டுமல்ல, இயேசுவைப் பின்பற்றி கடவுளுக்குத் தம்மை அர்ப்பணித்துக் கொண்ட அனைவருக்கும் இந்த மண்ணுலகில் என்ன வேலை? தீமையை ஒழித்து, நன்மை செய்து கொண்டே செல்வதுதான். ஏனெனில், இயேசு 'அலகையின் கொடுமைக்கு உட்பட்டிருந்த அனைவரையும் விடுவித்து, எங்கும் நன்மை செய்து கொண்டே சென்றார்' என வாசிக்கிறோம். நாமும் நமது வேலையை நன்கு செய்ய உறுதி கொள்வோம்.



தீய ஆவிகளைப் பற்றி பலவித மான நம்பிக்கைகளும், கதைகளும் யூத மக்களிடையே அன்று உலாவி வந்தது.

இன்று நாமும் இந்த தீய ஆவிகளைப்பற்றிய கதைகளை நம்பலாம், நம்பாமலும் இருக்கலாம். நாம் நமபுகிறோமோ, இல்லையோ, இயேசு வாழ்ந்த காலத்தில் வாழ்ந்த மக்கள் முழுமையாக நம்பினார்கள். இந்த நற்செய்திப்பகுதியின் மூலமாக நாம் கற்றுக்கொள்ளும் செய்தி, கடவுளின் வல்லமையின் மீது நாம் நம்பிக்கை வைக்க வேண்டும். இன்றைய சமூகத்தில், சாத்தான் அனைவரையும் ஆட்டிப்படைக்கின்றான்.

ம.பிரான்சிஸ்க்
கத்தோலிக்க சுதந்திர பத்திரிகையாளர்


ஆலயத்திற்கு செல்கிறவர்களும், ஆண்டவரை நம்பிக்கையோடு வழிபடுகிறவர்களும், தீய ஆவிகள் மீது, அவற்றின் அதிகாரத்தின் மீது நம்பிக்கை வைக்கிறார்கள். ஆனால், நமது ஆண்டவர் தீய ஆவிகளின் மீதும் தனது அதிகாரத்தை நிலை நாட்டுகிறார். கடவுளின் வல்லமை பெரியது. தீய ஆவியை வெல்லும்.

கடவுளின் வல்லமை மீது நாம் நம்பிக்கை வைப்போம். கடவுள் ஆற்றல் நிறைந்தவர். அதிசயங்கள் புரியக்கூடியவர் என்பதில் நாம் உறுதியாக இருக்க வேண்டும். அந்த உறுதி தீய ஆவிகளுக்கு எதிரான நமது போராட்டத்தில் நமக்கு வெற்றி தேடித் தரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அலன்ராஜ் அதிரடி சதம்

# ஸ்கந்தவரோதயாவை வென்றது யாழ்ப்பாண மத்திய கல்லூரி



எஸ்.அலன்ராஜ் அதிரடியாக ஆடி சதம் (103) பெற்றுக்கொடுக்க, யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணி இனிங்ஸ் மற்றும் 109 ஓட்டங்களால் சுன்னாகம் ஸ்கந்தவரோதயா கல்லூரி அணியை வென்றது.

இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் ஏற்பாட்டில் 19 வயதுப் பிரிவு பிரிவு 3 அணிகளுக்கிடையிலான மட்டுப்படுத்தப்படாத ஓவர்கள் கொண்ட கிரிக்கெட் போட்டியின் ஆட்டமொன்று யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் 28ஆம் திகதி நடைபெற்ற போது, யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணியை எதிர்த்து ஸ்கந்தவரோதயா அணி மோதியது.

நாணய சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணி, 99.4 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 306 ஓட்டங்களைப் பெற்றது. துடுப்பாட்டத்தில் எஸ்.அலன்ராஜ் 103, எஸ்.மதுஷன் 35 ஓட்டங்களைப் பெற்றுக்கொடுத்தனர். பந்துவீச்சில் ஸ்கந்தா சார்பாக, கே.கஜீவன் 4, எம்.சுஜீதரன், ர.சரத்குமார் ஆகியோர் விக்கெட்டுகளை கைப்பற்றினார்கள்.

பதிலுக்கு தமது முதலாவது இனிங்ஸ்க்காக துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய ஸ்கந்தா அணி, 42.3 ஓவர்களில் 96 ஓட்டங்களுக்குச் சகல இலக்குகளையும் இழந்தது. துடுப்பாட்டத்தில் எம்.சுஜீதரன் 50 ஓட்டங்களைப் பெற்றுக்கொடுத்தார். பந்து வீச்சில் யாழ்.மத்தி சார்பாக எஸ்.மதுஷன் 60 ஓட்டங்களை விட்டுக்கொடுத்து 5 வக்கெட்டுகளையும், எஸ்.அலனராஜ் 3 விக்கெட்களையும் கைப்பற்றினார்கள். பலோஒன் அடிப்படையில் மீண்டும் தமது இரண்டாவது இனிங்ஸிற்காக துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய ஸ்கந்தா அணி 48.2 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்தது. துடுப்பாட்டத்தில் வி.விதுஷந்த் 24 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தார்.

பந்துவீச்சில் யாழ்ப்பாணம் மத்தி சார்பாக எம்.மது ஷன் 28 ஓட்டங்களுக்கு 4 வக்கெட்டுகளையும், ஜே.யரோ சன, எஸ்.மதுஷன், எஸ்.அலன்ராஜ ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளைக் கைப்பற்றினார்கள். (க)

# யாழ்.மத்திய கல்லூரி வெற்றி

இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் ஏற்பாட்டில், 19 வயதுப்பிரிவு அணிகளுக்கிடையிலான மட்டுப்படுத்தப்படாத ஓவர்கள் கொண்ட இரண்டு நாள் கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் ஆட்டமொன்றில் யாழ். மத்திய கல்லூரி வெற்றிபெற்றது.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்தில் கடந்த 26ஆம் திகதி நடைபெற்ற இந்தப் போட்டியில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியை எதிர்த்து கொட்டஹெனா ஆனந்தா மகா வித்தியாலயம் மோதியது. நாணயச் சுழற்சியில் வென்று முதலில் ஆடிய ஆனந்தா மகா வித்தியாலயம் 48.4 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 109 ஓட்டங்களைப் பெற்றது. துடுப்பாட்டத்தில் பஷன் ஜெயகலன 23 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தார். பந்து வீச்சில் யாழ். மத்திய கல்லூரி சார்பாக எஸ்.மதுசன் 33 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுகளைக் கைப்பற்றினார். பதிலுக்கு தமது முதலாவது இனிங்ஸை ஆரம்பித்த, யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி, 46.4 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 152 ஓட்டங்களைப் பெற்றது.

துடுப்பாட்டத்தில் எஸ்.மதுசன் 28, எஸ்.அலன்ராஜ் 25 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தனர்.

பந்துவீச்சில் ஆனந்தா வீரர் ஏ.எஸ்.குமார 57 ஓட்டங்களை கொடுத்து 5 விக்கெட்டுகளைக் கைப்பற்றினார். 43 ஓட்டங்கள் பின்தங்கி இருந்த ஆனந்தா, இரண்டாவது இனிங்ஸ்க்காக துடுப்பெடுத்தாடிய 25.4 ஓவர்களில் 124 ஓட்டங்களுக்குச் சகல விக்கெட்டுகளையும் இழந்தது. துடுப்பாட்டத்தில் ஏ.எஸ்.குமார 44 ஓட்டங்களைப் பெற்றுக்கொடுத்தார்.

பந்துவீச்சில் யாழ். மத்தி சார்பாக எஸ்.மதுஷன் 4, சி.நிதுஷன் 3 விக்கெட்டுகளைக் கைப்பற்றினார்கள். 82 ஓட்டங்களை பெற்றால் என்ற இலக்குடன் 2 ஆவது இனிங்ஸ்க்காக துடுப்பெடுத்தாடிய யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி 16.1 ஓவர்களில் 2 விக்கெட்டுகளை மாத்திரம் இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. துடுப்பாட்டத்தில் எஸ்.நிரோசன் 38 ஓட்டங்களைப் பெற்றுக்கொடுத்தார். (க)

SPORTS விளையாட்டுச் செய்திகள்

# யோர்ஜ் வெப்ஸ்ரர் வெற்றிக்கிண்ணம் ஜொலிஸ்ரார் அணி முன்னிலை



2015 ஆம் ஆண்டு யோர்ஜ் வெப்ஸ்ரர் வெற்றிக்கிண்ணத்திற்காக யாழ்.சென்றல் விளையாட்டுக்கழகம் 6 ஆவது ஆண்டாக நடத்தி வரும் யாழ். நகரில் சிறந்த கழக அணித் தெரிவு நிகழ்வில் 01.01.2015 இலிருந்து 31.01.2015 வரை நடைபெற்ற 4 போட்டிகளில் (விக்ரம், ராஜன், சுங்குஞாபகார்த்தசுற்றுப்போட்டி) ஜொலிஸ்ரார் அணி முன்னிலையில் உள்ளது.

ஜொலிஸ்ரார் அணி கே.சீ.சீ.சீ. அணியையும் சென்றலைட்ஸ் அணியையும் வெற்றி கொண்டு 11.37 புள்ளிகளை பெற்று முதலாம் இடத்திலும் சென்றலைட்ஸ் அணி பல்கலைக்கழகத்துடனான போட்டியில் வெற்றியும் ஜொலிஸ்ரார் அணியுடனான போட்டியில் தோல்வியடைந்து 7.50 புள்ளிகளைப் பெற்று 2 ஆம் இடத்திலும் கே.சீ.சீ.சீ. அணி, ஜொலிஸ்ரார் அணியுடனான போட்டியில் தோல்வியும் பல்கலைக் கழகத்துடனான போட்டியில் வெற்றியும் பெற்று 7.38 புள்ளிகளைபெற்று 3 ஆம் இடத்திலும் யாழ்.பல்கலைக்கழக அணி, சென்றலைட்ஸ்கே.சீ.சீ.சீ. அணிகளுக்கிடையிலான போட்டிகளில் தோல்வியும் அடைந்து 3.78 புள்ளிகளைப் பெற்றும் 4 ஆம் இடத்திலும் உள்ளனர்.

2010,2014 ஆம் ஆண்டுகளில் யாழ்.பல்கலைக்கழக அணியும் 2012 ஆம் ஆண்டு யாழ்.ஜொனி யன்ஸ் அணியும் 2013 ஆம் ஆண்டு கே.சீ.சீ.சீ. அணியும் 2014 ஆம் ஆண்டு சென்றலைட்ஸ் அணியும் மேற்படி வெற்றிக் கிண்ணத்தை கைப்பற்றியுள்

## உதைபந்தாட்ட அரையிறுதி இன்று

சென்.மைக்கல் விளையாட்டுக்கழகம் நடத்தி வரும் அணிக்கு 7 பேர் கொண்ட காற்பந்தாட்ட சுற்றுத் தொடரின் அரை யிறுதி போட்டிகள் இன்று ஞாயிற்றுக்கிழமை முதல் உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் ஆரம்பமாகவுள்ளது.

இன்று நடைபெறும் முதலாவது அரையிறுதியாட்டத்தில் நாவாந்துறை சென்.மேரிஸ் அணியை எதிர்த்து நவிண்டில் கலைமதி அணி மோதுகின்றது.

தொடர்ந்து நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ள இரண்டாவது அரையிறுதி ஆட்டத்தில் குருநகர் பாடும்மீன் அணியை எதிர்த்து ஊரெழு றோயல் அணி மோதுகின்றது. யாழ். மாவட்டத்தை சேர்ந்த 30 அணிகள் பங்குபற்றிய இந்தச் சுற்றுப் போட்டியில் அணிகள் 4 பிரிவுகளாக பிரிக்கப்பட்டு போட்டிகள் நடைபெற்றன.

ஒவ்வொரு பிரிவிலும் முதல் இடத்தைப் பெற்ற அணிகள் அரையிறுதிப் போட்டியில் விளையாடத் தகுதி பெற்றன. (க)

முத்தரப்பு ஒருநாள் கிரிக்கெட்

# ஆஸி-இங்கிலாந்து இன்று பலப்பரீட்சை

இந்தியா, அவுஸ்திரேலியா, இங்கிலாந்து ஆகிய 3 நாடுகள் இடையேயான கிரிக்கெட் போட்டி அவுஸ்திரேலியாவில் நடைபெற்று வருகிறது. நேற்றுமுன்தினத்துடன் 'லீக்' ஆட்டம் முடிந்தது.

அவுஸ்திரேலியா 3 வெற்றியுடன் 15 புள்ளிகள் பெற்று முதல் இடத்தையும், இங்கிலாந்து 2 வெற்றி, 2 தோல்வியுடன் 9 புள்ளிகள் பெற்று 2 ஆவது இடத்தையும் பிடித்து இறுதிப்போட்டிக்கு தகுதி பெற்றன.

இந்திய அணி ஒரு ஆட்டத்திலும் வெல்ல முடியாமல் போட்டியில் இருந்து வெளியேறியது. இங்கிலாந்திடம் 2 முறையும், அவுஸ்திரேலியாவிடம் ஒரு தடவையும் தோற்றது. ஒரு ஆட்டம் முடிவு இல்லை.

அவுஸ்திரேலியா-இங்கிலாந்து அணிகள் மோதும் இறுதிப் போட்டி பெர்த் மைதானத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது. இப் போட்டி இந்திய நேரப்படி காலை 8.50 மணிக்கு தொடங்கும் இந்த ஆட்டம் ஸ்டார் கிரிக்கெட் சனலில் நேரடியாக ஒளிபரப்பு செய்யப்படுகிறது. (க)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கடமை ஏற்கிறார்...

யாழ்.மாவட்டச் செயலகத்திற்கு முன்பாக அமைந்துள்ள வட மாகாண ஆளுநர் அலுவலகத்திலேயே நாளை காலை 9 மணிக்கு உத்தியோகபூர்வமாக தனது கடமைகளினை பொறுப்பேற்கவுள்ளார்.

வடக்கு மாகாணத்தின் முன்னாள் ஆளுனரான ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறியினை நீக்கக் கோரி வடக்கு மாகாண சபை உட்பட பல்வேறு அமைப்புக்கள் போராடிய நிலையில்,

ஆட்சி மாற்றத்தின் பின்னர் வடக்கு மாகாண சபையின் கோரிக்கைக்கிணங்க இராணுவத்தை சாராத சிவிலியன் ஒருவரினை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நியமித்துள்ளார்.

இதற்கமைய வடக்கு மாகாணத்தின் புதிய ஆளுநராக நியமனம் பெற்ற பலிஹக்கார நாளை தனது கடமைகளினை உத்தியோகபூர்வமான பொறுப்பேற்கவுள்ளார்.

இவரது நியமனத்தை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வரவேற்றிருந்த நிலையில் ஆளுநரின் பொறுப்பேற்கும் வைபவத்திற்கு வடக்கு மாகாண முதலமைச்சரும் முன்னாள் நீதியரசருமான சி.வி.விக்னேஸ்வரன், அவைத் தலைவர் ஆகியோருக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாக அறிய முடிகின்றது. (செ-4)

## தனியார்...

இக் கொடூர விபத்துச் சம்பவம் நேற்று அதிகாலை 6.30 மணியளவில் யாழ்.நீதிமன்ற கட்டடத் தொகுதிக்கு அருகாமையில் இடம்பெற்றுள்ளது.

முச்சக்கரவண்டியில் மரக்கறிகளை வாங்கிக் கொண்டு வேம்படி வீதி வழியாக யாழ்.பிரதான வீதிக்கு ஏறியபோது பிரதான வீதி வழியாக பின்னால் வந்த தனியார் பேருந்தே முச்சக்கரவண்டியினை மோதித்தள்ளியது.

இவ் விபத்தில் பொலநறுவை மெதுருகிரியவைச் சேர்ந்த மற்றும் யாழ்ப்பாணத்தில் மாகா நிறுவனத்தில் பணி புரிகின்றவர்களுமான ரொமான் விக்கிரமசிங்க (வயது 34), நிசாந்த சுபசிங்க (வயது 32) ஆகியோரே உயிரிழந்துள்ளனர்.

மரக்கறிகள் வாங்கிய கொண்டு வேம்படி வீதியிலிருந்து யாழ்.பிரதான வீதிக்கு முச்சக்கரவண்டியில் தென்பகுதியினை சேர்ந்த இருவரும் சென்றுள்ளனர்.

இதன்போது கொடிகாமத்திலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்து கொண்டிருந்த தனியார் போக்குவரத்து பேருந்து முச்சக்கரவண்டியின் பின்னால் மோதியுள்ளது.

தனியார் பேருந்து மிக வேகமாக வந்ததனால் கட்டுப்பாட்டினையிழந்து முச்சக்கரண்டி மீது மோதியதில் முச்சக்கரவண்டி உருத்தெரியாமம் சேதத்துக்குள்ளானதோடு பேருந்தும் மோசமான முறையில் சேதத்திற்குள்ளானது.

இதில் சம்பவ இடத்திலேயே ஆட்டோவில் சென்ற ரொமான் விக்கிரமசிங்க உடல் நசிந்து உயிரிழந்ததோடு நிசாந்த சுபசிங்க என்பவர் படுகாயமடைந்து யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சில நிமிடங்களிலேயே உயிரிழந்துள்ளார்.

விபத்து நடைபெற்ற இடம் இரத்த வெள்ளமாக காட்சியளித்ததோடு உயிரிழந்த இருவரும் வாங்கிச் சென்ற மரக்கறிகளும் இரத்த வெள்ளத்தில் தோய்ந்து காணப்பட்டது.

சடலம் யாழ்.போதனா வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதோடு மரணம் தொடர்பில் விசாரணைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

விபத்துச் சம்பவம் தொடர்பில் விசாரணைகளினை மேற்கொண்டு வரும் யாழ்.பொலிஸார் விபத்தினை ஏற்படுத்திய கைதடியினைச் சேர்ந்த யாழ்.கொடிகாமம் பஸ்சாரதியினை கைது செய்துள்ளனர். (செ-4)

## போரின்...

உலக ரீதியில் தற்பொழுது பெரும் பிரச்சினையாக மாறிக் கொண்டிருகின்றது என்பதே அது.

பூகோள வெப்பநிலை, ஓசோன் படலம் சிதைவடைதல், மண் அரிப்படைதல், பனிமலை உருகுதல், கடல்மட்டம் உயர்வடைதல் போன்ற பல பிரச்சினைகளை சர்வதேச சமூகம் அலசி ஆராய்ந்து வருகிறது.

சுற்றுச் சூழலை மதிப்பது என்பது எமது சுயநலத்தில் இருந்து விடுபட்டு எம்மைச் சுற்றி உள்ளவர்களையும் உள்ளவற்றையும் நாம் மதிக்கும் ஒரு மனோநிலையாகும்.

சூழல் மாசடைவு நின்று கொல்லும் தன்மையது. "அரசன் அன்று கொல்வான் தெய்வம் நின்று கொல்லும்" என்பது பழமொழி. சூழல் மாசடைவும் நின்று கொல்லுந் தன்மையது.

யாழ்ப்பாணத்தில் பெருகிக் கிடந்த குப்பை கூழங்களைத் திண்மக் கழிவுகளைப் போதியவாறு நாங்கள் அப்புறப்படுத்தாததால் தான் இருவரின் உயிர்கள் அண்மையில் டெங்குக் காய்ச்சலால் பறிக்கப்பட்டன.

அந்த இருவரின் இறப்புத்தான் எங்களை மும்முரமாகத் திண்மக் கழிவுகளை அப்புறப்படுத்தும் பணிகளில் கவனம் செய்ய வைத்தது.

சுயநலக் காரணங்களினால் எமது கடமைகளை நாம் செய்யாது விடுவது நாளடைவில் எம்மையே பாதிக்கும். இதை மனதில் வைத்து சுற்றாடல் சுத்திகரிப்புப் பணிகளில் ஈடுபடுங்கள். சூழல் மாசடைவதைத் தடுக்க முன்வாருங்கள் என தெரிவித்தார். (செ-11)

## நிஷா தேசாய்...

ணத்தை மேற்கொள்ளவுள்ள இவர், அரசாங்கத்தின் உயர்மட்டப் பிரமுகர்களை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார்.

போருக்குப் பின்னரான நல்லிணக்கம் மற்றும் பொறுப்புக் கூறல் தொடர்பில் கொழும்பில் பேச்சுக்களை நடத்திய பின்னர், இவர் வடமாகாணத்துக்கு பயணம் செய்வார் என எதிர்பார்க்கப்படுகிறது.

அத்துடன், யாழ்ப்பாணத்தில் வடமாகாண சபையின் உறுப்பினர்கள் மற்றும் பொது மக்களைச் சந்தித்துப் பேசவும் இவர் திட்டமிட்டுள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா இவ் வார முற்பகுதியில் இந்தியாவுக்கு மேற்கொண்ட விஜயத்தின் போது, இலங்கையில் ஜனநாயகத்திற்கான புதிய நம்பிக்கை ஏற்பட்டுள்ளது என்று குறிப்பிட்டிருந்த நிலையில், இலங்கையில் ஜனநாயகத்தை வலுப்படுத்துவது தொடர்பில் இந்த விஜயத்தின் போது இவர் வேண்டுகோள் விடுப்பார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர விரைவில் அமெரிக்காவுக்கு பயணம் மேற்கொண்டு இராஜாங்க செயலாளர் ஜோன் கெரியைச் சந்திப்பதற்கு முன்பாக இவரின் இந்த விஜயம் இடம்பெறுகின்றது.

இவர் கடந்தாண்டு பெப்ரவரி மாத முற்பகுதியில் இலங்கைக்கு முதற்தடவையாக விஜயம் செய்திருந்த போது, இலங்கையில் இடம்பெற்ற இறுதிக்கட்டப் போரின் போது மேற்கொள்ளப்பட்ட போர்க்குற்றங்கள் தொடர்பிலான விசாரணையில் போதிய முன்னேற்றம் காணப்படாமை தொடர்பில் சர்வதேசத்தின் அதிருப்தியை வெளிப்படுத்தியிருந்தார்.

இலங்கையில் ஆட்சி மாற்றம் ஏற்பட்ட பின்னர், இலங்கைக்கு விஜயம் செய்யும் அமெரிக்காவின் முதல் உயர்மட்டப் பிரதிநிதி இவர் என்பது குறிப்பிடத்தக்கது. (செ-11)

## 2014-ல் 234...

மாகாணத்தை சேர்ந்தவர்கள். எயிட்ஸ் நோய் தொற்றுக்கு உள்ளான 14 பேர் கடந்த வருடம் இறந்து போனதாகவும் அவர் கூறியுள்ளார்.

பாலியல் தொழிலாளிகள், போதைப் பொருள் ஊசிகளை பயன்படுத்துவோர், சுற்றுலா வழிகாட்டிகள், பீச் போய்ஸ் போன்றவர்கள் எயிட்ஸ் நோய் தொற்றுக்கு உள்ளாகும் ஆபத்தை எதிர்நோக்கியுள்ளனர்.

இவர்களுக்கு நோய் ஆபத்து பற்றி தெளிவுபடுத்தும் வேலைத்திட்டங்களை செயற்படுத்தியுள்ளதாகவும் மருத்துவர் லியனகே மேலும் தெரிவித்துள்ளார். (செ-11)

## கமலேஷ்...

நகர்வுகள் மற்றும் எதிர்காலத் திட்டங்கள் குறித்து தமது ஒத்துழைப்புகளை வழங்குவது தொடர்பில் கலந்துரையாடவுள்ளதாக கமலேஷ் ஷர்மா தெரிவித்துள்ளதாக அமைப்பு விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை, எதிர்வரும் நவம்பர் மாதம் மோல்டாவில் நடைபெறவுள்ள பொதுநலவாய அரச தலைவர்கள் மாநாடு தொடர்பில், அமைப்பின் தலைவரான ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடன் இணைந்து செயற்படுவதற்கு தாம் விரும்புவதாக கமலேஷ் ஷர்மா குறிப்பிட்டுள்ளதாக அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (செ-11)

## அதிகார பகிர்வு...

இது தொடர்பில் கருத்து வெளியிட்டுள்ள கனேடிய வெளிவிவகார அமைச்சர் ஜோன் பெயார்ட் மேலும் குறிப்பிடுகையில்,

இலங்கையில் அதிகாரங்கள் பகிரப்பட வேண்டியது மிகவும் அவசியமானது.

குற்றச் செயல்களுக்கு தண்டனை விதித்தல், அதிகாரங்களை பகிர்ந்தளித்தல், மெய்யான நல்லிணக்கத்தை ஏற்படுத்தல் போன்ற செயற்பாடுகளை கனடா தொடர்ந்தும் ஊக்குவிக்கும்.

இலங்கை மக்களினால் வழங்கப்பட்ட ஆணையை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன புரிந்து கொண்டு கடமையாற்றுவார் என நாம் எதிர்பார்க்கிறோம்.

2013-ம் ஆண்டில் குற்றப் பிரேரணையின் மூலம் பணி நீக்கப்பட்ட முன்னாள் பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்க மீளவும் பதவியில் அமர்த்தப்பட்டமை வரவேற்கப்பட வேண்டியது.

கடந்த மகிந்த ராஜபக்ஷ அரசாங்கம் பிரதம நீதியரசரை சட்டவிரோதமான முறையில் பணி நீக்கியதன் மூலம், சட்டம் ஒழுங்கு நிலைமையை மலினப்படுத்தியிருந்தது என அவர் குற்றம் சுமத்தியுள்ளார். மேலும் வடமாகாண ஆளுனராக சிவிலியன் ஒருவர் நியமிக்கப் பட்டமை வரவேற்கப்பட வேண்டியது என அவர் தெரிவித்துள்ளார். (செ-11)

## ஏப்ரல்...

தேசியக் கட்சி தொகுதி அமைப்பாளர்கள் சந்திப்பில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கமொன்றை உருவாக்க நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் தெரிவித்துள்ளார்.

இடைக்கால வரவு செலவுத் திட்டத்தில் மக்களுக்கு பாரியளவில் நன்மைகள் வழங்கப்பட்டுள்ளன.

அரசியல் ரீதியான பக்கச்சார்பின்றி அனைத்து தரப்பினரதும் பொருளாதார நிலைமைகளை மேம்படுத்துவதே எமது நோக்கம்.

வறிய மக்களிடமிருந்து வரியை அறவீடு செய்து அதில் கோடீஸ்வரர்கள் சுகபோக வாழ்க்கை அனுபவிப்பதனை ஏற்றுக் கொள்ள முடியாது.

சிறுபிள்ளைகளை தூக்கி வாரி முத்தம் கொடுக்கும் பழக்கம் தம்மிடம் இல்லாத போதிலும், சிறுவர்களின் எதிர்காலத்தை மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

நாட்டின் தற்போதைய நிலைமையில் மாற்றத்தை ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென அவர் குறிப்பிட்டுள்ளார். (செ-11)

# கர்நாடகாவை வீழ்த்தி இறுதிச் சுற்றுக்குள் நுழைந்த சென்னை

சி.சி.எல் கிரிக்கெட் தொடரில் கர்நாடகாவை பந்தாடி சென்னை ரைனோஸ் அணி இறுதிச்சுற்றுக்குள் நுழைந்துள்ளது.

தமிழ் சினிமா நடிகர்களின் சென்னை ரைனோஸ் அணி கேரளா, மராத்தி, மும்பை அணிகளை வீழ்த்தி ஹட்ரிக் வெற்றி பெற்றது.

இதனையடுத்து நேற்று ஹைதராபாத்தில் நடந்த அரையிறுதி போட்டியில் கர்நாடகா புல்டோசர்ஸ் அணியுடன் மோதியது.

முதலில் களமிறங்கிய கர்நாடகா அணி 20 ஓவர் முடிவில் 8 விக்கெட் இழப்பிற்கு 156 ஓட்டங்கள் எடுத்தது..

சென்னை அணி சார்பில் அணித் தலைவர் ஜீவா 3 விக்கெட்டும், விக்ராந்த், செல்வன் தலா 2 விக்கெட்டும் வீழ்த்தினர்.

அடுத்து களமிறங்கிய சென்னை அணி 19.1 ஓவரில் 2 விக்கெட் இழப்பில் 162 ஓட்டங்கள் எடுத்து வெற்றிபெற்று இறுதிச்சுற்றுக்குள் நுழைந்தது.

91 ஓட்டங்கள் எடுத்த விக்ராந்த் ஆட்டநாயகனாக தெரிவு செய்யப்பட்டார். (க)

# இலங்கை திரும்பும் அகதிகளின் வாழ்வுக்கு உத்தரவாதம் என்ன?

### இந்தியா கேள்வி

(சென்னை)

இந்தியாவில் தங்கியுள்ள இலங்கை அகதிகள் தாயகம் திரும்ப விரும்பினால், அவர்களின் வாழ்வாதாரத்துக்கு எத்தகைய உத்தரவாதத்தை இலங்கை அரசாங்கம் வழங்கும் என இலங்கைத் தூதரக அதிகாரிகளிடம் இந்தியா கேள்வி எழுப்பியுள்ளது.

இலங்கைத் தமிழ் அகதிகளைத் திருப்பி அனுப்புவது தொடர்பில் இந்திய மற்றும் இலங்கை அதிகாரிகள் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை புதுடில்லி ஜவஹர்லால் நேரு பவனில் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளனர்.

இச்சந்திப்பில் இந்திய அரசாங்கத்தின் தரப்பில் இந்திய வெளிவிவகார அமைச்சின் இலங்கை மற்றும் மாலைதீவு விவகாரங்களுக்கான மேலதிகச் செயலாளரான சுசித்ரா துரை தலைமையிலான அதிகாரிகளும், இலங்கை தரப்பில் புதுடில்லியில் உள்ள இலங்கை தூதரகத்தின் உயர் அதிகாரிகளும் பங்கேற்றனர்.

இதன்போது இந்தியாவில் தங்கியுள்ள இலங்கைத் தமிழ் அகதிகளைத் திருப்பி அனுப்பும் நடவடிக்கையில் எத்தகைய வழிமுறைகளைக் கடைப்பிடிக்கலாம் என்பது குறித்து இவ்விரு நாட்டு அதிகாரிகளும் விவாதித்தனர்.

இவர்களை அவர்களின் விருப்பத்தின் பேரில் திருப்பி அனுப்பும் போது, அவர்களுக்கு எத்தகைய வாழ்வாதார திட்டங்களை இலங்கை அரசாங்கம் ஏற்படுத்திக் கொடுக்கும் என இந்தியத் தரப்பில் கேட்கப்பட்டுள்ளது.

2012ஆம் ஆண்டு தயாரிக்கப்பட்ட ஆவணங்களின்படி இந்தியாவில் உள்ள இலங்கை அகதிகள் மற்றும் முகாம்களிலும், வெளியிலும் தங்கியுள்ள இலங்கை அகதிகளின் எண்ணிக்கை கொண்ட பட்டியலை இலங்கை தூதரக அதிகாரிகளிடம் இந்திய அதிகாரிகள் கையளித்தனர்.

இது குறித்தும் மீண்டும் இருதரப்பிலும் விவாதித்த பின்னர் தமிழகத்தில் உள்ள அகதிகள் முகாம்களுக்கு இக்குழுவினர் சென்று அங்கு வசிக்கும் இலங்கை அகதிகளிடம் தாயகம் திரும்புவது தொடர்பாக கருத்துகளைக் கேட்பதென்றும் இக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பேச்சுவார்த்தையில் தமிழக அரசின் பிரதிநிதி ஒருவரை அனுப்பும்படி, இந்திய வெளிவிவகார அமைச்சு வேண்டுகோள் விடுத்திருந்த போதிலும், தமிழக அரசின சார்பில் எவரும் கலந்து கொள்ளவில்லை.

இலங்கையில் தமிழர்கள் மீளக்குடியேறுவதற்கான சூழல் இன்னமும் ஏற்படவில்லை என்பதால், இந்தியாவில் தங்கியுள்ள தமிழ் அகதிகளை திருப்பி அனுப்பும் திட்டத்தை ஒத்திவைக்குமாறு தமிழக முதலமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியிடம் கடிதம் மூலம் கேட்டிருந்தார்.

இதனால், இந்தக் கூட்டத்தில் தமிழக அரசின் சார்பில் எவரும் பங்கேற்கவில்லை.

இந்நிலையில், இவ்விவகாரம் தொடர்பில் இலங்கை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அடுத்த மாதம் புதுடில்லி செல்லும் போதும், இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி மார்ச் மாதம் கொழும்பு செல்லும் போதும் மேலதிக பேச்சுக்கள் இடம்பெறும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (செ-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**எந்தவொரு நாட்டுக்குமான எந்த வகை விசா என்றாலும்....**

**STUDENT VISA – WORK VISA MIGRATION / PR**

UK, Australia, New Zealand, Switzerland, Germany, France, Denmark, Norway, Netherlands, China, Russia, Italy, Canada, America, Malaysia, Singapore & More

| | |
|---|---|
| A/L அல்லது O/L முடித்தவர்களுக்கு | பகுதிநேர வேலைவாய்ப்புடன் மாணவர் விசா & PR |
| பட்டதாரிகளுக்கு | வேலைவாய்ப்புடன் நிரந்தர குடிரிமை (PR) |
| தொழில் அனுபவம் உள்ளவர்களுக்கு | வெளிநாட்டு வேலையுடன் குடியுரிமை (PR) |

மற்றும் Visit Visa, Tourist Visa, Spouse Visa, Parent Visa, Medical Visits, Dependent Visa, Green Card & Visa Rejection Appeals

மேலதிக விபரங்களுக்கு www.sikaram.lk
info@sikaram.lk என்ற மின்னஞ்சலுக்கு
உங்கள் சுயவிபரக்கோவையை அனுப்பி பொருத்தமான வாய்ப்புக்களை அறிந்துகொள்ளுங்கள்

(த-9967)

SIKARAM
Education Abroad
Work, Migration & Visa Solutions

Sikaram (Pvt) Ltd.,
275-2/1 & 2/2, மணிக்கூட்டுக்கோபுர வீதி,
யாழ்ப்பாணம் (வைத்தியசாலை பின்புறம்)
Tel: 0773616798 / 021 222 00 11



**Dutch, Deutsch, French**



தூதரக பரீட்சைக்கான ஜேர்மன் - **Deutsch** (டொச்) மற்றும் நெதர்லாந்து - **Dutch** (டச்) உட்பட அனைத்து புதிய பிரிவுகளும் ஆரம்பமாகின்றது.

- French, Italian, English (A-1 Exam) வகுப்புகளும் நடைபெறுகின்றன.
- வடமாகாணத்தில் அரசாங்க அங்கீகாரம் பெற்று ஜேர்மன் கலாசார நிலையத்தின் அனுசரணையுடன் இயங்கும் ஒரே வெளிநாட்டு மொழிக் கல்வி நிறுவனம் எங்களுடையதே.
- Dutch மற்றும் Deutsch தூதரக பரீட்சைகளில் நீங்கள் சித்தியடைவதை தற்பொழுது நாம் 100% உத்தரவாதப்படுத்துகின்றோம்.
- Audio, Video வசதிகளுடன் குளிரூட்டப்பட்ட வகுப்பறைகள்.

(C-9986)

**Vivekananda Academy**

அனைத்து புதிய வகுப்புகளும் திங்கட்கிழமை ஆரம்பமாகும்.

221/1, மின்சார நிலைய வீதி யாழ்ப்பாணம்.

(Gov. Reg.No: W/A 76795)

Tel: 0213216928, 0774842464 ,0212220393



வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532


## நாமல் பயன்படுத்திய...

அதிநவீன சொகுசு பஸ் வண்டிகள் தனிப்பட்ட தேவைகளுக்காகவே பயன்படுத்தப்பட்டமை அம்பலத்திற்கு வந்துள்ளது.

பாராளுமன்ற உறுப்பினர்களான நாமல் ராஜபக்ஷ மற்றும் சஜின் வாஸ் குணவர்தன ஆகியோர் தமது சொந்த தேவைகளுக்காக பயன்படுத்தி வந்த அதி நவீன சொகுசு பஸ் வண்டிகள் இரண்டு நேற்று முன்தினம் கைப்பற்றப் பட்டுள்ளன.

வெளிவிவகார அமைச்சின் போக்குவரத்துப் பிரிவின் கீழ் இந்த சொகுசு பஸ் வண்டிகள் குத்தகைக்கு எடுக்கப்பட்டன.

இருந்த போதும் குறித்த பஸ் வண்டிகள் அமைச்சில் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கவில்லை என வெளிவிவகார அமைச்சின் அதிகாரிகள் தெரிவித்தனர்.

அமைச்சின் போக்குவரத்துப் பிரிவு மாதாந்தம் இரண்டு பஸ் வண்டிகளுக்கும் 18 இலட்சம் ரூபாயை குத்தகையாக வழங்கி வருகிறது. அமைச்சின் கீழ் பதிவு செய்யப்பட்ட மற்றும் இயங்கும் வாகனங்கள் தொடர்பில் ஆராய்ந்த போதே அமைச்சில் எவரும் கண்டிராத இந்த பஸ் வண்டிகள் குறித்து கேள்வி எழுப்பப் பட்டன.

அதனைத் தொடர்ந்து இரண்டு சாரதிகள் இந்த பஸ் வண்டிகளை வெளிவிவகார அமைச்சு வளாகத்தில் நிறுத்திச் சென்றதாகவும் அங்கிருந்த உயரதிகாரி ஒருவர் கூறினார்.

பொதுநலவாய உச்சி மாநாடு கொழும்பில் நடத்தப்பட்டது முதல் இன்று வரை மாதாந்தம் 18 இலட்சம் ரூபாய் குத்தகையாக வழங்கப்பட்டு வருகிறது.

இது தொடர்பில் நாமல் ராஜபக்ஷவிடம் கேட்ட போது இது பற்றி தனக்கு தெரியாது என மறுத்துள்ளார். சஜின்வாஸ் குணவர்த்தனவை விசாரணை செய்யும் படி அவர் தெரிவித்துள்ளார். (செ-11)


**வேலையாள் தேவை**

யாழ் நகரிலுள்ள தனியார் வைத்தியசாலைக்கு
18 வயதுக்கு மேற்பட்ட தகுதிவாய்ந்த
பெண் வரவேற்பாளர் மற்றும் கணக்காளர் தேவை.
க.பொ.த உயர்தரத்தில் சித்தியெய்திய
ஆங்கிலம் பேசத் தெரிந்தவர்கள் மட்டும்
சுயவிபரக் கோவையுடன்
**02.02.2015 காலை 10 மணிக்கு**
**இல. 514/18, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்**
எனும் முகவரிக்கு நேரில் வருகை தரவும்.

-நிர்வாகம்

(9282)



SPEED LANKA EXPRESS Courier

**வெளிநாடுகளுக்கான**

தபால் பொதி விநியோக சேவை



(த-9981)

- உள்நாட்டு, வெளிநாட்டு துரித தபால் பொதிகள் சேவை
- உங்கள் இல்லங்களில் இருந்தவாறே அனுப்பும் வசதி
- நிர்ணயிக்கப்பட்ட குறைந்த கட்டணம்
- அனுப்பும் பொதிகளுக்கான உத்தரவாதம்
- சர்வதேச விமான பயண சீட்டுகளை பெற்றுக்கொள்ளலாம்

**Speed Lanka Express (Pvt) Ltd.**

135, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

தொ.பே - 0772931062, 0776217926

www.speedlanka.net



பிறிண்டிங் துறையில் 15 வருட சிறந்த அனுபவமுள்ள முகாமைத்துவத்தின் கீழ்
யாழ் மக்களுக்கு சிறந்த பிறிண்டிங் சேவையை வழங்கும் நோக்குடன்

**புதிதாக ஆரம்பிக்கப்படுகின்றது.**

**வடக்கில் முதற்தரமான பிறிண்டிங் தொழிற்சாலை**

# பிறிண்ட் மாஸ்ரர்

ஓவ்செற் & டிஜிற்றல் பிறிண்டிங்

(த-9966)

**PRINT Master**

Let's print the best

**OFFSET and DIGITAL PRINTERS**



**உங்கள் தெரிவு இந்நிறுவனமே!**

- அதி விரைவாக அச்சிடும் நவீன ரக இயந்திரங்கள் மூலம் மிகத்துல்லியமான அச்சுப்பதிப்பு.
- குறைந்த விலையில் உங்கள் எண்ணத்திற்கேற்ப தரமான படைப்புக்களைப் பெற்றிடும் வாய்ப்பு.
- வாடிக்கையாளர்களுக்கு பூரண ஒத்துழைப்பு வழங்கி வேலைகளை இலகுபடுத்துவதற்காக அர்ப்பணிப்புடன் செயற்படும் ஊழியர்கள்.
- மிகவும் தனித்துவமான முறையில் கணினி வடிவமைப்புக்களை மேற்கொள்ளக்கூடிய பல வருட முன்னனுபவமுள்ள வடிவமைப்பாளர்கள்.
- திருமண அழைப்பிதழ்கள் மற்றும் அனைத்துவிதமான அழைப்பிதழ்களின் சிறந்த தெரிவிற்கான காட்சியறை.

136, கே.கே.எஸ் வீதி,
குளப்பிட்டி சந்தி,
கொக்குவில்.

136, K.K.S. ROAD,
KULAPIDDY JUNCTION,
KOKUVIL.

☎ 021 205 3322

இவையனைத்தையும் ஒன்றிணைத்து விரைவான சேவையை வழங்கும் நிர்வாக கட்டமைப்பு


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுன் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 01.02.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org